கல்கி



KALKI 29.5.1966 35 காசு

பரபவ
வைகாசி - 16
மே - 29

கல்கி


பொருளடக்கம்

அட்டைப்படம் : யாத்திரை.

நினைவுத் திரையில்...

எதிரி விமானங்கள் சென்னை நகரின் பக்கம் தலை காட்டப் போவதேயில்லை - அப்படித் தலை காட்டினாலும் சென்னையைப் பிரதட்சிணம் செய்து நமஸ்கரித்து விட்டுத் திரும்பிவிடும் என்பது நமது நம்பிக்கை. என்றாலும் ஒரு வேளை எதிரி விமானங்கள் வந்து தாக்குவது என்று ஏற்பட்டால் அவற்றின் பிரதான இலக்குகள் ரயில்வே ஸ்டேஷன்களாயிருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும்போது கல்கி காரியாலயத்தின் அடையாளத்தைக் கொண்டு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனைக் கண்டுபிடிக்கும்படியான சௌகரியத்தைப் பகை விமானங்களுக்குக் கொடுக்க நாம் சிறிதும் விரும்பவில்லை. எனவே எழும்பூர் ஸ்டேஷனைக் கண்டுபிடிக்க முடியாமல் பகை விமானங்கள் திண்டாடட்டும் என்பதற்காக நமது காரியாலயத்தை வேறு இடத்துக்கு மாற்றி விருக்கிறோம். நமது புது விலாசம்: ஸ்லேடன் கார்டன்ஸ் சாலை, பூந்தமல்லி ஹைரோட், கீழ்ப்பாக்கம், சென்னை.

என்ன சேதி? கல்கி 16-2-42


பொம்மையைக் காட்டிப் பயமுறுத்துகிறார்!
தமிழகத்தில் காங்கிரஸின்
வோட்டுச் சாகுபடி
PK

மலர் 25 ❋ இதழ் 44



தாஷ்கெண்டில் விதைத்த விதை

ராஜாஜி

மே மாதம் 19-ஆம் தேதி யன்று ஸ்ரீமதி இந்திராகாந்தி அவர்கள்நடத்திய நிருபர் கூட்டத்தில் யுத்தப் பிரியர்களும், கம்யூனிஸச் சார்புள்ளவர்களும் கேட்ட கேள்விகளுக்கு அவர் மிகவும் சிறப்பான முறையில் பதிலளித்ததைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். பாகிஸ்தானுடன் எல்லா மட்டங்களிலும் பேச்சு வார்த்தை நடத்த இந்தியா தயாராக இருக்கிறதென அவர் கூறியுள்ளார். தாஷ்கெண்ட் பிரகடனத்தை அமுல் செய்வதற்கு இப்பேச்சு வார்த்தைகள் உதவ வேண்டியதே அவசியம் என அவர் கூறியிருக்கிறார். பாகிஸ்தான் தரப்பில் யுத்த முயற்சிகள் செய்யப் படுவதாகப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து மட்டுமே தாம் அறிவதாகவும், தமக்குத் தெரிந்த அளவில் காச்மீரத்தில் பாகிஸ்தானியரின் ஊடுருவல் இல்லை என்றும் பிரதமர் சொல்லியிருப்பது குறிப்பிடத் தக்கது.

தாஷ்கெண்டில் சமாதானத்துக்காக நடந்த போராட்டத்தில் வெற்றி கண்டோம். ஆனால் வெற்றியுடனே துயரகரமான விபத்தும் நிகழ்ந்து விட்டது. 1759ல் குவிபெக்கில் பிரிட்டன் வெற்றி பெற்றபோதே திறமிக்க சேனாதிபதி வுல்ஃபை இழந்தாற்போல், தாஷ்கெண்டில் அமைதிக்காகப் பெற்ற வெற்றியுடனே பாரத மாதா தனது அன்புக்குரிய உத்தமப் பிரதமர் லால்பஹாதூர் அவர்களை இழந்தாள். பிரிட்டிஷ் சரித்திரத்தில் வுல்ஃபின் மரணம் ஒரு ஜொலிக்கும் சம்பவமெனில், லால்பஹாதூரின் மரணமோ இந்திய சரித்திரத்தில் மட்டுமின்றி, உலக சமாதானம் என்ற மகத்தான வரலாற்றிலேயே ஒரு பொன்னேடாகும்.

இந்தியாவிலும் சரி, பாகிஸ்தானிலும் சரி, சில சிறுமதியாளர் இன்னமும் போரில் ஆசை வைத்திருக்கலாம். இவர்கள் போர்க்களத்தில் சண்டையிடுவதும், வெற்றி பெறுவதுமே புகழுக்குரியவை என்று கருதலாம்; தாஷ்கெண்டில் அடைந்த பெருமையைக் காணத் தவறலாம். அது எப்படியானாலும் தாஷ்கெண்டில் விதைக்கப்பட்ட வித்து ஆலமரத்தின் சிறிய வித்துப் போன்றது. பரம்பொருளின் வியாபகத்தைச் சுட்டும்போது ஆல வித்தில் பெரிய மரம் அடங்கியிருப்பதைத்தான் உபநிஷத ரிஷி சுவேதகேதுவுக்கு உவமை காட்டினர். தாஷ்கெண்டில் விதைக்கப்பட்ட சின்னஞ் சிறு விதையில் பாகிஸ்தான் — இந்தியா இரண்டு நாடுகளுக்குமிடையே பரந்து விரிந்து கிளை விட்டுக் கொண்டு தழைக்கக் கூடிய நட்பும் ஒத்துழைப்பும் அடங்கியுள்ளன. இந்த ஆலமரம் தெற்கு ஆசியா முழுவதற்கும் நிழல் தந்து அதன் பெருமையையும் சக்தியையும் வளர்க்கும். தெற்காசியா நாகரிக சமுதாயத்துக்கே ஒரு வலுவான நெடுமரமாக நிற்குமாயின் உலக நாடுகள் யாவற்றின் வியப்பையும், அன்பையும் பெறும். ஆசியாவில் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் வளர்க்க வேண்டிய இந்தியா — பாகிஸ்தான் ஆட்சித் தலைவர்களிடையே பெருத்த வேறுபாடு இருந்தது. இப்பகுதியில் ஜனநாயகத்தின் அழிவுக்கே இறுதியில் இட்டுச் செல்லக் கூடிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். இச்சமயத்தில்தான் தாஷ்கெண்ட் பிரகடனம் பிறந்தது. இப்போது நாம் நல்லெண்ணமும் ஒத்துழைப்புமுள்ள புதிய சகாப்தத்தைப் பிறப்பித்தால், காந்தியடிகள் சமாதான முறையிலேயே சுதந்திரம் பெற்ற அதிசயத்துக்கொப்பானதோர் அதிசய அத்தியாயத்தை வரலாற்றில் ஏற்படுத்துவோம். லால்பஹாதூர் அவர்களும் அயூப்கான் அவர்களும் தாஷ்கெண்டில் ஊன்றிய விதையை நாம் கருக விடுவோமா? அல்லது அதற்கு நீர் வார்த்து, அது முளைவிட்டு வளர்ந்து, பெரு மரமாக ஓங்கி உலகில் உள்ள எல்லா நன் மக்களின் விருப்பத்தையும் பூர்த்தி செய்ய வழி காண்போமா? இந்தப்

பாக்கியம் நமக்குக் கிட்டுமாறு விவேகத்தைப் பின்பற்றுவோமாக! தீயசக்திகள் நம்மைத் தற்கொலைக்கு அழைத்துச் செல்லாதவாறு காத்துக் கொள்வோமாக!

ஃ ஃ ஃ

நான் குறிப்பிடும் புகழுக்குரிய புதிய சகாப்தம் என்ன? இந்தியாவும் பாகிஸ்தானும் தமது பிரதேச உரிமைகளைக் காத்துக் கொள்வதும், இவ்விரு நாடுகளிடையே நல்லெண்ணம் நிலவுவதும் ஒன்றுக்கொன்று முரணல்ல என்று இரு அரசாங்கங்களும் உணர்ந்தால் அதன் விளைவிலேயே புதிய சகாப்தத்தைக் காண்போம்.

இவ்விருநாடுகளின் மதங்களின்மீது எவ்வித மோதலும் இன்றி, இரண்டின் தேசியப் பெருமிதத்துக்கும் முரண் இல்லாதவாறு, இரண்டும் கூடிப் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைத்தால் புதிய சகாப்தம் பிறக்கும். இவ்விரு நாடுகளின் உற்பத்தியில் போட்டியின்றி, ஒவ்வொரு நாடும் இயல்பாக எந்தப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமோ அவற்றின் உற்பத்தியை உயர்த்த நமது அறிவையும் உழைப்பையும் முற்றிலும் பயன் செய்து கொள்வோம். பரஸ்பரம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வோம். நம்மிரு நாடுகளிடையே வர்த்தகத் தடைகளும் சுங்கத் தடைகளும் இருக்க வேண்டியதில்லை. பண்டங்களும் மனிதர்களும் ஒரு நாட்டிலிருந்து மற்றதற்குச் செல்ல எவ்விதத் தடையும் வேண்டியதில்லை.

ஃ ஃ ஃ

என்னுடைய இந்தக் கருத்தை ஸ்ரீ ராம் மனோஹர் லோஹியா அவர்களும் ஆதரித்து இதேபோல் கோரியிருக்கிறார். வறட்டுப் பெருமையின் வசியக் குரலில் மயங்கி விபத்தைத் தேடிப் போகிறவர்கள் தவிர, தாய் நாட்டிடம் பற்று உடைய அனைவரும் இதைத்தான் விரும்புவார்கள்.

இந்தியா – பாகிஸ்தானிடையே மகத்தான ஒத்துழைப்பு இயக்கத்தைத் தொடங்குவோம். நாம் தோல்வியுற்றாலும் அது பெருமையே யாகும். வெற்றி பெற்றாலோ அற்புதம் சாதித்து விடுவோம். இதயபூர்வமாகப் பணி புரிந்தால் நாம் வெற்றியே காண்போம் என்று திண்ணமாக நம்புகிறேன். இந்த வெற்றியைக் கண்டு வானுலகத் தேவர்களும் மகிழ்ச்சி யடைவார்கள். உலக நாடுகளின் மக்கள் யாவரும் இதற்கு விழா எடுத்துக் கொண்டாடுவார்கள்.

என்ன சேதி?

அந்தமானில் கந்தனாலயம்

ஆசாரிய சுவாமிகள் ஜயந்தி

காங்கிரஸின் சாதனைகள்!

தமிழர் எங்கு சென்றாலும் தங்கள் தெய்வத்தை மறந்து விடுவதில்லை. ஈழமாயினும், பர்மாவாயினும், மலேயாவாயினும் தாங்கள் வாழுமிடத்தில் இறைவனுக்கு ஆலயம் எழுப்பி வழிபடுகின்றனர். அந்தமானில் உள்ள போர்ட் ப்ளேரிலும் இவ்வாறே முருகப்பெருமானுக்குத் திருக்கோயிலெழுப்ப அன்பர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். தொன்றுதொட்டுத் தமிழ்ப் பண்பு பரவிய நக்கவாரத்தில், குன்றுதோறும் நக்கப்பிரான் மகனுக்கு ஆலயம் அமைவது மிகவும் பொருத்தமேயன்றோ? இரண்டு லட்சம் ரூபாய் செலவில் எழுப்பப்படவிருக்கும் இவ்வாலயத்துக்குப் பெருமக்கள் நிதி தந்து ஆறுமுகன் அருள் பெறவேணும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: Treasurer, Sri Subramania Swami Devasthanam, Aberdeen Bazaar, Port Blair, Andamans.

ஃ ஃ ஃ


ஸ்ரீ காஞ்சி சங்கராசாரிய சுவாமிகளின் எழுபத்திமூன்றாவது ஜன்மதினம் ஜூன் 3ந் தேதி நிகழ்கிறது. இதை யொட்டி ஸ்ரீ சங்கர பக்தஜன சபையினர் மே 25லிருந்து ஜூன் 3ந் தேதி முடிய காஞ்சீபுரத்தில் ஒரு பெரு விழா ஏற்பாடு செய்துள்ளனர். சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள், ஹரிகதை, பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு, பஜனை, திருவீதி உலா யாவும் நடைபெறவிருக்கின்றன. புனித நினைவுகள் பெற ஒரு நல்ல வாய்ப்பு.

ஃ ஃ ஃ

தேர்தலில் காங்கிரஸோடு சேர்ந்து செயல்படுமாறு ஸ்ரீ காமராஜ் அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்க மறுத்துவிட்ட பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ கோரே அவர்கள் கூறியிருப்பதாவது:

''இலாவாரும் நிலையின் விளிம்பில் உள்ள பொருளாதாரம், உணவுப் பொருட்களின் நிரந்தரப் பஞ்சம், தர்ம உணர்வின் நாசம், ஏழை பணக்காரரிடையே உள்ள ஏற்றத் தாழ்வின்பெருக்கம், ஆபத்துக்களை முன்கூட்டி உணர்ந்து செயலாற்றுவதற்குத் திறமையின்மை — சுருக்கச் சொன்னால் இவையே காங்கிரஸின் சாதனைகள்.''

எல்லா அம்சங்களையும் சுருக்கமாகப் பளிச்சென்று கூறிவிட்டார் ஸ்ரீ கோரே.



ராஜாஜியின் கருத்துக்கள்

★ வரவேற்கத் தக்க செய்தி

★ பாதுகாப்புச் சட்டம்

★ டி. டி. கே.யின் பேச்சு

★ பூச்சாண்டி காட்டுகிறார்!

★ வானொலிக்கு விடுதலை

நான் மிகவும் முக்கியமானதாகவும், வரவேற்கத் தக்கதாகவும் கருதும் ஒரு செய்தி வருமாறு:

> சூயஸுக்குக் கிழக்கேயுள்ள நாடுகளுக்கும் இனி பிரிட்டன் தயாரிக்கவிருக்கும் போலாரிஸ் ஸப்மரீன்களை அனுப்பலாம் என்பது குறித்து பிரிட்டிஷ் சர்க்கார் ஆலோசனை நடத்துவதாக 'லண்டன் டைம்ஸ்' கூறுகிறது.
>
> 'ருஷியா, அமெரிக்கா இரண்டுமே கூட்டாகச் சேர்ந்து இந்தியாவை அணு ஆயுதத் தாக்குதலிலிருந்து காக்க முன்வரவேண்டும் என்பது இந்தியாவின் விருப்பம். எனவே அது மேற்கத்திய அணு ஆயுத நாடுகளில் ஒன்றுமட்டும் அளிக்கும் பாதுகாப்பைப் பெற விரும்பவில்லை என்று தோன்றுகிறது. இருந்தபோதிலும் இந்தியாவுக்கு 'அணு ஆயுதக் காப்புக் குடை' தரவேண்டும் என்ற விருப்பத்தைப் பிரிட்டிஷ் பிரதமர் பலமுறை வெளியிட்டுள்ளார். இதிலிருந்தே மேற்கூறிய யோசனை பிறந்திருக்கலாம்.'

அணுக்குடை விஷயம் ஒருபுறமிருக்க, ஒரு நாடு நல்லெண்ணத்துக்கும் நட்புக்கும் ஒருதலைப்பட்சமாக நடவடிக்கை எடுக்கும் நற்பண்பு பிரிட்டனின் செயலால் வலுப்பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

ஒரு பெரிய மலை பிரசவ வேதனைப்பட்டு மூஞ்சூறைப் பெற்றதுபோல் மத்திய அரசாங்கம் பெரும்பாடு பட்டு, நெருக்கடிச் சட்டம் குறித்து ஒரு சிறிய மாறுதலைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தியா முழுவதிலும் பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகிப்பதன் முடிவான பொறுப்பை மத்திய உள்துறை இலாகா தன் வசம் வைத்துக் கொண்டிருக்கிறது. சில எல்லைப் பகுதிகளில் உள்ளூர் அதிகாரிகளே விரைவாக நடவடிக்கை எடுக்க முற்படுவார்கள். உள்துறை இலாகா பொறுப்பு ஏற்றதிலும் எவ்வித மாறுபாடும் தெரியாது. எல்லைகளில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலுமே நெருக்கடி நிலைமையை நீடிக்க வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார்கள் வற்புறுத்தியதற்கிணங்கவே, மத்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. எனவே இனிமேல் ராஜ்ய சர்க்கார்கள் பாதுகாப்புச் சட்டத்தை எப்படிப் பிரயோகிக்க எண்ணினாலும் அதற்கும் மத்திய உள்துறை இலாகாவின் ஒப்புதலைப் பெறுவது எளிது என்பது வெளிப்படை. தபால் முத்திரை குத்துவது போல் ராஜ்ய சர்க்கார்கள் சொல்வதற்குத் தில்லி ஒப்புதல் அளிக்கும். பாதுகாப்புச் சட்டப் பிரயோக விஷயமாக ராஜ்யசர்க்கார்கள் தில்லியுடன் நடத்தும் கடிதப் போக்குவரத்தும் ரகசியமாகத்தான் இருக்கும். இதையெல்லாம் பார்க்கும்போது கட்சிக் கட்டுப்பாடுகளிலிருந்து பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் விடுதலை பெற்றாலொழிய மக்கள் கருத்தின் சக்தி வெளிப்படாது என்றே தோன்றுகிறது.

ஃ ஃ ஃ

பதினொரு தொழில்களுக்கு லைசென்ஸ் நீக்கப்பட்டதை வரவேற்றோமல்லவா? 'இந்தத் தொழில்களுக்கும் அந்நிய மூலதனத்தை இறக்குமதி செய்துகொள்ளவேண்டுமாயின் — அல்லது அந்நியரின் உதவி பெற வேண்டுமாயின் — சர்க்காரிடமிருந்து அவசியமான அனுமதி பெற்றாக வேண்டும்' என்று தொழில் மந்திரி இலாகா தெளிவு படுத்தியிருப்பதாக இப்போது செய்தி வந்துள்ளது. நாம் அவசரப்பட்டு மகிழ்ந்து விட்டோமென்று தோன்றுகிறது.

ஃ ஃ ஃ

பத்திரிகைச் செய்திகள் முற்றிலும் சரியாக இருக்குமாயின், ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் மிக நன்றாகப் பேசுவதாகத் தெரிகிறது. யாருக்காகப் பேசுகிறார்? இன்றைய காங்கிரஸுக்காக அல்ல. ஏனெனில் நான் இவ்வளவு காலமாக எவற்றைப் பலமுறை கூறியும் சர்க்கார் செவிசாய்க்கவில்லையோ, அவற்றையே ஸ்ரீ டி. டி. கே. இன்று ஆதரித்துப் பேசுகிறார். ''தி. மு. க. வைத் தாக்கிப் பேச வேண்டும் — மற்றபடி நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லலாம்'' என்று அவரது நண்பரும் வழிகாட்டியும் உபதேசகருமான காங்கிரஸ் அக்ராசனர் கூறிவிட்டார் போலும்!

காங்கிரஸ் கட்சியில் சக்தியுடன் இருப்பவர்களின் பேச்சைத் தவிர மற்றவர்களின்

பேச்சுக்களுக்கு மதிப்பு இல்லை. இன்று டி. டி. கே. காங்கிரஸின் சக்தி பொருந்திய தலைவர்களில் ஒருவரல்ல.

ஃ ஃ ஃ

''எங்களை விட்டால் கம்யூனிஸ்ட்கள் ஆட்சிக்கு வந்து விடுவார்கள்'' என்கிறார் ஸ்ரீ டி. டி. கே. நான் எதிர்பார்த்த பிரசாரம் தான் இது. குழந்தைக்குப் பூச்சாண்டி காட்டுவது போல வாக்காளர்களுக்குப் பயம் காட்ட இந்தப் பிரசார மந்திரத்தைத் தயாரித்திருக்கிறார்கள். சென்ற தேர்தலில் தி. மு. க.வினர் 50 பேரும், கம்யூனிஸ்ட்களில் இரண்டே பேரும் தமிழக சட்ட சபைக்குத் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதை வாக்காளர் மறப்பதற்கில்லை. காங்கிரஸ் தனது பலத்திலேயே நிற்கட்டும்; 'நாங்கள் இல்லாவிடில் கம்யூனிஸ ஆட்சி வந்துவிடும்' என்று பயம் காட்டிப் பலம் பெற வேண்டியதில்லை.

ஃ ஃ ஃ

வரி போடுவதில் விற்பன்னராக இருந்தவர் இப்போது பதவியிலிருந்து விலகிக் காங்கிரஸ் பிரசாரம் செய்யும்போது, தாம் வரிகளைக் குறைக்க விரும்புவதாகப் பேசுகிறார். 'வரிகளை அடியோடு நீக்கிவிட முடியாது; என்றாலும் என்னைப் பொறுத்தமட்டில் எவ்வளவு அதிகபட்சத்துக்கு இயலுமோ அவ்வளவுக்கு வரிகளைக் குறைக்க வேண்டும்' என்கிறார். காங்கிரஸின் முன்னாள் பிரமுகர் இவ்வாறு கூறுவதால் இதுதான் ஆளும் கட்சியின் கொள்கை போலும் என்று வாக்காளர்கள் நம்பிவிடக் கூடிய ஏது நம் நாட்டில் இருக்கிறது.

ஃ ஃ ஃ

மந்திரி இலாகா ஒன்றோடு இணைக்கப்பட்ட அரசாங்க அலுவலக அங்கமாயிராமல் சுதந்திரமான ஒரு நிறுவனமாகவே அகில இந்திய ரேடியோ இயங்க வேண்டும் என்று ஸ்ரீ ஏ. கே. சந்தா அவர்கள் வலியுறுத்தியுள்ளார். பொதுமக்களுக்கு அறிவு பரப்பும் சாதனங்களைக் குறித்த குழுவின் தலைவர் இவரே. கடுமையான அதிகார வர்க்கக் கட்டுப்பாடுகளிலிருந்தும், காலத்துக்கொவ்வாத விதிமுறைகளிலிருந்தும் வானொலி இலாகாவை விடுவிக்காவிடில் அது தனது நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் வளர முடியாது என்பது ஸ்ரீ சந்தாவின் கருத்து. 'தேசம் முழுவதற்கும் பொதுவான தன்மை படைத்ததாகவே ஒலிபரப்பு அமைய வேண்டும்; தேசிய இலட்சியங்களையே அது வெளியிட வேண்டும். அரசியல் மாறுபாடுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் அதை ஆட்படுத்தக் கூடாது. சர்ச்சைக்குரிய விஷயங்களில் வானொலி இலாகா எவ்வித மனச்சார்பும் காட்டலாகாது' என்றெல்லாம் அவர் கூறுகிறார். ஒலிபரப்புக்களைக் கேட்பதற்கு வசதிகளைப் பெருக்காமல் ஒலிபரப்புக்களை மட்டும் பெருக்குவதில் பொருளில்லை என்கிறார் அவர். ''ஒலிபரப்பு நிலையங்களின் சக்தியைப் பெருக்குவதிலேயே வானொலி இலாகா பூரணமாக ஈடுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது. இதைவிட முக்கியம் மக்கள் வாங்கக் கூடிய விலையில் டிரான்ஸிஸ்டர் பெட்டிகள் கிடைக்கச் செய்வதே'' என்று ஸ்ரீ சந்தா கூறியுள்ளார்.



செய்திப் படங்கள்

புதுதில்லி பார்லிமெண்ட் மத்திய ஹாலில் மே மாதம் 8ந் தேதி ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேருஜியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

சென்னை ரோட்டரி கிளப் காலஞ்சென்ற ஏ. எம். எம். முருகப்ப செட்டியார் அவர்களது சேவையை மெச்சிக் கௌரவித்துள்ளது. பரிசை அவரது சகோதரர் திரு ஏ.எம்.எம். அருணாசலம் டாக்டர் லக்ஷ்மண சுவாமி முதலியார் அவர்களிடமிருந்து பெறுகிறார்.






சென்னை ராணுவ அதிகாரிகள் பயிற்சி முகாமில் சிறந்த பயிற்சியாளர்களுக்குப் பரிசுகளை லெப்டினண்ட்ஜெனரல் பி.பி. குமாரமங்கலம் வழங்கினார். குல்தீப் சிங்குக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

பம்பாய் மாதுங்காவில் உள்ள ஜோதி மன்றத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் 'கந்தபுராண விரிவுரை' நிகழ்த்தினார். மன்றத்தின் உபதலைவர் ஸ்ரீ ஆர். வி. மூர்த்தி நன்றி உரை கூறுகிறார்.








உள்ளம் கவரும் சுகந்தமுள்ள உன்னத டால்க்

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்து நாள் முழுவதும் நீடிக்கும் குளுமையையும், மனோ உல்லாசத்தையும் பெறுங்கள்



ஸ்நானத்திற்குப் பின் அனுபவமாகும் புத்துணர்ச்சி நீடித்து நிற்க, நாள் முழுவதும் நறுமணத்துடன் திகழ, பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள். இதமான வாசனையுள்ள இந்த டால்கம் பவுடர் வியர்வையை விரைவில் உறிஞ்சி, எல்லாக் காலநிலைகளிலும், உங்களை நாள் முழுவதும் குளுமையுடனும் மனோ உல்லாசத்துடனும் வைக்கும். பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்கம் பவுடர் குடும்பத்தினர் அனைவருக்கும் ஏற்றது.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

JWT-P-4596



சிவனருட் செல்வர்

4. தென் திசை செய்த மாதவம்

மனுநீதிச் சோழர் சரித்திரம் பெரிய புராணத்துக்குத் தொடர்புடையதன்று. அவர் அறுபத்திமூவரில் ஒருவரல்லர். எனினும் திரு ஆரூர் நகரின் சிறப்பைப் பற்றிச் சொல்லும் பொழுது அச் சரித்திரத்தைச் சொல்லுகின்றார் சேக்கிழார். நினைக்கும்பொழுதே நெஞ்சை நெகிழ்விக்கும் இச்சரித்திரத்தின் வாயிலாக, சோழவள நாட்டின் பெருமையை உணர்த்துகின்றார் சேக்கிழார் பெருமான்.

கணவனை இழந்த கண்ணகி பாண்டிய மன்னனிடம் வழக்குரைக்க வந்தபோது மனுநீதிச் சோழரின் பெருமையை எடுத்துச் சொல்லுகின்றாள்:

திருமுருக கிருபானந்தவாரியார்

" தேரா மன்னா! செப்புவதுடையேன்
எள்ளநு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி புகும் நீர் நெஞ்சுடத்
தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்
தோன் "

ஃ ஃ ஃ

பெரிய புராணத்தின் ஆதி, அந்தம், நடு எல்லாம் சுந்தரமூர்த்திகளின் சரிதம்தான். மற்ற சரிதங்கள் எல்லாம் அதிலே கிளைக் கதைகளாக வருகின்றன; புராணத்துக்குத் தலைவர் சுந்தரர். இவருடைய வரலாற்றின் இடையில் கோத்த நன்மணிகளே ஏனைய சிவனருட் செல்வர்களின் புண்ணிய வரலாறுகள்.

அருட்பெருஞ்சோதியரும், ஆதியும், நடுவும், ஈறும் அற்ற அநாதி மலமுத்தரும் திருவருளே வடிவாகக் கொண்டவரும், பிறப்பில்லாத பெருந்தகையும் முழுமுதற் பரம்பொருளும் ஆகிய சிவபெருமான், இமயவல்லியம்மையுடன் நவமணிப் பீடத்தின் மீது எழுந்தருள விளங்குவது திருக்கயிலாய மலை. அங்கு மூவருந் தேவரும் பாடிப் பரவுவர்; அரம்பையர் ஆடுவர்; நாரதாதி முனிகணங்கள் யாழினை முழக்குவர்; வேதவோசையும், சங்க நாதவோசையும், ஓதவோசை போல் எப்பொழுதும் முழங்கிக் கொண்டிருக்கும். எண்ணில்லாத கதிர்கள் ஒருங்கே உதித்தது போல் ஞான ஒளி வீசி எழில் மிகத் திகழ்வது அக்கயிலைமால்வரை. அக்கயிலை மலையின் கண் பல கோடி பூதங்கள் வாழும். ஒவ்வொரு பூதமும் வேண்டுமாயின் ஐம்பெருந் தொழிலும் செய்யும்; நீடுதேவர் நிலைகளை நாட்டும். அத்திரு மலையில் வேத்திரப்படை தாங்கத் திருநந்தி தேவர் காவல் புரிந்து கொண்டிருப்பார்; தேவர்களும், மூவர்களும், முனிவர்களும் கணங்களும் பெருமானை வழிபட அணி அணியாக வந்து காலங்கருதி நிற்பர்; துதித்து அருள் பெறுவர்.

அத்திருக்கயிலாய மலையின் அடிவாரத்தில், பத்தராய முனிவர் பல்லாயிரவரும், சுத்த யோகிகளும் சூழ உபமன்னியு முனிவர் இருப்பார். அவர் பாலுக்காக அழுதபோது பரமேசுவரன் பாற்கடலையே அவருக்குத் தந்தார். கண்ணபிரானுக்கு சிவதீட்சை தந்து உபதேசித்தவர் உபமன்யுவே. அளவற்ற மகிமையும் திருத்தொண்டும் பெற்றவர் அவர்.

உபமன்னியு முனிவர், முனிகணங்களுக்குச் சிவபெருமான் திருவருட் பெருமையைக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது ஆங்கே, ஆயிரம் சூரியருடைய ஒளி போல, ஒரு பேரொளி தோன்றியது. அதனைக் கண்ட அருந்தவ முனிவர்கள், 'இது என்ன அதிசயம்?' என்று கேட்டார்கள். உபமன்னியு முனிவர் சிவபெருமானைச் சந்தித்தார். அரனார் ஆணையால் ஆலால சுந்தரர் திருக்கயிலாயத்தினின்றும் நீங்கி, மண்ணுலகம் வாழத் தென்திசையில் திருஅவதாரம் செய்து விட்டு, மீட்டும் கயிலைக்கு எழுந்தருளி வருகின்றார் என்பதை உணர்ந்தார். உடனே எழுந்து சிரமீது கரமலர் கூப்பி, கண்ணருவி பாய அந்த ஒளியைத் தொழுதார். "ஐயனே! அரனாரையன்றிப் புறந் தொழாத தாங்கள் இங்கு இவ்வாறு இறைஞ்சுவது ஏன்?" என்று அருகிலிருந்த முனிவர்கள் உபமன்னியுவை வினவினார்கள்.

ஆர்வத்துடன் கேட்ட அருந்தவ முனிவர்களுக்கு உபமன்னியு முனிவர் கூறுவாராயினார்:

சிவபெருமான் ஒரு சமயம் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, திருக்கயிலாயத்தில் மணிமகுடங்கள் அணிந்து பட்டுப் பீதாம்பரம் உடுத்திக் கண்ணாடியில் பார்த்தார். கண்ணாடியில் அழகான அவரது பிரதிபிம்பம் தெரிந்தது. அச்சுந்தர வடிவை, "சுந்தரா வருக" என்று அழைத்தருளினார் சுவாமி. உடனே அக்கண்ணாடியினின்றும் சுத்தவித்யாமய சிவரூபம் மூன்று கண்களும், நான்கு தோள்களும் பிறை முடியுமாக வெளிப்பட்டுச் சிவபெருமானை வணங்கியது. மற்றைய உருத்திரர்களினும் சிறந்த அவ்வுருத்திரர், சுந்தரர் என்னும் திருநாமத்துடன், கோடி சூரியப் பிரகாசத்துடன் திகழ்ந்தார். சிவபெருமானுக்குத் திருமலர் எடுத்துத் திருமாலை தொடுத்துச் சூட்டுவார்; எம்பெருமானுக்கு அருகில் திருநீற்றுப் பாத்திரம் ஏந்தி நிற்பார். பிரம்மாதி தேவர்கள் கயிலைக்கு வந்தால், சிவபெருமான் அவர்களில் சிலருக்குத் திருநீறு கொடுப்பார்; சிலருக்கு நெற்றியில் பூசுவார். அவர்கள் எல்லாரும் சுவாமியை வணங்கி விட்டுப் போய் விடுவார்கள். சுந்தரர் மட்டும் எப்பொழுதும் சிவபெருமானுக்கு அருகிலேயே அணுக்கமாக இருப்பார்.

தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். எதிர்பார்த்தது அமிர்தம்; கிடைத்ததோ ஆலகால விஷம்.

அதைக் கண்டதும் எல்லாரும் ஓடினார்கள். எல்லோருக்கும் முந்தி ஓடினான் தேவேந்திரன். ''ஓடாதே! ஓடாதே!'' என்று சொல்லிக் கொண்டே ஓடினார் பிரம்மா. எல்லாத் தேவர்களும் கயிலாயத்துக்குப் போனார்கள். 'அரகர மகாதேவா!' என்று முழக்கமிட்டார்கள். சிவபெருமான் பெரியவர். அவரை விடப் பெரியது அவரது திருநாமம். அத்திருநாமத்தைக் கேட்ட எம்பெருமான், ''தேவர்களை யெல்லாம் உள்ளே அனுப்பு'' என்று நந்தி யெம்பெருமானுக்கு உத்தரவிட்டார். அதன்படி அனை



வரையும் சிவபெருமானிடம் அனுப்பி வைத்தார் திருநந்திதேவர். தேவர்கள் சிவபெருமானைக் கண்டதும் முறையிடத் தொடங்கினார்கள். ''சுவாமி! ஆலகால விஷம் தாங்க முடியவில்லை. காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள். ''அவ்விடத்தை இவ்விடத்துக்குக் கொண்டு வா!'' என்று சிவபெருமான் சுந்தரர்க்கு உத்தரவிட்டார். அதனைக் கொண்டு வந்தார் சுந்தரர். அதனால் ஆலால சுந்தரர் எனப் பெயர் பெற்றார். சுந்தரரின் சுந்தர வரலாற்றை இனிப் பார்ப்போம்.

சுந்தரர் மலர் பறிக்கத் திருநந்த வனம் சென்றார். உமாதேவியாரின் பாங்கிமார்களான கமலினி, அநிந்திதை என்ற இருவரும் மலர் பறிப்பதற்காக அதே சமயத்தில் திருநந்த வனம் சென்றிருந்தார்கள். அப்பெண்களைக் கணநேரம் விரும்பிப் பார்த்தார் சுந்தரர். அவ்வாறு தாம் விரும்பிப் பார்த்தது பெரும் பிழை என்று உணர்ந்த சுந்தரர், உடனே பஞ்சாக்ஷரம் சொல்லித் தண்டனிட்டுச் சிவபெருமான் திருவடியில் மலர் மாலையைச் சாத்தினார்.

''சுந்தரா! நந்தவனத்தில் என்ன நடந்தது?'' என்று கேட்டார் சிவபெருமான்.

குற்றத்தை யாரும் அவ்வளவு சுலபமாகத் தம் மீது போட்டுக் கொள்ள மாட்டார்கள். ஆனால், சுந்தரர் மறைக்கவில்லை.

''சுவாமி! தவறு செய்துவிட்டேன். திருநந்தவனம் வந்த பெண்களை ஒரேயொரு விநாடி விரும்பிப் பார்த்து விட்டேன்'' என்றார்.

வேண்டுவார் வேண்டுவதே தருகின்றவர் அன்றோ சுவாமி? ''சுந்தரா! இது காமனைத் தகனம் செய்த இடம். எனவே, நீ அந்தப் பெண்களுடன் இங்கே வாழ்வதற்கில்லை. ஆகவே, பூவுலகில் மாதவம் செய்த தென்திசை சென்று அந்தப் பெண்களுடன் சில காலம் வாழ்ந்து வரக் கடவாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினார் சிவபெருமான்.

மனைவியைத் தவிர மற்ற மங்கையரை விருப்பத்துடன் பார்க்கக் கூடாது. கயிலாயத்திலிருந்து அப்படிப் பார்த்த ஒருவர் பூலோகம் வர நேர்ந்ததென்றால், இங்கிருந்து பார்ப்பவர் எங்கே போவது?

''ஐயனே! நான் பூலோகத்தில் மையல் கொள்கின்ற பொழுது தடுத்தாட்கொள்ள வேண்டும்'' என்று சுந்தரர் பெருமானிடம் வேண்டிக் கொண்டார்.

புண்ணிய ஆன்மாக்கள் மேலுலகில் புண்ணியம் முடிந்தபின் ஒளி வடிவமாகப் பூலோகம் வருவார்கள். இதைத்தான் நட்சத்திரம் விழுகின்றது என்று கூறுகின்றார்கள். இப்படியாகச் சுந்தரரின் ஆன்மா பூலோகம் வந்தது.

சுந்தரர் போன ஜன்மத்தில் கயிலாயத்தில் இரண்டு பெண்களை ஏன் விரும்பிப் பார்த்தார்?

எல்லோரும் சிவபெருமானையே பாடினார்கள். திருத்தொண்டர்களைப் பாடுவது எப்படி? திருக்கயிலாய மலையில் சிவபெருமானுடைய அருகில் திருநீற்றுக் கோவையைத் தாங்கி நிற்கும் பெரும் பேறு பெற்ற இவரைக் கொண்டு திருத்தொண்டர்தொகை பாடுவிக்கக் கருதினார் பரமன். காரணமின்றிக் கயிலையினின்றும் சுந்தரரை மண்ணுலகுக்கு அனுப்புதல் கூடாதன்றோ? ஆதலால், ஆலாலசுந்தரரது கருத்தினையும் கண்களையும் அநிந்திதை, கமலினி எனும் இரு மாதர்மணிகளின் மீது செலுத்து



வித்தருளினார். காமனை எரித்த ஞான பூமியில் காம எண்ணம் உண்டாகா தன்றோ? நுட்பமாக நுனித்து உணராதார் சுந்தரர் காமுற்று நோக்கினர் என்பர். காமதகனம் நடந்த இடத்தில் காமத்துக்கு வலிவு ஏது? கண்ணுதற் கடவுளது திருவருள் அங்ஙனந் தூண்டியது. மாதவஞ் செய்த தென்திசை வாழவும், தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரவும் போதுவார் அவர் மேல் மனம் நோக்கினார். ''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே!'' — சேக்கிழார் பெருமான் இக்கருத்தை இனிது கூறுகின்றார் :

மாதவஞ் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத்திருத்தொண்டத் தொகை தரப்
போதுவாரவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியிற் கண்ணினார்.

எத்துணைப் பெரியவர்களேயாயினும் மாதர் மேல் மனம் வைத்தவர் தமது உயர்நிலையினின்றும் தாழ்வுறுவர் என்பதனையும் எம்பெருமான் சுந்தரர் வாயிலாக உணர்த்துகின்றார்.

சுந்தரர் அவதரித்த இடம் திருமுனைப்பாடி. தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பண்ணுருட்டி ரயில் நிலையத்திலிருந்து மேற்கே உளுந்தூருக்குப் போகும் வழியில் பதினொரு மைல் சென்றால் திருநாவலூர் என்ற தலம் இருக்கிறது. இந்தத் தலம் உள்ள நாடு திருமுனைப்பாடி நாடு. சோழ வளநாட்டினுக்கும் தொண்டை நாட்டினுக்கும் இடையே உள்ள நடுநாட்டின் கிளையாக விளங்குவதுதான் திருமுனைப் பாடி நாடு.

சிவபெருமான் தலையில் கங்கை இருக்கின்றது. தமது தலையை அவ்வளவு குளிர்ச்சியாக வைத்திருக்கிறார் என்று பொருள். தலை எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்க வேண்டும். தலையில் மதி (அறிவு) இருக்க வேண்டும் மனிதர்களுக்கு. சுவாமியின் தலையிலும் மதி (சந்திரன்). சந்திரனுக்கும் பாம்புக்கும் பகை. பகைவர்களாக இருக்கின்றவர்களைத் தலையில் ஒன்றாக வைத்துக் கொண்டாராம் சுவாமி. ''மங்கையர் வதன சீதமதி இருமருங்கும் ஓடிச் செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு'' என்கின்றார் சேக்கிழார். அங்குள்ள மங்கையர்களின் மீன் போன்ற கண்கள் காதை நோக்குகின்றனவாம். திருமுனைப் பாடியில் அழகான பெண்கள் இருக்கின்றார்கள்; அவர்களின் கண்கள் நீண்டவை. அந்த நீண்ட கண்கள் வந்து வந்து செவிகளை நோக்குகின்றனவாம்.

கயிலாயத்தில் இரண்டு பெண்களை விரும்பிப் பார்த்ததால்தானே சுந்தரர் பூவுலகில் அவதாரம் செய்தார்? அவரது கதையைப் பாடும் பொழுது எடுத்த எடுப்பிலேயே பெண்களைப் பற்றிச் சொல்லுகின்றாரே, ஏன்? பள்ளிகள், கோயில்கள் இருக்கின்ற நாடு திருமுனைப்பாடி நாடு என்று சொல்லக் கூடாதா?

இதற்கு விடை தேடுவோம். முகத்தில் ஐந்து பேர்கள் குடியிருக்கின்றார்கள்: மெய், வாய், கண், நாசி, செவி.

இந்த ஐவரில் மூத்தவர் காது. கண் கடைக்குட்டி. இந்தக் கண் காதைப் பார்த்து, ''காதண்ணே! கோயிலில் ஆராதனை செய்தரும் தட்டை என்னிடம்தான் நீட்டுகிறார்கள். உன்னிடம் காட்டுவதில்லை. பூமாலை போட்டால் கண்களில்தான் ஒற்றிக் கொள்ளுகிறார்கள்; காதிலே ஒற்றிக் கொள்வதில்லை. பிரியமானவர்களைக் கூப்பிடும் போதும், 'கண்ணு! கண்ணு!' என்றுதான் கூப்பிடுகிறார்கள். 'காதே! காதே!' என்று அழைப்பதில்லை. ஆகவே, எனக்குத்தான் பெருமை'' என்று கூறிக் கொண்டது.

''தம்பி! நீ இளம் பிள்ளை. அவசரப்படுகிறாய். சொல்லுகிறேன், — கேள். பிறந்தவுடனே காதுதான் எல்லாவற்றையும் கேட்கும். சிறிது நேரத்துக்குப் பின்தான் கண் திறக்கும். அது மட்டுமன்று. கண் இல்லாதவன் வித்துவானாக இருக்கலாம். காது இல்லாதவன் வித்துவானாக இருக்க முடியாது. அந்தகக் கவி வீரராகவ முதலியார், மாம்பழக் கவி சிங்கநாவலர் ஆகியோர் கண் இல்லாதவர்கள்தான். ஆனாலும் பெரிய வித்துவான்கள். யாருக்குக் காது கேட்க வில்லையோ அவன்தான் பொதுவில் ஊமையாகவும் இருக்கிறான். காது குத்தும் கல்யாணம் வைதிகச் சடங்குகளில் ஒன்று. அது மாதிரி கண் குத்துகின்ற கல்யாணம் உண்டா? செவி இருந்த இடத்திலேயே இருந்து வேலை செய்யும். முதலாளி இருந்த இடத்திலிருந்தே வேலைக்காரர்களிடம் வேலை வாங்கலாம். கண் அந்தந்த இடங்களுக்குச் சென்று வரும். அது மட்டுமன்று. முதலில் ஆபத்து வருவது கண்ணுக்குத்தான். நாற்பது வயதிலேயே வெள்ளெழுத்து வந்துவிடும். செவிக்கு அப்படியில்லை. ஆகவே, தம்பி, எனக்கு மிகுந்த பெருமையுண்டு. அதனால்தான் அந்தணர்கள் அசுத்த

காலத்தில் பூணூலைக் காதில் சுற்றிக் கொள்கிறார்கள். ஒரு பொருளைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தால் கண் வலிக்கும். எழுதிக் கொண்டே யிருந்தால் கை வலிக்கும். சாப்பிட்டுக் கொண்டே யிருந்தால் வயிறு வலிக்கும். பேசிக் கொண்டே யிருந்தால் வாய் வலிக்கும். ஆனால், மணிக்கணக்கில் கேட்டுக் கொண்டே யிருந்தாலும் காது வலிக்காது. துன்பமின்றி இன்பம் நுகர்வது செவி ஒன்று தான். 'தோடுடைய செவியன்' என்றேயல்லவா தேவாரமும் தொடங்குகிறது?'' என்று காது கூறியது.

சுந்தரமூர்த்தி நாயனார் பூலோகத்தில் அவதாரம் செய்தார். எதற்காக அவதாரம் செய்தார்? தேவாரம் பாடுவதற்காக. இந்தத் தெய்வத் தமிழைக் கேட்கத் தவம் செய்தது காது. சுந்தரமூர்த்தி நாயனார் கண்ணால் பார்த்ததால்தானே பூலோகம் வந்தார்? ஆகவே, சேக்கிழார் பெருமான் கண்களைப் பாடியது பெண்களுக்காக அல்ல. தேவாரம் கேட்கக் கொடுத்து வைக்காத கண்ணும், கொடுத்து வைத்த காதும் எங்கே என்று பார்க்கின்றார். காதளவோடிய கண்களைக் கொண்ட மங்கையரைப் பார்த்தவுடன், ''சுந்தரமூர்த்தி நாயனாரின் தெய்வத் தமிழைக் கேட்க நீ கொடுத்து வைத்தாயே; நான் கொடுத்து வைக்கவில்லையே!'' என்று கண் ஏக்கத்துடன் காதைப் பார்த்தது போல் பாடி விட்டார்.

அப்படியென்றால் மங்கையர் என்று ஏன் சொல்ல வேண்டும் என்ற கேள்வி எழலாம். கேட்கின்ற வாய்ப்பு ஆண்களுக்கு அதிகம்; பெண்களுக்கு அந்தகைய வாய்ப்பு குறைவு. அவர்கள் பேசுவது அதிகமே யொழியக் கேட்பது குறைவு என்று வேடிக்கை செய்வதுண்டு. பிள்ளைப் பேறு, குழந்தைகளைக் கவனித்தல் என்று அவர்களுக்குப் பல வேலைகள். ஆகையால், கேட்கும் வாய்ப்பு அவர்களுக்குக் குறைவு. எனவே, அவர்களைக் குறிப்பிட்டுச் சொன்னால் விசேஷம்தானே?

திருமுனைப்பாடி நாடு என்பது நடு நாடு. சோழ வள நாட்டினுக்கும் தொண்டை நாட்டினுக்கும் இடையே இருப்பதால் மட்டும் ''நடு'' நாடு என்று பொருள் கொள்ள வேண்டா. சேர, சோழ, பாண்டியர்க்கு நடுநிலையாக இருந்த நாடு அது. அந்த நாட்டிலே மூவேந்தர்களும் தங்கள் படைகளைக் கொண்டு வந்து நிறுத்தி வைப்பார்கள்.



புதிய கார்
புதிய மனைவி!

பாரிஸ் நகரச் சாலைகளில் எண்ணற்ற கார்கள் எந்த நேரமும் சென்று கொண்டிருக்கும். அந்நகரில் யாராவது காரைக் கொடுத்து ஓட்டச் சொன்னால், ஒன்று அவன் ஒரு புதுக் கார் வாங்க ஆசைப்படலாம்; அல்லது புதிய மனைவி ஒருத்தியை அடைய அவன் திட்டமிட்டிருக்கலாம்.

(சோமலெயின் 'பிரான்சு' என்னும் நூலிலிருந்து எடுத்தனுப்பியவர்: —விரி)

அதனால் திருமுனைப்பாடி நாடு என்று வழங்கப் பட்டது. மிகவும் பெருமை பெற்ற அத்திருநாட்டிலே தெய்வநலமும், சைவநெறியும் ஏனைய வளமும் பொருந்தி விளங்கிய தலம் திருநாவலூர். அதில் பொதுவாக, ஏனைய மரபினர்களும், சிறப்பாக ஆதி சைவர்களும் இனிது வாழ்ந்தனர். சிவபெருமானை முப்போதும் திருமேனி தீண்டிச் சிவகாம முறைப்படி வழிபாடு செய்யும் ஆதி சைவர் திருமரபில் சடையனார் என்பவர் தோன்றினார். அவர் இளமையிலிருந்தே எல்லா நற்குணங்களும் தாமே அமையப் பெற்றவர். கற்பு நலமிக்க இசை ஞானியார் என்ற அம்மையார் அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்திருந்தனர்.

மாதொரு பாக னார்க்கு
வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி
மேம்படு சடைய னாருக்(கு)
ஏதமில் கற்பின் வாழ்க்கை
மனைஇசை ஞானியார்பால்
தீதகன் றுலகம் உய்யத்
திருஅவ தாரம் செய்தார்

சுப்பிரமணியர் திரு அவதாரம் பற்றிக் கச்சியப்பர், 'ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய' என்று பாடுகின்றார். கச்சியப்பரின் பாட்டு, சேக்கிழார் பெருமானின் பாட்டைவிட இரண்டு மாற்றுக் குறைவு. முருகப் பெருமான் உலகம் உய்யத்தான் வந்தார் என்கிறார். சேக்கிழார் பெருமானார் சுந்தரர் ஜனனம் பற்றிச் சொல்கையில்,— ''தீதகன்று உலகமுய்யத் திரு அவதாரம் செய்தார்'' என்கிறார். என்ன தீது? அடியார் பெருமையை அறியாத பெருந்தீங்கு உலகில் இருந்தது. ஆகவே தொண்டர்களைப் பாடினார் சுந்தரர். பாற்கடலில் பனிமதி தோன்றியது.

(தொடரும்)

மலேசியா மாநாடு

அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மகாநாட்டுக்குத் தமிழக அரசும், மகாநாட்டு அமைப்புக் குழுவும் கலந்து சுமார் 90 பேர்களைப் பெருமக்களாகத் தேர்ந்தெடுத்திருந்தனர். ஆனால் அதில் பாதிப் பேர்கள்தாம் மகாநாட்டில் கலந்து கொள்ள முடிந்தது. காரணத்தைக் கேட்டால் சிலருக்குச் சினம் ஏற்படும். மற்றும் சிலருக்கோ சிரிப்பும் கலந்து பொங்கும். இந்திய அரசு புரிந்த திருவிளையாடல்தான் அது. இப்படி ஒரு மொழியினரின் மாநாட்டுக்கு இத்தனை பெயரைப் பெருமக்களாக அனுப்பினால் இது ஒரு முன்னிகழ் சான்று (Precedent) ஆகி மற்ற மொழியினரும் போட்டி போடத் தொடங்கி விடுவார்களாம். அப்புறம் நமது அந்நியச் செலாவணி இருப்புப் பாதிக்கப்பட்டு விடுமாம். ஆனதால் பன்னிரண்டு பேர் போனால்



மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான்

பற்றாதா? என்றெல்லாம் நமது மத்திய ஆட்சி சண்டித்தனம் செய்யத் தொடங்கி விட்டது. நமது மாநில ஆட்சி செய்த பகீரதப் பிரயத்தனத்தின் பயனாகத்தான் இந்த அளவிலாவது, (சுமார் 45 பேர்) மாநாட்டுக்குச் செல்ல முடிந்தது. இதற்காக நமது மாநில தலைமை அமைச்சர் பக்தவத்சலம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மலேயா சென்று திரும்பிய பின்னர்தான் இந்திய அரசின் அந்தரங்கத்தில் வேறோர் அச்சமும் இருந்திருக்கலாமோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. அந்நியச் செலாவணி இருப்புப் பாதிக்கப்படும் என்றதெல்லாம் உண்மையான காரணமா யில்லாமல் ஒரு வெறும் சாக்குத்தானோ என்றும் கருத வேண்டியிருக்கிறது. தமிழகத்திலிருந்து இத்தனை பேரறிஞர்கள், குறிப்பாக, கல்வித் துறையில் திருப்பணி புரிபவர்கள் — இவர்கள் யாவரும் எவ்வித அரசியல் கட்சிகளினும் தொடர்பு கொள்ளாதவர்கள் — சென்றால் அந்த நாட்டின் உண்மையான நிலையை நேருக்கு நேராகக் காண்பார்கள். எங்கும் சுறுசுறுப்பு; எங்கும் ஓர் எழுச்சி; எங்கும் தொழில்; எங்கும் ஒழுங்கு; எங்கும் அமைதி; எங்கும் சுத்தம்; எங்கும் அழகு; எங்கும் இன்பம் என்பதைக் கண்ணாரக் கண்டு கொள்வார்கள். "கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்" என்று அநுமன் வாய்மொழியாகக் கம்பன் காட்டினனே, அந்தப் பழைய இலங்கையின் அருமைப்பாடுகள் அனைத்தையும் மலேசியா இன்று கொண்டு விளங்குகிறது என்பதை உணர்வார்கள். ரேடியோ, டெலிவிஷன்,





[(மேல்) மலேயாவில் காட்டிலாகா அதிகாரி பூச்சிகளைப் பிடிக்கும் நெபன்தஸ் செடியைக்] காட்டிக் காட்டுகிறார். (கீழ்) மந்திரி வி. மாணிக்கவாசகம்.

சா. கணேசன் எம்.எல்.ஏ.



உதவிப் பிரதமர் துன் ஹாஜி அப்துல் ரஸாக்.

குளிர்பதனப் பெட்டி (Refrigerator) இல்லாத வீடு அதிகமில்லை. மக்களின் வருமானமும், வேலை வாய்ப்பும், வாழ்க்கைத்தரமும் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குள்ளே எத்தனை மடங்கு வளர்ந்து விட்டன என்பதையெல்லாம் தெரிந்து கொள்வார்கள். அப்புறம் சிந்தனைச் செல்வர்களான இவர்கள் காரணம் என்ன என்பதைக் கணித்தறிய மாட்டார்களா? பலரையும் கேட்பார்கள்; பலவற்றையும் படிப்பார்கள். புள்ளி விவரங்களையும் ஆராய்வார்கள். இதுதான் என்ற முடிவுக்கும் வருவார்கள். அப்புறம் கேட்க வேண்டுமா என்ன? இவர்களிடம் அறிவுச் சுடரைப் பற்றிக் கொள்ளும் மாணுக்கர் உலகம் முழுவதும் மெய்யறிவு பெறத் தொடங்கி விடும். அப்படி ஆனால் அது இன்றைய காங்கிரஸ் ஆட்சிக்குப் பெரியதொரு விபத்தாக அல்லவா ஆகிவிடும்? ஆகவேதான் இத்தகைய அறிஞர் கூட்டம் மலேசியா செல்வதை இந்திய ஆட்சி விரும்பவில்லையோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. அது போகட்டும்; எப்படியோ ஒரு பகுதிப் பேராவது செல்ல முடிந்ததே என்று சிறிது மன ஆறுதல் கொள்ளுவோம்.

மகாநாடு 16–4–66ல்தான் தொடங்கப் படவிருக்கிறது. இடையில் நான்கு நாட்கள் இருக்கின்றன. நமது பெருமக்கட் குழுத் தலைவரான திரு பக்தவத்சலமும் பெருமக்களில் மேலும் ஒரு பகுதியினரும் இன்னும் வந்து சேரவில்லை. 15–4–66ல்தான் வருவார்கள். அதுவரையில் நாடு நகரங்களைச் சுற்றிப் பார்க்கலாம் என்று புறப்பட்டோம்.

நாடு முழுவதும் போக்குவரத்துக்குத் தரை, நீர், ஆகாயம் முதலிய எல்லாப் போக்குவரத்து வசதிகளும் அருமையாக, செம்மையாக இயங்குகின்றன. விமானப் போக்குவரத்து வசதி எல்லா நகரங்களுக்கும் இருக்கின்றன. ரயில் வசதி மிக நன்ருக இருக்கிறது. ரோடு வசதியைப் பற்றி நம்மால் எண்ணவே முடியாத அளவுக்கு வளம் பெற்றிருக்கிறது. சொந்தக் கார்கள், டாக்ஸிகள், பஸ்கள் ஏராளம். நல்ல நல்ல கார்கள், அருமையான ரோடு, எனவே மிகப் பெரும்பாலானவர்கள் கார் பயணத்தையே மேற்கொள்வதில் வியப்பில்லை. நாங்களும் விமானச் சீட்டு கையில் உள்ள நிலையிலும் கார்ப் பயணத்தையே விரும்பி ஏற்ருேம். தினம் நூற்றுக் கணக்கான மைல் பயணம் செய்தாலும் அலுப்பே ஏற்படவில்லை. மேலும் வழியில் உள்ள பல கிராமங்களையும் நாங்கள் காண முடிந்தது. அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் எல்லா நவீன வசதிகளும் உள்ளன. தொலை பேசி இல்லாத கிராமமே இல்லை என்னலாம். சாலை, தபால், தந்தி,



மந்திரி வி. டி. சம்பந்தன்.

தொலை பேசி, மின்சாரம், ரயில், விமானப் போக்குவரத்து போன்றவைதாம் அரசாங்கத்தின் நிருவாகத்தில் இருக்கின்றன. வேண்டாதபடி அரசாங்கம் எல்லாவற்றிலும் தலையிடுவதில்லை. அரசாங்கக் கட்டுப்பாடும், தலையீடும் இல்லாமையால் அளவாலும்,

வடபோர்னியோக்காரர் மூங்கில் நீரை அருந்துகிறர்.



தரத்தாலும் பாலும் சிறந்து காணப்படுகின்றன. லீசென்ஸ், பெர்மிட், கோட்டா என்ற மும்மலம் அங்கு தலைதூக்கவில்லை. கூட்டுறவுத் துறையைக் கூட அரசாங்கம் சீண்டவில்லை. அதைக் கண்காணிப்பதுடன் நின்றுவிட்டது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! உதாரணத்துக்கு ஒன்றைத்தருகிறேன்.

மலேசியாவின் பொதுப் பணி — தொலைபேசித் துறைகளின் அமைச்சரான டான்ஸ்ரீ சம்பந்தம் ஒரு கூட்டுறவு நிறுவனத்தைத் தொடங்கி யிருக்கிறார். அதை நமது மூதமைச்சர் உள்பட பலரும் சென்று கண்டு மகிழ்ந்து வாழ்த்தி விட்டு வந்திருக்கிறார்கள். அது தோட்டத் தொழிலாளர்களின் நிறுவனம். ஒவ்வொரு தொழிலாளியும் நூறு இருநூறு என்று பணம் கொடுத்துப் பங்காளிகள் ஆகி யிருக்கின்றனர். அதற்கு அரசாங்கம் சட்டரீதியான உதவி செய்திருக்கிறதே யன்றி, பங்கு முதலோ அன்றிக் கடனோ கொடுக்கவில்லை. தொழிலாளர்கள் போட்டிருக்கிற பங்கு முதல் அளவுக்கு சார்ட்டர்டு வங்கி கடன் வழங்கியிருக்கிறது. இவற்றை முதலாகக் கொண்டு ஒரு பெரிய ரப்பர்த் தோட்டத்தை வாங்கித் தோட்டத் தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் உழைத்து நடத்தி வருகின்றனர். இப்படி அமைந்திருக்கும் இந்நிறுவனம், தன்னுடைய லாப நஷ்டங்களைத் தானே அனுபவிக்க வேண்டும். அரசாங்கப் பணம் இல்லாததால் அக்கறையும், பொறுப்பும் அச்சமுமே நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டுள்ளது.

இது போதும்; மேலும் இது பற்றி விளக்கம் செய்து கொண்டு போனேனானால், ஏதோ கட்சிப் பிரசாரம் செய்வதாக நினைக்கக்கூடும். இனி நாட்டின் அமைப்பைப் பார்ப்போம்.

மலேசியாவில் இன்று அடங்கியுள்ள பகுதி மூந்நாளில் மலேயா என்று பொதுவாகக் கூறப்படும் ஒரு தீபகற்பமும், சாரவாக், வட போர்னியோ பகுதிகளும் அடங்கும். மலேயா என்ற நாடு முன்னர் மன்னர் ஆட்சிக்குட்பட்ட ஒன்பது சமஸ்தானங்களாகவும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் (British Straits Settlements Colonies) என்ற அந்தஸ்தில் பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் என்று மூன்று பகுதிகளாகவும் ஆகப் பன்னிரண்டு பகுதிகளாக இருந்தன. நாடு விடுதலை பெற்றதும் பிரிட்டிஷ் முடியாட்சி நாடுகள் (British Crown Colonies) என்ற அந்தஸ்தில் இருந்த சரவாக் (Sarawak)வட போர்னியோ (North Borneo) என்ற இரு பிராந்தியங்களையும் சேர்த்து மொத்தம் பதினான்கு மாநிலங்களாக அமைக்கப்பட்டிருந்தது. சமீபத்தில் சிங்கப்பூர் மலேசியாக் கூட்டாட்சியிலிருந்தும் பிரிந்து தனியாட்சி யுடைய நாடாக ஆகிவிட்டதால் இன்று மலேசியாவில் பதின்மூன்று மாநிலங்களே இருக்கின்றன. அவை வடக்கிலிருந்து தெற்கில் வரிசையாக (1) பெர்லிஸ், (2) கெடா, (3) கெலாந்தான், (4) டிரெங்கானு, (5) பினாங்குத் தீவு, (6) பேரா, (7) பாஹாங், (8) செலாங்கூர், (9) நகரி செம்பிலான், (10) மலாக்கா, (11) ஜோஹோர், (12) சபா, (13) சரவாக். இனி இவற்றின் சுருக்கமான விவரங்களையெல்லாம் தெரிந்து கொள்ளலாம்:

பெர்லிஸ்: சுமார் 300 சதுர மைல் பரப்பே கொண்ட இங்கு சுமார் 1,00,000 மக்கள் வசிக்கிறார்கள். கங்கார் என்பது அதன் தலைநகர். இதன் கரைக்கு எதிரில் லங்காவி என்னும் சிறு தீவு ஒன்று இருக்கிறது. இங்கு கரும் பவளக் கொடி இருக்கிறது. இம்மாநிலம் நெற்பயிர் செய்வது. இதன் கடற்கரை கருமணற் பரப்பாக உள்ளது. இங்கு நந்நீர்ப் பொய்கை (Fresh water Lake) இருக்கிறது.

கெடா: முதலாம் ராஜேந்திரனால் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் வெற்றி கொள்ளப்பட்டதாக இலக்கியங்களிலும், சாசனங்களிலும் கூறப்படும் ''கடாரம்'' என்னும் நாடு இதுவே. மலேயாவின் நெற்களஞ்சியம் என்று போற்றப்படும் இங்கு கித்தா (ரப்பர்) தோட்டங்களுமுண்டு. சுமார் 3,700 சதுர மைல் பரப்புள்ள இங்கு சுமார் 8,00,000 மக்கள் வாழ்கின்றனர். அலோர் ஸ்டார் என்னும் நகரமே இதன் தலைநகர். 'தேசத் தந்தை' என்று எல்லோராலும் ஒருமுகமாகப் பாராட்டி மரியாதையும் அன்பும் செலுத்தப் பெறும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கெடா மாநிலத்தவரே. இந்த சமஸ்தானத்தின் ராஜபுத்திரர் ஆவார்.

கெலாந்தான்: சுமார் 5750 சதுர மைல் பரப்பும், சுமார் 6,00,000 ஜனத்தொகையும் கொண்ட இம்மாநிலத்துக்குக் கோட்டா பாரு தலைநகராகும். மலேயர்களின் தேசிய உடையான சாங்கெட் (Songket) நெசவுத் தொழிலுக்கும், வெள்ளி வேலைக்கும் இவ்வூர் கீர்த்தி பெற்றது. இங்குள்ள கேளிக்கைப் பூங்காவில் நடைபெறும் திருவிளாட்டம், நாடகம் ஆகியவை மலேசியக் கலைப் பண்பை உணர்த்துவனவாகும்.

டிரெங்கானு: சுமார் 5,000 சதுர மைலும் 6,00,000 மக்களும் உடைய இதன் தலைநகர் கோலா டிரெங்கானு என்பதாகும். நெசவு, பத்திக் அச்சு வேலை, படகு கட்டுதல் முதலிய குடிசைத் தொழில்கள் வளமடைந்திருக்கின்றன. 'பத்திக்' என்பது துணியில் மெழுகு கொண்டு சித்திரம் அடித்த பின் அதைச் சாயத்தில் தோய்ப்பது. மெழுகுள்ள இடத்தில் சாயம் ஏறாமல் இருக்கும். அதன் மேலும் சில வண்ணங்களை அச்சிட, பல வண்ணத் தோற்றம் உண்டாகும். துங்குன் என்ற இடத்தில் பெரிய பெரிய கடலாமைகள் காணப்படுகின்றன. மே முதல் செப்டம்பர் வரையில் உள்ள பருவக் காலத்தில் கடற்கரைக்கு வந்து முட்டை இடுகின்றன. சில கடலாமைகள் எட்டடி நீளமிருக்கின்றன. அரை டன் வரை அவற்றின் எடை இருக்கும்.

பினாங்கு (தீவு:)

ஒரு பெருநகரமான இது ஒரு மாநிலமுமாகும். சுமார் 400 சதுர மைல் பரப்பையும் 6,50,000 மக்களையும் கொண்ட இந்நகரம் சிறந்த துறைமுகப்பட்டினமுமாகும். தீர்வை யற்ற துறைமுகம் (Free Port) ஆனதால்


CIBA
new
Binaca
Talc
பினகா டால்க்





லைப்பாய்

இருக்குமிடம்: அதுவே...
ஆரோக்கியம் இருக்குமிடம்

லைப்பாய் ஸ்நானம் - உற்சாகப் பெருக்கு. உல்லாச ஊற்று..
ஒவ்வோரு குளியலும் உணர்த்தும்: நல்ல சோப்புக்குரிய நன்மைகள்
யாவும் பெறலாம், அதற்கு மேலும் பெறலாம் ஆரோக்கியமுடன்.

அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

லின்டாஸ்-L.49-140 TI

வாணிகம் செழித்து வளர்கிறது. மலேயாவின் ஓய்வு நாள் தீவு என இதைச் சொல்லுகிறார்கள். 2720 அடி உயரமுள்ள கொடி மலை மலைவாசத்தலமாக விளங்குகிறது. நாற்புறமும் வளமான கடற்கரைச் சாலைகளும் இருப்பதால் பயனும் பொலிவும் பெருகிக் காணப்படுகிறது. இந்நகரம். கோயில்களில்தான் எத்தனை வகை! பல சமய ஆலயங்களுடன் பல்வகைப் பாம்புகள் நிரம்பிய "பாம்புக் கோயில்" காணத்தகிய ஒன்றாகும். எத்தனை எத்தனையோ நிறமும் தரமும் உள்ள உயிர்ப் பாம்புகள் யாருக்கும் எவ்வித ஊறும் விளைவிக்காமல் "தாமுண்டு தம் ஆசனமாம் கவட்டைக் கம்புகள் உண்டு" என்று பரம சாதுக்களாய்த் தவம் செய்துகொண்டிருப்பதைப்பார்த்தால் யாருக்குத்தான் வியப்பேற்பட மாட்டாது? பினாங்குத் தண்ணீர் உலகத்துச் சிறந்த நீருள் ஒன்று. அத்தண்ணீரைப் பருகுவதற்கென்றே ஒரு பயணம் போய் வரலாம். தண்ணீர் மலையில் நம்மவர்கள் வெண்ணீறணிந்த தண்டபாணியைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு மகிழ்கிறார்கள். தண்ணீர்மலையான் பெயரை மலேயா சென்று வந்தவர்கள் தங்கள் புத்திரர்களுக்கு இட்டு அழைத்து அவன் நினைவை மறவாதிருக்கிறார்கள் என்பதை நாம் இன்றும் காணலாம்.

பேரா: மலேசியாவின் செல்வக் களஞ்சியம் என்று பேராவைத்தான் சொல்ல வேண்டும். சுமார் 8,000 சதுர மைல் பரப்பும் சுமார் 14,00,000 ஜனத்தொகையும் கொண்ட இம்மாநிலத்தின் தலைநகர் ஈப்போவாகும். உலகத்திலேயே அதிகமான வெள்ளீயம் இங்குதான் கிடைக்கிறது. இண்டாப் பள்ளத்தாக்கு வெள்ளீயப் படிவங்கள் (Tin Deposits) நிறைந்த பகுதியாகும். ஈப்போவுக்குப் பக்கத்தில் 200 அடி நீளமுள்ள குகைக் கோயில் காணத்தக்கதாகும். ஒருவகைச் சுண்ணாம்புக் கனியாலான மலையில் இயற்கையாக அமைந்திருந்த குகையைச் சீனர்கள் மேலும் குடைந்தும், சுவர்களைப் பூசியும் அழகுபடுத்தியுள்ளார்கள். மாக்ஸ்வெல் மலையடிவாரத்தில் உள்ள தைப்பிங் இம்மாநிலத்தின் பழைய தலைநகராகும். அருகில் உள்ள பாங்கோர் தீவு கடல் ஆடுவதற்கு ஏற்ற நல்லதொரு கடற்கரையாக அமைந்திருக்கிறது. எல்லா மாநிலங்களுள்ளும் பேரா மாநிலம் பல வகையிலும் முதன்மை வாய்ந்திருப்பதை உணரலாம்.

பாஹாங்: மலேயா தீபகற்பத்தில் நிலப் பரப்பால் பெரிய மாநிலம் இதுவே. சுமார் 3,50,000 மக்களையே கொண்டிருப்பினும் 13,800 சதுர மைல் ஆகும் இதன் பரப்பு. பெரும்பாலும் மலை மண்டிய மாநிலம் இது. மலேயாவின் மலை வாசத்தலங்களுள் முதன்மை பெற்ற காமரன் ஹைலாண்ட்ஸ், பிரேசர் ஹில்ஸ் ஆகிய இரண்டும் இம்மாநிலத்திலேயே இருக்கின்றன. தமான் நகரா (National Park) என்ற தேசியக் காவும் இங்குதான் இருக்கிறது. அது சுமார் 1,700 சதுர மைல் பரப்புள்ளது. தீபகற்பத்தின் மிக உயர்ந்த மலையான குனோங் தஹான் (7,186 அடி) இக் காவுள்தான் இருக்கிறது. காட்டெருது, யானை, குரைக்கும் மான், வரை மான், மனிதக்குரங்கு, புலி, மலைப் பன்றி முதலிய விலங்குகள் மிகுதியாகக் காணப்படும் பகுதியும் இதுவே. இங்கு வரும் பயணிகளுக்கு எல்லா வசதிகளும் அருமையாகச் செய்து கொடுக்கப்படுகின்றன.

செலாங்கூர்: சுமார் 3100 சதுர மைல்களையும், 12,00,000 மக்களையும் கொண்ட இம்மாநிலத்தின் தலைநகரான கோலாலம்பூரே மலேசியாவின் தலைநகராகவும் விளங்குகிறது. பொய்கையும் பூங்காவுமாய் இணைந்து பொலிவூட்டும் தலைநகர் கல்விக் களஞ்சியமாகவும், பல் தொழில் பண்ணையாகவும், கோயில்கள், மசூதிகள் நிறைந்த திருப்பதியாகவும் விளங்கக் காண்போம். உலகிலேயே உயர்ந்த பாராளுமன்றக் கட்டிடத்தைக் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கிறது. தேசிய மசூதி ஒன்று சுமார் 5 கோடி டாலர் செலவில் நகரின் மத்தியிலேயே அமைத்திருக்கிறார்கள். காணக் கொடுத்து வைக்க வேண்டும். புதிய கட்டடங்கள் எல்லாம் அராபியக் கலைப்புள்ள இஸ்லாமியரான "மூர்" பாணியிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. வெந்நீர் ஊற்றுக்களும் பக்கத்திலேயே தண்ணீர் ஊற்றுக்களும் மலையினின்வீழ்அருவிகளும் இம்மாநிலத்தின்சிறப்

போர்ச்சுக்கீசியரின் கோட்டை வாயில்.



புகளாரும். கோலாலம்பூரின் விமானத் திடல் அருமையிலும் அருமை. கோலாலம்பூருக்குப் பத்து மைல் தொலைவில் மகோன்னதமான குகை ஒன்றுள்ளது. 270 படிகள் ஏறிச் செல்ல வேண்டும். இத்தனை உயரமுள்ள குகையை நான் கண்டதில்லை. சுமார் 1500 பேர் இருந்து பெரிய மாநாடே நடத்தலாம். அங்கு பிள்ளையார், அம்மன் கோவில்களுடன் குறிஞ்சித் தெய்வமான திருமுருகன் திருக்கோயில் சிறப்புடன் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ' ''ஐயா!'' என, ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற' அருமையை நாமும் கூட நன்குணரலாம் இக்குகையைப் பார்த்து.

பெரியவர் ஒருவர் என்னிடம், ''ஐயா, நீங்கள் திருமுருகாற்றுப் படையை மதிக்கிறீர்களா?'' என்று கேட்டார். ''நிச்சயமாக!'' என்று விடை தந்தேன். ''அப்படியானால், திருமுருகாற்றுப் படை பற்றிய கதையை நீங்கள் நம்பத்தானே வேண்டும்?'' என்றார். ''அதனாலென்ன? நம்புவதால் குடியொன்றும் கெட்டு விடாதே'' என்றேன். ''அப்படியானால், நக்கீரர் உள்பட ஆயிரம் பேரையும் ஒரு பூதம் தூக்கிச் சென்று அடைத்து வைத்திருந்ததே அந்தக் குகை இதுதான் ஐயா!'' என்றார். ''ஏன் வேறு குகையாக இருக்கப்படாது?'' என்று நான் அவரைக் கேட்டேன். அவரோ, ''அப்படியானால் ஆயிரம் பேரை அடைத்து வைக்கக் கூடிய எல்லா வசதிகளும் உள்ள குகை வேறு எங்கே இருக்கிறது? இதுதான் அந்தக் குகை. இங்கே காணப்படுகிற வேல்தான் அவரைக் காத்த வேல்!'' என்று அறுதியிட்டு உறுதியாய்க் கூறினார். அவ்வளவு ஆர்வம் அந்த ''அப்படியானால்''— பெரியவருக்கு.

இந்த முருகன் ஏறி அமர்ந்தருளும் மலையின் பெயர் பத்து மலை. அதை நம்மவர் வத்து மலை என்றுதான் வழங்குவர். அந்த மலைத் தெய்வத்தை வணங்கி மகிழ்பவர்கள் தம் மக்கட்கு 'வத்துமலை' என்று பெயரிட்டு மகிழ்வதை நாம் இன்றும் தமிழகத்தில் காண முடியும்.

இம்மாநிலத்தைச் சேர்ந்த ஸ்வெட்டன்ஹாம் துறைமுகம் (Port Swettenham) கிள்ளான் நகரை ஒட்டியிருக்கிறது. அதை எப்படியெல்லாம் வளர்த்திருக்கிறார்கள் என்பதை நேரில் கண்டுதான் அனுபவிக்க வேண்டும். தலைநகரான கோலாலம்பூருக்கு அருகில் உள்ளதால் அதன் முக்கியத்துவம் பெரிது. மேலும் சிங்கப்பூர் பிரிந்துவிட்டதால், ஒரு சிறந்த துறைமுகத்தைச் செவ்விய முறையில் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. அதை அருமையான முறையில் வளர்த்தும் வருகிறார்கள்.

நகரி செம்பிலான்: நகரி என்றால் சமஸ்தானம்; செம்பிலான் என்றால் ஒன்பது: முன்னர் குட்டிக் குட்டி சமஸ்தானங்களாக இருந்த ஒன்பது சமஸ்தானங்களின் சேர்க்கையால் இப்பெயர் வந்திருக்கிறது. சுமார் 2,500 சதுர மைல் பரப்புள்ள இம்மாநிலத்தின் ஜனத் தொகை சுமார் 4,00,000 ஆகும். இதன் தலைநகர் சிரம்பான் ஆகும். இங்கு ஒரு சிறிய ஆனால் சிறந்த பழம் பொருட் காட்சிக் கூடம் இருக்கிறது. இங்கு பண்டைய மலாய் வீடு ஒன்று உள்ளது. ஓர் ஆணிகூட இல்லாமல் கட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சிரம்பானுக்கு மேற்கே சுமார் 22 மைல் தொலைவில் உள்ள டிக்சன் துறை (Port Dickson) ஓர் அருமையான சுகவாசஸ்தலம். குளம் போன்று அலையே இல்லாத அமைதியான கடல் நீராடச் சிறந்த இடமாக இருக்கிறது. நீண்ட கடற்கரையும் கடற்கரையோரமாகச் சிறு சிறு திட்டுத் தீவுகளும் இருப்பது கண் கவர் காட்சியாகும்.

மலாக்கா: வரலாற்றுச் சிறப்புள்ள பெருமாநிலம் இது. முதன் முதல் தமிழர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, இதற்கு 'மலைக்கா' என்று பெயரிட்டிருக்கிறார்கள். அப்பெயரே மலக்கா ஆகி இன்று ஆங்கில உச்சரிப்பில் மலாக்கா என்றாகியுள்ளது. ஹிந்துக்களாகவே வாழ்ந்து வரும் பல மலாய் மக்களை இங்கு இன்றும் காணலாம். அவர்களை மலாக்கா செட்டிகள் என்று நம்மவர் அழைக்கிறார்கள். அவர்கள் செட்டி (Chitty) என்றே குலப் பெயர் தோன்றக் கையொப்பமிடுகின்றனர். அவர்களுக்குச் சொந்தமான பார்வதி, பரமசிவன் பரிவார தெய்வங்களுடன் கூடிய சிவன் கோவிலில் இன்றும் தென்னாட்டுப் பிராமணர் பூசை செய்து வருகின்றனர். ஆனால் அக்கோவில் இன்று தமிழர்களான செட்டியார்களின் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. மலாக்காச் செட்டிகள் ஹிந்து முறைப்படியே திருமணம் முதலிய எல்லாச் சடங்குகளையும் நடத்தி வருகின்றனர். இதன் தலைநகரின் பெயராலேயே மாநிலம் விளங்குகிறது. இம்மலாக்கா நகரமே மலாய் நாட்டின் முதல் முடியாட்சியின் தலைநகராகவும் கேந்திர ஸ்தானமாகவும் இருந்திருக்கிறது. பின்னர் பிரிட்டிஷாரின் குடியேற்ற நாடாக விளங்கி இன்று சுதந்திர மலேசியாவின் மாநிலங்களுள் ஒன்றாக நிலைபெற்று விட்டது.

இதன் நிலப்பரப்பு சுமார் 640 சதுர மைல்கள். மக்களின் ஜனத்தொகையோ சுமார் 3,50,000 போர்ச்சுக்கீசியர்கள், உலாந்தா நாட்டினர்கள் ஆண்டமை பற்றிய சான்றுகளைக் கூறும் இடிபாடுகளையும் சின்னங்களையும் இன்றும் காண முடிகிறது. மலேசியாவிலேயே மிகப் பழைமையானது என்று கருதப்படும் சீனர்களின் ஆலயமும், 1521ல் கட்டிய செண்ட் பால் மாதா கோவிலும் இங்குள்ளன.

கீழை நாட்டிலேயே உலாந்தாப் பாணியில் கட்டப்பட்ட பழைய கட்டடம் என்று கருதப்படும் ராஜப் பிரதிநிதி மாளிகை (Stadthuys) 1641—1660ல் கட்டப்பட்டதையும், போர்ச்சுக்கீசியரின் கோட்டைச் சுவர்கள் முழுதும் அகன்ற பின்னரும் கோட்டை வாயில் மட்டும் அப்படியே (செம்பாராங் கல்லினால் கட்டப்பட்டது) நின்று கொண்டிருப்பதையும் நாம் காண முடிகிறது.

மலாக்கா நகரமும் ஒரு துறைமுகப் பட்டினமாகும். உள்நாட்டுப் படகு வாணிகம் குறிப்பிடத் தக்க முறையில் நடந்துகொண்டிருக்கிறது.

ஜோகூர்: மலேயா தீபகற்பத்தின் தென் கோடி மாநிலம் இதுதான். சுமார் 7,300 சதுர மைல் பரப்புள்ள இம்மாநிலத்தில் சுமார் 11,00,000 மக்கள் வசிக்கிறார்கள். இதன் தலைநகர் ஜோகூர் பாரு என்பதாகும். முன்காலத்திலேயே முன்னேற்ற மடைந்த சமஸ்தானம் என்று இதனைச் சொல்வார்கள். இதன் முன்னாள் சுல்தான் மிக்க சீர்திருத்த வாதியாக இருந்தவர். மேலை நாட்டு மாதை மணந்திருந்தார். மன்னரின் அரண்மனையும் அவருடைய மிருகக் காட்சி சாலையும், அபு பக்கர் பள்ளிவாசலும் காணத் தக்கவை. ரப்பர், ஆயில்பாம், அன்னாசி முதலியவற்றைப் பயிர் செய்யும் முறைகளை நேரில் கண்டறிவது பயனுடையதாக இருக்கும்.

இவையல்லாமல் மலேயா தீபகற்பத்திலிருந்து 1000 மைல் தூரத்தில் கடலுக்கப்பால் உள்ள சபா என்ற பகுதியும், சரவாக் என்ற பகுதியும் மலேசிய நாட்டின் இரு மாநிலங்களாக இருக்கின்றன.

சபா: இது இந்தோனேஷியப் போர்னியோவின் வட பாகத்தில் உள்ளதாகும். பிரிட்டிஷ் காலத்தில் வட போர்னியோ என்று பெயர் கொண்டிருந்த சபா சுமார் 30,000 சதுர மைல் பரப்பும், 4,50,000 ஜனத்தொகையும் கொண்டதாக உள்ளது. இதன் தலைநகர் ஜெஸ்ஸல்டன் (Jesselton) இங்கு கைவினைப் பண்டங்கள் மிகுதி என்று சொல்லப்படுகிறது.

சரவாக்: இது இந்தோனேஷியப் போர்னியோவின் வடமேற்குப் பகுதியில் உள்ளதாகும். சுமார் 48,000 சதுர மைல் நிலப்பரப்பு; சுமார் 8,00,000 மக்கள் இங்கு வசிக்கிறார்கள். 350 மைல் நீளமுள்ள ரஜாங் ஆறு இங்கு ஓடுகிறது. சுமார் 100 மைலுக்கு மேல் ஆற்று வழிப் போக்குவரத்து நடைபெறுகிறது. இங்குதான் மிகுதியான அளவில் மிளகு உற்பத்தியாகிறது. இதன் தலைநகர் குச்சிங் என்பதாகும். பழம் பொருட் காட்சிசாலை மிகவும் பிரசித்தமானது என்றெல்லாம் சொல்லப்படுகிறது.

(தொடரும்)

மக்களைக் கவரும் மது மேத்தா

பம்பாய் நகரில் மண்ணெண்ணெய் கிடைக்க வில்லையா?

பம்பாய் துறைமுகப் பகுதியில் நாவியம் விளைவதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டுமா?

முனிசிபல் சிப்பந்திகள் தெருவைச் சுத்தம் செய்ய வில்லையா ?

பம்பாயின் காஷ்மீர் எனப்படும் மலாட் தாஞ்சிவாடியில் குடி தண்ணீர்ப் பஞ்சமா ?

இவற்றை யெல்லாம் கவனிக்க நாங்கள் இருக்கிறோமென முன்வருகிறார்கள் பம்பாய் சுதந்திராக் கட்சியினர்.

மக்களும் தாராளமாக பம்பாய் மகாத்மா காந்தி ரோட்டிலுள்ள சுதந்திரக் கட்சியின் காரியாலயத்துக்கு வந்து தங்களது குறைகளை எடுத்துக் கூறுகின்றனர். இவ்வாறு மக்களிடையே நம்பிக்கையை ஊட்டி, அவர்களுடன் சிரித்த முகத்துடன் பேசி, அவர்களது குறைகளை நீக்கப் பாடுபட்டு வருபவர் பம்பாய் நகர சுதந்திரக் கட்சியின் பொதுக் காரியதரிசி திரு மது என். மேத்தா ஆவார்.

அதன் விளைவாக, இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் 1954ம் ஆண்டில் இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸின் 'ஆர்கனைசர்'களில் ஒருவரானார். இரண்டாண்டு காலத்துக்குள், பம்பாய் பெட்ரோலியம், கெமிக்கல் எண்ணெய் தொழில் சங்கங்களின் பொதுக் காரியதரிசியாகப் பதவியேற்றார். ஆனால் இவரது தொழிற்சங்க சேவை தொடர்ந்து நீடிக்க வில்லை. சங்கத் தலைவர்களுடன் ஏற்பட்ட கொள்கை வித்தியாசம் காரணமாகத் தொழிற்சங்கத்தை விட்டு 1957ல் விலகிய இவர், 1959ல் பம்பாய் நகர சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் காரியதரிசியாக ஆனார். இரண்டாண்டுகளுக்குள் கூட்டுக் காரியதரிசியாகி, 1963 முதல் பொதுக் காரியதரிசியாகப் பணியாற்றி வருகிறார்.

முப்பத்தேழு வயதான எளிய தோற்றமுடைய இந்த இளைஞர், சிரித்த முகத்துடன் யாருடனும் உரையாடுகிறார்.

இவரது குடும்பத்துக்குச் சொந்த நிலமும், எம்பிராய்டரி வேலைப்பாடுகளுடன் கூடிய

பம்பாயில் ஒரு நல்ல குஜராத்தி குடும்பத்தில் பிறந்த திரு மேத்தா, பம்பாய் ஸிடென்ஹாம் கல்லூரியில் படித்து, வாணிபத் துறையில் 1951 பட்டம் பெற்று, தொழில் துறை உறவுகள் குறித்து மேற்படிப்புக்காக 1952ல் இங்கிலாந்துக்குச் சென்றார்.

இங்கிலாந்தில் தங்கியிருந்த இரண்டாண்டு காலத்தில் இவர் அந் நாட்டின் தொழிற் சங்க நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வம் கொண்டார்.

திரு மது மேத்தா



நவீன மோஸ்தர் ஆடைகளை ஏற்றுமதி செய்யும் தொழில் ஸ்தாபனமும் உண்டு. இவர் பெரும் பகுதி நேரத்தைக் கட்சிக்காகவே செலவிடுகிறாராம்.

தற்சமயம் பம்பாய் நகராட்சி மன்றத்தில் சுதந்திராக் கட்சிக்கென அங்கத்தினர்கள் இல்லை. ஆனால் முனிசிபல் நிர்வாகம் இக்கட்சியினர் கொண்டு வரும் குறைகளை அனுதாபத்துடன் கவனிக்கின்றனர்.

— பாரதி

அமெரிக்க விநோதங்கள்!



நியூயார்க்கில் உணவுப் பொருளைத் தபாலில் அனுப்பும்போது ஒரு ரெஸ்டாரெண்ட் இப்படி மேலே எழுதி அனுப்புகிறது. 'தயவுசெய்து இரண்டே நாட்களில் 'டெலிவரி' செய்யவும். அப்புறம் தயவுசெய்து கொடுக்க வேண்டாம்!''

டெக்ஸாஸில் வேகமாகக் கார் ஓட்டுபவர்களுக்கு ஒரு விளம்பரம்: ''மணிக்கு இருபது மைல் வேகத்துக்குள் — அல்லது — இருபது டாலர் வரை!''

ஹேஸ்டிங்ஸ் தபால் நிலையத்தில் தபால் பெட்டிக்கு மேல் உள்ள வாசகம்: ''உங்கள் மனைவி கொடுத்த கடிதத்தைத் தபாலில் சேர்த்துவிட்டீர்களா ?''

— எஸ். எஸ். எஸ்.



ஒரு பைசா முதல் ஒரு ரூபாய் வரை, நம்முடைய புழங்கும் நாணயங்கள் எவ்வளவு பெரிதாயிருக்கின்றன என்பது நம் யாவருக்கும் தெரியும். இந்த நாணயங்களில் எல்லாம் ஒரு ரூபாய் நாணயம்தான் மிகவும் பெரியது என்ற விஷயமும் தெரியாததல்ல. ஆனால் 'வண்டிச் சக்கரம்' அளவுக்குப் பெரிதான நாணயம் கல்லாகச் செதுக்கப்பட்டது என்றால், எவ்வளவு வியப்பாக இருக்கிறது?

ஆம், அத்தகைய 'வண்டிச் சக்கர நாணயங்கள்' இன்றும் தென் கடலில் கரோலின் தீவுக் கூட்டங்களுள் ஒன்றான 'யாப்' என்ற பெயருள்ள தீவில்தான் புழக்கத்திலிருக்கின்றன. நாணயத்தின் குறுக்களவு 12 அடி; இந்த நாணயங்களை வீடுகளுக்கு வெளியே அடுக்குவார்களாம். அந்த அடுக்கைக் கணக்கிட்டே, ஒவ்வொருவருடைய செல்வத்தின் அளவை அறிவார்களாம். — பத்மநாபன்

• • • • • • • • • • • • • • •

உங்களுக்குத் தெரியுமா?

அவர் பொருள்களை வாங்கி உபயோகிப்பதிலேயே முதல்வர். சென்ற 1964-65 ஆண்டில் அவர் வாங்கி உபயோகித்த பொருள் செலவற்றைக் குறிப்பிடுகிறோம்.

1.	நெய்	122993	கிலோ
2.	பாதாம்	3918	,,
3.	ஏலம்	1816	,,
4.	குங்குமப்பூ	112	,,
5.	பச்சைக் கற்பூரம்	79	,,
6.	கஸ்தூரி	55	தோலா

இதில் ஆச்சரியப்பட வேண்டியது ஒன்றுமில்லை. இவர் ஒரு பெரிய பிரபு. அவருடைய சொத்தின் மதிப்பு ஐந்து கோடி ரூபாய். வருட வருமானம் சுமார் இரண்டு கோடி. இவ்வளவு இருந்தும் இப்பிரபு தினமும் சுமார் பதினெட்டு மணி நேரம் வேலை செய்கிறார். ஆயிரக்கணக்கான பேர்களைப் பேட்டி காண்கிறார்.

அவர் கூட்டுறவுப் பண்டகசாலையிலிருந்து தமக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையுமே வாங்கிக் கொள்கிறார். 1964—65ம் ஆண்டில் அவ்வாறு வாங்கிய சாமான்களின் மொத்த மதிப்பு ரூ. 22 லட்சத்துக்கும் அதிகமாகும். அவர் வாங்கிய பொருள்களின் பேரில் போனஸ் சுமார் ரூ. 40,000 கிடைக்கும். இந்தப் பிரபு யார் தெரியுமா?

(தெரியாவிட்டால் விடையைக் காண 41ம் பக்கத்தைப் பாருங்கள்)

பெண் மொழிகள்

★ ஒரு பெண்ணினுடைய உபதேசம் மிகவும் கேவலமானதுதான். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளாதவன் முட்டாளாகிறான்.

- ஸ்பானிஷ் பழமொழி

★ ஒரு பெண்ணினுடைய பலம் அவளது நாக்கில் இருக்கிறது.

- ஜே. ஹோவல்

★ விசிலடிக்கும் பெண்ணும் கூவும் பெட்டைக்கோழியும் மனிதர்களுக்கு ஒத்து வராதவர்கள். கடவுளுக்கும் ஒத்து வராதவர்கள். - ஜே. கெல்லி

★ ஒரு பெண்ணின் உடம்பில் கடைசியாகச் சாவது அவளது நாக்குத்தான். - பதினேழாவது நூற்றாண்டுப் பழமொழி

★ இளமையுடன் கூடிய ஆடவன் வெறுக்கக்கூடிய மனைவியாக இருப்பதைக் காட்டிலும் அன்புடைய முதியோனுடைய மனைவியாயிருப்பது நல்லது.

- ஜே. ஹேவுட்

-தொகுப்பு: எஸ். வெங்கடராமன்





விவாகரத்தும் வெற்றிலைப்பாக்கும்

○ பர்மாவில் தூக்கிலிடப்படுவதற்கு முன் கொலை புரிந்த குற்றவாளிகளுக்கு வெற்றிலை பாக்குக் கொடுக்கும் பழக்கம் நீண்ட காலத்துக்கு இருந்து வந்தது!

விடாமல் வெற்றிலை போட்டுக் கொண்டால்தான் பர்மியச் சொத்தை செல்லாம் சரியாக உச்சரிக்க முடியுமாம்!

○ விவாகத்துக்கு வெற்றிலை பயன்படுவது போல் விவாகரத்துக்கும் வெற்றிலை பயன்படுகிறது. கமத் திராவில் மனைவியை விட்டுப் பிரிய விரும்பும் கணவன் வெற்றிலையையும் பாக்கையும் கொண்டு போய் அவளிடம் கொடுத்து, 'தல்லாக்' என்று மூன்று தடவை சொன்னால் போதும். விவாகரத்து ஆகிவிட்டது என்று பொருள்.

○ மலேயா நாட்டில் சண்டை போட்டுக்கொண்டு இருவர் தங்களுக்குள் வெற்றிலை மாற்றிக் கொண்டால் சமாதானமாகப் போய்விட்டதாகக் கருதுவர்.

ஆதாரம்: 'வெற்றிலைச் செல்வம்'

தகவல்: பி. வி. கிரி

விடாக்கண்டர்!



பிரபல கம்பெனியொன்றில் கணக்கை மானேஜராக இருந்தார். அவருடைய பால்ய நண்பரொருவர் தம்முடைய மகனை அழைத்துக்கொண்டு வந்து, அவருடைய கம்பெனியில் வேலை ஏதாவது போட்டுக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார். கம்பெனியில் தற்சமயம் எந்த வேலையும் காலி இல்லை என்பதைச் சொல்லாமல், தட்டிக் கழிக்க வழி தேடினார் மானேஜர்.

பையனைப் பற்றி விசாரித்தார். பி. ஏ. பர்ஸ்ட்கிளாஸ் பாஸ் — உயரம் ஐந்து அடிக்குமேல் — மார்பின் சுற்றளவு முப்பத்துநான்கு அங்குலம் — மூச்சை இழுத்துவிட்டால் மூன்று அங்குலம் விரியும் — வயது இருபத்தைந்து — என்.ஸி.ஸி.யில் சர்டிபிகேட் — ஸ்போர்ட்ஸில் பல வெற்றிகளின்சர்டிபிகேட்டுடன் மாநிலக்கல்லூரியிலேயே 'சேம்பியன் ஷிப்' பட்டம் வேறு — வேலைக்காக எவ்வளவு பணம் டெபாஸிட் கட்ட வேண்டுமானாலும் பையனின் மாமனார் தயாராக இருக்கிறார். இவ்வளவும் கேட்டறிந்த கம்பெனி மானேஜர் திணறிப் போனார். அவருக்கு என்ன காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழிப்பது என்று புரியவில்லை. 'பையனுக்குக் கல்யாணம் ஆகாமலிருந்திருந்தால்' என்று கூறத் தொடங்கினார். அதற்குள் நண்பர், '.......கல்யாணமாகாம லிருந்திருந்தால் வேலை உண்டு என்று சொல்வாய். அதற்காகத்தானே என் பின்னால் பையனையும் அழைத்து வந்திருக்கிறேன். அவன் இவனைப் போலவே எல்லா விஷயங்களிலும் தேர்ச்சி பெற்றவன். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. வாசலில்தான் நிறுத்திவைத்துவிட்டு வந்திருக்கிறேன். இவனுடைய தம்பிக்காவது வேலை போட்டுக் கொடுக்க முன் வந்தாயே' என்று கூறிவிட்டு, இரண்டாவது பையனை அழைத்து வர விரைந்தார்.

— ஆர். வெங்கடகிருஷ்ணன்

• • • • • • • • • • • • • • •

சபாஷ் பேஷையா!

(தெரியாவிட்டால் 41ம் பக்கம் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்)

சுசீந்திரம் ஆறுமுகம் பிள்ளையவர்களின் தசாவதானம் நடைபெற்றது. அதற்கு நீதிபதி சேஷையா அவர்களே பிள்ளையவர்களின் தசாவதானத்தைப் பார்க்க வந்திருந்தார். ஒரு பெரும் புலவரும் வந்திருந்தார். சேஷையா ஆறுமுகம் பிள்ளையவர்களின் தசாவதானத்தை மெச்சி, 'சபாஷ், பேஷ்!' என்றார். பிறகு அவ்வவையின் தலைசிறந்த அப்பெரும் புலவரின் கருத்தை வினவினர். புலவர் கூறியதென்ன தெரியுமா?

ஆறுமுகம் பிள்ளை அவதானம் கண்டெளியேன்
வேறுமுகமன் கூற வேண்டுமோ? — நேறுமதி
சேஷையா மெச்சித் திருவாய் மலர்ந்து, 'சபாஷ்
பேஷையா' என்ற பிறகு!

என்று பாடினார்.

இவ்வழகிய பாடலைப் பாடிய அந்தப் பெரும் புலவர் யார் தெரிகிறதோ?




வெளிநாட்டில் நடக்க விருக்கும் ஒரு புண்ணிய கைங்கரியத்துக்காக ஒரு சொற்பொழிவு ஏற்பாடாகியது. முன் வரிசையில் எழுத்தாளர் மார்க்ட்வைன் அமர்ந்திருந்தார். சொற்பொழிவின் ஆரம்பத்தில் பத்து நிமிஷம் கேட்டதும் 'தம் சொத்து முழுவதும் இதற்கே எழுதி வைத்துவிட வேண்டும்' என்று நினைத்தார். நேரம் ஆக ஆக ஒரு பவுன் நிதி கொடுத்தாலே போதும் என்று எண்ணினார். ஆனால் பிரசங்கி பின்னும் ஒரு மணி நேரம் பேசி 'போர'டித்தார். நிதி வசூலிக்கத் தட்டை ஏந்தி வந்தனர். மார்க்ட்வைன் ஒரு பவுனை எடுத்துப் போட்டுவிட்டுத் தட்டிலிருந்து இரண்டு பவுனை எடுத்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். இவ்வளவு நேரம் தம் நேரத்தை வீணாக்கியதற்கு ஒரு பவுன் அபராதமாக!

பீகீ ராத்







வீட்டுக்கு வீடு வாசற்படி! — இது பழமொழி. கதைக்குக் கதை முக்கோணக் காதல்— இது திரையுலகம் தேடித் தந்த புது மொழி.

இந்தப் புது மொழியின் பகைப்புலனிலே தான் 'பீகீ ராத்' என்னும் ஹிந்திப் படம் உருவாகியிருக்கிறது. இதற்கு 'நீண்ட இரவு' என்று பொருள்.

காதல் காசைப் பார்ப்பதில்லை. கருத்தொருமித்த இணையைத் தான் தேடுகிறது. திரைக் கதைக்குரிய இம்மூலப் பொருளை ஏற்றுப் பணக்காரி ஒருத்தியைப் புறக்கணிக்கிறான் 'அஜய்' என்னும் வாலிபன். நிராகரித்த அதே கையோடு நைனிதாலுக்கு வருகிறான். எதற்காக? அங்கே 'நீலிமா' என்னும் ஆயாவிடம் மனத்தைப் பறிகொடுப்பதற்காக. அந்த ஆயாவுக்கு எசமானன் ஆயாவுக்கே முன்பின் அறிமுகமில்லாத ஆனந்த். அவன் அப்புறம்தான் நைனிதாலுக்கு வருகிறான். ஏன், தெரியுமா? காதலர்கள் வாழ்க்கையில் குறுக்கிட வேண்டுமே, அதற்காக. அப்புறம் என்ன? முக்கோணக் காதல் களை கட்டுகிறது. கதையும் நீளுகிறது. வேட்டைக் காட்சிகளைக் காண்கிறோம். காதல் வேட்டைகளைக் காண்கிறோம். உண்மைக் காதலுக்கு உலை வைக்கப் பணக்காரப் பெண் முயல்வதையும் காண்கிறோம். கடைசியில் உண்மைக் காதலுக்கு மதிப்பளித்து ஆனந்த் விலகுவதையும் காண்கிறோம்.

வில்லியாக வருவது சகிலாவுக்குக் கைவந்த கலை. கோணங்கிச் சேஷ்டைகள் ராஜேந்திரநாத்தின் உடன்பிறப்பு. வலிப்பு நடனங்கள் படத் தயாரிப்பாளர்களின் பொழுது போக்கு. இருந்தாலும் மீனாகுமாரி, அசோக் குமார், பிரதீப் குமார் — இம்மூவரும் தங்கள் நடிப்பால் படத்தைப் பிழைக்க வைக்க முயல்கிறார்கள்! நாமும் 'பிழைத்தோம்' என்று பெருமூச்சோடு எழுந்து வருவோமாக!

இந்த இரவு மீண்டும் வராது!

தலைப்பைப் பார்த்த மாத்திரத்திலே படத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை திரைப்பட ரசிகர்களுக்குத் தோன்றுவது இயல்பு. அதோடு 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற முத்திரை மனத்தில் இல்லாத கற்பனைகளைத் தோற்றுவிப்பதும் சகஜம். தலைப்பைக் கொண்டே ரசிகர்களைக் கவர முயலும் 'யஹ் ராத் பிர் ந ஆயேகி' படத் தயாரிப்பாளர்கள் ஒரு விதத்தில் பாராட்டுக்குரியவர்கள்.

காரணம், இந்தப் படத்தில் யாரும் பார்க்கக்கூடாத ஆபாசக் காட்சிகள் கிடையாது. அச்சுறுத்தும் பயங்கர ஒலிகள் கிடையாது. 'மர்மக்கதை' என்று தயாரித்து 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று சான்றிதழ் வாங்கியிருக்கிறார்களே, இது ஒன்றில்தான் வெற்றியின் ரகசியம் அடங்கியிருக்கிறது. கதையின் கடைசியில் ஓரளவு மர்மத்தைக் காண்கிறோமே, அதைக் காட்டிலும் பெரிய மர்மத்தை இந்த 'சர்டிபிகேட்' பெறும் விஷயத்தில் காண்கிறோம்.



இருந்தாலும் பேராசிரியராக வரும் பிருத்விராஜ் தமது நடிப்பைக் கொண்டு படத்துக்கு உயிரூட்ட முயல்கிறார். ஆயினும் பழைய பிரபல நடிகர் பிருத்விராஜை நாம் இப்படத்தில் காண முடியவில்லை. ரெண்மனியாக வரும் ஷர்மிளா டாகூரின் அலட்டிக் கொள்ளாத நடிப்பு - மர்மம் என்று ஒன்று இருந்தால் அதைக் கடைசிவரை காப்பாற்ற உதவுகிறது. உணர்ச்சியை முகத்தில் படிக்க உதவ வேண்டிய 'குளோஸ் அப்'கள் ஏராளமாக இருப்பினும், அவை நாம் பிறந்த பயனைப் பெறவில்லை. மற்ற இடங்களில் இப்படம் புகைப்படம் - ஆம், மர்மக் காட்சிகளுக்கு உதவுவதற்கென்று புகையைப் பரவ விட்டு எடுத்த புகைப்படம்!



ஊர் வம்பு

1966 மே மாதம் முதல் தேதி. பகல் இரண்டு மணி. டில்லி ராஷ்டிரபதி மாளிகையில் ஒரு சிறு அரங்கமாக அமைக்கப்பட்டிருக்கும் மகுலுக்குள் ராஷ்டிரபதி ராதா கிருஷ்ணன் வருகிறார். அவர் ஆசனத்தில் அமர்ந்தவுடன் எதிரில் தொங்கும் திரை உயருகிறது. எதிரே மேடை மேல் தமிழ் மகாகவி பாரதியார் கருநிறக் குரலைக் குழைத்துக் கலந்து "ஓம்... சக்தி ஓம்... ஓம் நமச்சிவாய" என்று ஒலி எழுப்புகிறார். முகத்தில் கற்பனை ஆவேசம் படருகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் அதே மண்ணில்—அப்போது அதற்கு அத்தினபுரம் என்று பெயர்—நிகழ்ந்த பெருநிகழ்ச்சி ஒன்றைப் பாடத் தொடங்குகிறார்.

அன்று அத்தினபுரத்தில் கௌரவப் "பாவியர் சபைதனிலே" தன் மானத்தைக் காக்க விரைந்து வரும்படி கண்ணனைக் கூவியழைத்ததும், கண்ணன் அருளால் மானம் காக்கப் பெற்றுப் பாஞ்சாலி விர சபதம் செய்ததுமான காட்சிகள் இன்று மறுபடியும் மேடை மேல் நிகழ்கின்றன.

பாஞ்சாலி சபதத்தின் மேல் திரை இறங்குகிறது. ராஷ்டிரபதி எழுந்து மேடை மேல் போய்ப் பாரதியாரின், 'பாஞ்சாலி சபத'க் காப்பியத்தை நாடகமாக நடித்துக் காட்டிய சேவாஸ்டேஜ் நாடகக் குழுவினரைப் பாராட்டி ஆசி கூறுகிறார்.

இந்திய சர்க்காரின் இசை நாடக இலாகாவின் சார்பில் பல்வேறு இந்திய மொழிகளிலிருந்தும் நாடகக் குழுவினர் புதுதில்லிக்கு அழைக்கப்பட்டு அந்தந்த மொழியில் நாடகம் நடித்தார்கள். தமிழகத்திலிருந்து சேவாஸ்டேஜ்குழுவினர் அழைக்கப்பட்டிருந்தனர். இந்த நாடகவிழாவுக்கெனஅமைக்கப்பட்ட மேடையில் சேவாஸ்டேஜினர் இரு முறை "பாஞ்சாலி சபதம்" கவிதை நாடகத்தை நடித்துக் காட்டினர்.

மே மாதம் முதல்தேதியன்று ராஷ்டிரபதி பவனத்தில் ராஷ்டிரபதியின் முன்னிலையில் 'பாஞ்சாலி சபதம்' நடித்துக் காட்டப்பட்டது. இந்திய டெலிவிஷனில் முதன் முதலாகக் காட்டப்படும் தமிழ் நாடகம் 'பாஞ்சாலி சபதம்'தான்.

ராஷ்டிரபதிபவனத்தில் பாரதி



சோவியத் கலைஞர்கள் விஜயம்

சோவியத் நாட்டுக் கலாசாரத் தூதுக் குழுவினர் பன்னிரண்டு பேர்கள் சென்ற வாரம் ஒரு நாள் சென்னைக்கு விஜயம் செய்து, குழந்தைகள் கலை அரங்கில் தங்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். ரஷீத் பெய்பு-தோவ் புகழ்பெற்ற அஜர்பைஜான் பாடல்களைப் பாடிச் சபையோரை மகிழ்வித்தார். 46 மொழிகளில் பாடும் திறம் படைத்தவர். தமிழ்ப் பாட்டொன்றைப் பாடி அபார வைத்தார். நடன நங்கை ரஸ்ஷான் ஷாகிபோவாவின் பாலே நடன நிகழ்ச்சியும் நடந்தது.

சேவா ஸ்டேஜ் நாடகக் குழுவினரை ஜனாதிபதி பாராட்டுகிறார்




வீடுகளுக்கும் மற்றும்
உணவு விடுதிகளுக்கும்
ஓர் அரிய சாதனம்

வீக்கோ


நவீன வீட்டு எரி பொருள்




சிக்கனமானது ● மற்ற எரிபொருள்களைவிட அதிக அனலை ஈந்து நீண்டநேர வெப்பத்தை கொடுக்கிறது ● புகையாதது ● எந்தரக அடுப்பினிலும் உபயோகப்படுத்தவல்லது.




சிறிய 'லீக்கோ' துண்டுகளை எடுத்துக் கொள்ளவும்.




பிறகு மெல்லிய அடுக்காக அடுப்பினில் பரப்பி வைக்கவும்.



வழக்கமான முறையில் எரிய வைக்கவும்.



சில நிமிடங்கள் கழித்து நன்றாக சுடர் விட்டவுடன் மேலும் வேண்டிய அளவு 'லீக்கோ' சேர்த்துக் கொள்ளவும்.




LECO


'லீக்கோ'
நவீன வீட்டு எரி பொருள்

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
நெய்வேலி-1

FDS NLC 641 TMA


டயல் ஒன் நாட் நாட்
மறைந்த மோதிரம்
கதை: கௌசிகன்
சித்திரம் ரமணி.
அந்த மோதிரம் ரொம்ப விலையுயர்ந்தது. இந்தத் தந்தப் பேழையில் கழற்றி வைத்து விட்டுக் குளிக்கப் போனேன். திரும்பி வந்து பார்த்தபோது அதைக் காணவில்லை.
ஒரு மணியாக யாரும் ஹோட்டலை விட்டு வெளியேறவில்லை என்று காவல்காரன் சொல்கிறான். கவலைப் படாதீர்கள். நான் உடனே போலீசை வரவழைக்கிறேன்.
வரவழையுங்கள். அதற்குள் நளினாதேவியின் அறையைப் போய்ப் பார்க்கலாமா?
நளினா தேவியின் அறையில்...
ம்... அப்படித்தான் தோன்றுகிறது.


திரும்பும் போது சிங்காரத்தின் காந்தக் கண்கள் மாலாவின் மேஜையிலிருந்த பொருள்களை மறுபடி பார்வையிடத் தவறவில்லை.
R. Suresh
நடிகை நளினதேவியின் அறையிலும் மாலாவின் அறையிலும் சிங்காரத்துக்குத் தேவையான தடயங்கள் கிடைத்து விட்டன. உங்களுக்கு அவை என்ன என்பது புரிகிறதா?
பாபு, இப்போது நாம் மாலாவின் கண்ணுக்குத் தெரிந்தவனைச் சந்திக்கப் போகிறோம். தன் காதலன் விசுவாசத்தை அவள் தான் எத்தனை அதிகரித்திருக்கிறாள் பார்த்தாயா? மேஜை மீது... அதுவும் நம் அதிர்ஷ்டம் தான்...
சில மணி நேரத்தில் சிங்காரத்தின் கார் சுரேஷின் வீட்டுக்குப் பின்புறத்தில் வந்து நின்றது. அங்கிருந்த கோழிகளும் புறாக்களும் அவனை வரவேற்கின்றன.
எதிர்பார்த்து வந்த தடயம் சிங்காரத்துக்குக் கிடைத்து விட்டது. அது என்ன என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா?
சிங்காரமும் பாபுவும் அந்த வீட்டைச் சுற்றி வரும்போது ஒரு வாலிபன் அங்கிருந்து வேகமாக வெளியேறுவதைக் கண்டார்கள்.
நாம் தேடி வந்த வாலிபன் அதோ அவன் தான். அவனைப் பின் தொடர்ந்து செல் பாபு.
ஏதோ காலிப் புட்டிகளை அப்புறப் படுத்தப் போகும் அவனால் நமக்கு என்ன நன்மை இருக்கப் போகிறது சிங்காரம்?
தன்னை ஒருவன் பின் தொடருவதைக் கண்ட சுரேஷ் அவசரமாகப் புட்டிகளை வாய்க்காலில் வீசினான்.
பாபு, அவனை அப்படியே தடுத்து நிறுத்து. நான் ஒரு நொடியில் வருகிறேன்.
மிஸ்டர், ஒரு நிமிஷம். உங்களுடன் சில விஷயங்கள் பேச வேண்டும்.
நான் யாருடனும் எதைப் பற்றியும் பேச முடியாது. இந்தக் காலிப் புட்டிகளைப் போட வந்தேன்.
அற்புத சக்தி வாய்ந்த சிங்காரத்தின் கண்கள் மறுபடியும் ஒரு விநோதமான காட்சியைக் கண்டது. காணமல் போன மோதிரத்தைக் கண்டுபிடித்து விட்ட மகிழ்ச்சி ஏற்பட்டது சிங்காரத்துக்கு. உங்களுக்கு அது தெரிகிறதா? 71ம் பக்கத்தைப் பாருங்கள்.


அவனை விடாதே பாலு. நமக்குத் தேவையானது கிடைத்து விட்டது.
மாலா வந்த போது...
சுரேனை லாக்கப்பில் தள்ளிவிட்டு ஹோட்டலுக்கு விரைகிறான் சிங்காரம்.



வலிதான் எங்கள் பிரச்சினை...

உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவின் தலைமை வகிப்பவன் நான். எங்களுடைய பணி வலியை நீக்கும் மேலும் சிறந்த முறையைக் கண்டுபிடிப்பதே. இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த ஊக்கம் கொண்டுள்ள உலகத்தின் முதன்மையான பல கழகங்களுள் எங்களுடையதும் ஒன்று. வலிக்கு, இக்காலத்தில், சிறந்த ஒரே விடை 'ஆஸ்ப்ரோ' பார்முலா தான் என்பதை நாங்கள் இன்று அறிவோம்.

சமீபத்தில், அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சோதனைகள் 'ஆஸ்ப்ரோ' விலுள்ள சுறுசுறுப்பாக இயங்கும் கூட்டுப் பொருள்தான் மிகவும் அர்த்தமான மற்றும் பயனுள்ள வலிநிவாரணி என்று தெளிவாக நிரூபித்து உள்ளன. அதனால்தான் அது உலக முழுவதும் உள்ள டாக்டர்களாலும் ஆஸ்பத்திரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

வலி என்பது என்ன? உயிர்ப்பொருள், உடல் வேகத்திற்கும் மேலாக, மிக விரைவாகத் திசுக்களில் சேர்ந்து குவிந்து, ஒரு "மறைமுகமான" வீக்கத்திற்குக் காரணமாகிவிட அது நரம்புகளை அழுத்துவதின் மூலம் வலி ஏற்படுகிறது.

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி? 'ஆஸ்ப்ரோ' உடனடியாக இரண்டறக் கலந்துவிடுகிறது—வீக்கத்தை நீக்கி—நரம்புகளின் மீதிருக்கும் அழுத்தத்தைப் போக்கி—வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

இவைகளுக்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: வலி • தலை வலி • உடல் வலி • பல் வலி • மூட்டு வலி • ஜுரவேகத்துடன்கூடிய ஜலதோஷம் • ஃப்ளு • டெங்கு.



அளவு:

பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் இதே அளவில் உபயோகிக்கவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொல்படி.

A.G.36,66 TAM

'ஆஸ்ப்ரோ' வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

16

எப்போது ரயில் புறப்பட்டது என்பதே நாணுவுக்குத் தெரியாது. பாருக்குட்டிக்காக அவன் நெஞ்சிலே மணற்கேணியாகச் சுரக்கும் இந்த அன்புக்கு என்ன அர்த்தம்? ஒரு நொடிக்குள் இவ்வளவு அருகே வந்து விட்ட அவள் யார்?

கேள்விக்கு விடை காணும் முயற்சியிலே நாணு நிம்மதியாகத் தூங்கிப் போனான். தூக்கத்தில் நெஞ்சை அடைகாத்து அது பொரித்த கனவுக் குஞ்சுகளுக்குத் தாபங்களையும் ஆற்றாமையையும் தீனியாகப் போட்டு அவை மெல்லப் பறக்க முயல்வது கண்டு மகிழ்ந்து அவற்றைக் கொத்த வரும் கழுகுகளை விரட்டப் போராடி, மீண்டும் அவன் கண் விழித்த பொழுது வெளியிலே நிலவு இல்லை, கதிரவனின் செவ்வட்டமே கீழ்வானில் தெரிந்தது.

வேளுருக்கு வந்த அன்று வெளுத்த அதே கிழக்குத் தான் இன்றும் வெளுக்கிறது! அன்று கிழக்கு மட்டுமே வெளுத்தது. இப்போது மனமும் வெளுக்கிறதோ!

எதிரே கிழவர் உட்கார்ந்திருந்தார். பாருக் குட்டி அவர் அருகில் பலகையில் தலை சாய்த்து உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிக் கொண்டிருந்தாள்! அவள் எப்போது எழுந்து அந்தப் பக்கம் போனாளோ, அவனுக்குத் தெரியாது. தன் அருகில் அவள் அமர்ந்திருந்த இடம் காலியாக இருந்ததைக் காண நாணுவுக்கு என்னவோ போல் இருந்தது.

அதற்கேற்றாற்போல் கிழவரின் பார்வை அவனை அளக்க முயல்வது போல் உற்றுப் பார்த்தது. ''ஸாரே......'' என்றார் அவர்.

''என்ன தாத்தா?''

''இவளை நான் என்ன செய்யட்டும்...?''

திடீரென்று கூறிய இந்தக் கேள்வி நாணுவைத் திணற அடித்தே விட்டது. என்ன செய்ய முடியும்?

''பிறந்தது முதலே இவளை வளர்க்க நான் படுகிற பாடு. அந்தக் குருவாயூரப்பனுக்குத்தான் தெரியும்.... எதற்கும் அடங்காத பெண் ஜன்மம் இது. கல்யாணம் கட்டிக் கொடுத்தும் என் கஷ்டம் தீரவில்லையே! ஸ்வாமி, இந்தக் கிழவனின் சீட்டைச் சீக்கிரம் இழுத்து எறி என்று கதறுகிறேன். அவருக்குக் கேட்கவில்லையே !.... குருவாயூரப்பன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ! இந்தப் பெண்ணை எனக்கு எமனாவான் போலிருக்கு.''



கிழவர் பொருமினார். அவருடைய பேதைமையைவிட அதைக் கண்டு அருகும் அவருடைய ஆயாசம்தான் நாணுவுக்கு வியப்பைத் தந்தது. அவளோ குழந்தை போலத் தூங்கினாள்! இதழும், இமையும் இடையில் உள்ள நாசியும் அவளுக்கென்றே ஒரு தனித்த அழகை ஏந்திக் காவல் புரிந்தன!

"வயசாகி விட்டது. கல்யாணமும் கழிந்தாகி விட்டது. ஒரு குடும்பப் பொறுப்பு. நல்லது கெட்டது உற்றார் அயலார் தெரிந்து பழக வேண்டிய பெண் இப்படிச் சிரிப்பதும் கண்டவர்களிடமெல்லாம் பேசுவதும் நன்றாக இருக்குமா?" என்று கிழவர் தொடர்ந்தார்.

மறைமுகமாக இந்தத் தாக்குதல் தன்மீது படர்வதைக் கண்ட நாணு அவருக்கு ஆறுதல் கூற முற்பட்டான். "கவலைப்படாதீர்கள், தாத்தா.... மனசிலே துளிக்கூட வஞ்சனையில்லாத மனிதப் பிறவி உலகத்திலே அற்று விட்டதோ என்று நான் நினைத்ததுண்டு. பாருக் குட்டியைப் பார்த்ததும் எனக்குத் தெம்பு வந்திருக்கிறது. ஆனால் அவளைப் புரிந்து



சொல்வது கஷ்டம். பெண் ஜன்மம், அதிலும் அழகானவள் என்றால் ஊர் பலவிதமாகப் பேசும்தான்'' என்றான். அவனுக்கு என்னவோ நூறு வயது ஆன மாதிரி பேச்சு வெளிப்பட்டது. பாரு சொன்னது போல் மனசுக்குள் இருந்து கிழவன் பேசுகிறானோ?

''அதேதான். இது தனிப் பிறவி. ஊராருக்கு அது புரியாதல்லவா? ஒரு மொண்டி மொட்டமாப் பிறந்திருக்கக் கூடாதா இவள்? அழகாக வேறு இருக்கிறாள். அம்மு பட்ட கஷ்டம் இவளும் படறாளே!'' என்ற கிழவர் கதை சொல்லத் தயாராகி விட்டார். ''அதே கஷ்டம்.... புருஷன் இவளைக் கொலை செய்து விடுவான் போலிருக்கிறது! இவனுக்கு அவளைக் கண்டாலே பிடிக்கவில்லையாம். தாலி சம்பந்தம் விட்டுப் போகுமா?....'டைவர்ஸ்' போடலாம் என்று கட்சி பேசுகிறான். ராமா! கிருஷ்ண குருப் வம்சத்திலே இந்தக் கன்னறாவியெல்லாம் இது வரையில் இல்லே.....''

''தாத்தா.... காலம் மாறிக் கொண்டே வருகிறது. பார்க்கப் போனால் சக்திதான் பெண் வடிவமாகப் பிறக்கிறது. அதை அவமதித்து ஆண்மை தனித்து வாழ முடியாது. பாருக்குட்டியின் மனம் போல அவளை வாழ விடுங்கள். அப்புறம் நடப்பதெல்லாம் குருவாயூரப்பன் செயல்!'' என்றான் நாணு. நாணுவா? இல்லை; அவன் உள்ளத்துள்ளே ஒளிந்திருந்த மனக் கிழவன்!

அப்பொழுது கிழவரின் முகம் மலர்ந்ததைப் பார்க்க வேண்டுமே!

பாருக் குட்டி விழித்துக் கொண்டு கொட்டக் கொட்ட இருவரையும் பார்த்துச் சிரித்தாள். ''அய்ய! ரொம்ப நேரம் தூங்கி விட்டேன், இல்லையா?'' என்றாள்.

''அதனுலென்ன? இன்னும் தூங்கலாம்'' என்றான் நாணு.

''போங்க, நாராயண்.... கேலி செய்றீங்க!'' என்று சிணுங்கி விட்டுக் கிழவரைப் பார்த்து, ''தாத்தா, பசிக்குது'' என்றாள்.

நாணு தன் பையிலிருந்து பலகார மூட்டையை எடுத்தான். அவளிடம் கொடுத்தவாறே, ''எங்களுக்குப் பகிர்ந்து கொடு, பாருக்குட்டி'' என்றான்.

''கொடுக்கணுமா? ஸ்வீட்டெல்லாம்—நல்லா இருக்குதே. காரம்கூட ஜோர்..... தாத்தா, சாப்பிடறீங்களா? தாத்தாவுக்குப் பல் இல்லே. வெத்திலைக் கொட்டாலைக் கொடுங்க தாத்தா.... நான் பொடி செய்து தரேன்...... டொக்.... டொக்.....''

நாணு அவள் கொடுத்த பலகாரங்களைச் சாப்பிட்டான். அவள் கைபட்டதால் புதுச் சுவை கூடியிருந்தாற்போல் இருந்தது.

கன்னிக்கோட்டை நெருங்கிற்று. அவன் விடைபெற்றுக் கொண்ட போது, பாருக்குட்டி வேண்டுகோள் விடுத்தாள். ''நாராயண்! இதோ எங்கள் வீட்டு விலாசம். ஊருக்குத் திரும்புவதற்கு முன்னால் கட்டாயம் ஒரு முறை வந்து போக வேண்டும்..... தாத்தா! நீங்களும் சொல்லுங்க, தாத்தா.''

''ஆமாம், நாராயணு.... வயசிலே சின்னவனானாலும் நீ ரொம்பப் புத்திசாலி. இந்த அசட்டுப் பெண்ணுக்குப் புத்திசொல்லி விட்டுப் போவதற்காவது ஒரு தடவை வாப்பா'' என்றார் கிழவர்.

''கட்டாயம் வரேன், மிஸ்டர் குருப். வரேன், பாருக்குட்டி.''

ரயில் நிலையத்தில் ஐந்தாறு தோழர்கள் அவனுக்கு மாலையிட்டு வரவேற்றார்கள். இதைப் பார்த்த பாருக்குட்டியும் கையைப் பலமாகத் தட்டினாள்; ரயில் நிலையத்திலிருந்து வண்டி புறப்பட்ட பொழுது கையை ஆட்டி அவனுக்கு விடையும் தந்தாள்.

தொழிற்சங்க நிர்வாகிகள் அங்கே பல அரசியல் கட்சிகளின் தலைவர்களது கைப்பாட்கள் போல இயங்கிக் கொண்டிருந்தார்கள். பலப் போட்டியெல்லாம் தொழிலாளர் நலனுக்காக அல்லாமல் கட்சிகளின் நலனுக்காக நிகழ்ந்தன. ஒருசிலருக்குச் சலுகையும் வேலைவாய்ப்பும்கூடச் சங்கத்தால் போராடிப் பெற வேண்டிய அவசியத்தை இந்தக் கட்சி அமைப்பு உண்டாக்கியிருந்தது. முற்றும் தவறான இந்தப் போக்கை எவ்வாறு திருத்துவது என்று நாணுவுக்குப் புரியவில்லை.


''கேரளத்துக்காரர்கள் நன்றாகப் படித்தவர்கள் என்று உலகமே சொல்கிறது. அதிகம் படித்ததினாலோ இந்தக் கோளாறு?'' என்று கேட்டான் நாணு. பிறகு சொன்னான், ''தோழர்களே, நமக்கு ஒரே கட்சிதான் உண்டு. ஒரே ஒரு தலைவன்தான் உண்டு. அந்தக் கட்சி, அந்தக் குரல், அந்தத் தலைவன் யார் தெரியுமா? வயிற்றுப் பசிதான் நம் கட்சி. இந்த உலகிலே வயிறு இல்லாத மனிதனை எங்காவது பார்த்திருக்கிறீர்களா? சர்வலோகத்திலும் உள்ள சர்வ ஜீவன்களுக்கும் வயிறு உண்டு; பசி உண்டு; இது ஆற வேண்டும் என்கிற அடிப்படை நோக்கமே நமது கட்சியின் நோக்கம். நமது குரல் எது தெரியுமா? அன்பின் குரல். நமது தலைவன் யார் தெரியுமா? இந்தப் பசிக்கும் அன்புக்கும் பாதை வகுக்கும் அறிவு....''

கூட்டத்தில் ஒரு பகுதி கைதட்டி ஆரவாரித்தது. மறு பகுதி முணுமுணுத்தது.

''நண்பர்களே, நான் பேசுவது தவறென்றால் மன்னியுங்கள். நீங்கள் உங்கள் கோஷ்டி நலனை எண்ணுகிறீர்கள். கோஷ்டியின் பலம் மட்டுமே நாட்டமாகக் கொண்டு விட்டீர்கள். பொதுவாக எந்தக் கட்சியின் ஆக்கிரமிப்பும் தொழிற்சங்க அமைப்புக்குக் கேடுதல் விளைவிக்கும் என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். கோஷ்டி வளரப் பாடுபடுவதும், வேண்டியவர்களுக்கு உரிமை வழங்கிக் கட்சியைக் கட்டுவதுமே நம் வேலையாகப் போகக் கூடாது. நம் சமுதாயத்தின் ஒருமித்த அன்பின் குரலுக்கு ஆக்கம் தரும் அறிவுப் பாதையில் செல்லுங்கள்.''

கோஷ்டித் தலைவர்களை நாணு தனித் தனியே சந்தித்தான். அவர்கள் கோஷ்டி மனப்பான்மையில் ஊறியவர்களாதலால் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை அவர்களிடம் காண முடியவில்லை. குஞ்சுராமன் கோஷ்டி முரட்டுப் பாதையில் போயிற்று. அரிவாளும் தடியும் ஆயுதங்களாகக்கொண்டு போராடி ஒரு புது அரசாட்சியே அமைக்

இற வேகம் அவர்களிடம் இருந்தது. குன்னி குட்டன் கோஷ்டி ஊரின் சில பெரிய மனிதர்களால் ஆட்டுவிக்கப்பட்டது. சங்கு வின் ஆட்கள் சாத்விகமானவர்கள். ஆனால் அவர்களுக்கும் தங்கள் கட்சி மனப்பான்மைதான் பிரதானம்.



திருப்பதி வேங்கடேசப் பெருமான்தான் அந்தப் பிரபு.

நாணு தொடர்ந்து பேசினான். வாதாடினான்.

மூன்று கோஷ்டித் தலைவர்களையும் கூட்டிப் பேச ஏற்பாடு செய்துவிட்டு, இரண்டு நாட்கள் தலைவலி தீரப் பாருக்குட்டியின் அழைப்பை ஏற்கலாமென்று புறப்பட்டான்.

ஊரின் தெற்கே ஒரு தோட்டத்துக்கு நடுவே கிழவரின் வீடு இருந்தது. சில பலா மரங்கள், ஒரு சிறு குளம், பல புஷ்பச் செடிகள் தோட்டத்துக்கு விளிம்பு கட்டி யிருந்தன.

"தாத்தோவ், யார் வந்திருக்கிறது, பாருங்க!" என்று கூவினாள் பாருக்குட்டி, அவனைக் கண்டதும்.

"தெரியுமே.... இரண்டு நாளா உன்னுக்கும் வாசலுக்குமா குட்டி போட்ட பூனை மாதிரி தவிச்சுக்கிட்டே கிடந்தாயே குட்டி. வந்த மனுசனுக்கு என்ன தரப் போறே?" என்றார் கிழவர், உள்ளிருந்து வந்தவாறே.

பாருக்குட்டி சிரித்தபடியே, "நான் எதுவும் தரப் போறதில்லே, தாத்தா.... நாராயண கிட்டே வாங்கத்தான் போறேன்" என்றாள்.

"அடி, சக்கைன்னுனும்!"

"பொடிமட்டைன்னுனும்!" பாருக்குட்டி முடித்தாள்.

ஒரு கட்டிலை எடுத்துப் போட்டார் கிழவர். உட்கார்ந்தான் நாணு.



அந்தக் கவிஞர் கவிமணியேதான்

"எப்போது ஊருக்குப் போகப் போகிறீர்கள்?" பாருக்குட்டி கேட்ட அடுத்த கேள்வி இது.

கிழவர், "ஏய் குட்டி, வந்தவர்களை இரண்டு நாள் இருங்கன்னு சொல்வதா, எப்ப ஊருக்குப் போறீங்கன்னு கேட்பதா?" என்று கடிந்து கொண்டார்.

"கேட்டால் என்னவாம்?.. போங்க, தாத்தா."

"நான் போறேன். போய்த் தேத் தண்ணீர் கொண்டு வரேன். நீ இனிமே நகருவியா இங்கிருந்து?" என்று கேட்ட கிழவர் சிரித்துக் கொண்டே உள்ளே போனார். வண்டியில் வரும்போது அவனைப்பற்றிக் கவலைப்பட்டுக் குமுறி அழுத கிழவராகவே இப்பொழுது அவரைப் பார்த்தால் தெரியவில்லை.

"எனக்கு என்ன தரப் போறீங்க?" என்று கேட்டாள் பாருக்குட்டி.

"என்ன வேண்டும்?"

"சொல்லட்டுமா?"

"சொல், பாருக்குட்டி."

"எனக்கு நீங்கதான் வேணும்."

தூக்கி வாரிப் போட்டது நாணுவுக்கு. நெஞ்சுக்குள் கல் அமிழ்வது போலிருந்தது. கண்ணுக்குள் காது, மூக்கு எல்லாமே அமிழ்வதுபோலிருந்தன. மூச்சு நின்றது.

அவனுடைய இந்த உபாதைகளை உணராத பாருக்குட்டி, சிரித்தபடியே தொடர்ந்தாள். "உங்க முகத்திலே அன்னிக்கு முழிச்ச தினுலே இரண்டு நாளா அதிர்ஷ்டம் எனக்கு. நீங்க இங்கேயே இருந்தா தினமும் உங்க முகத்திலே முழிக்கலாம் இல்லையா?"

கிழவர் தேத் தண்ணீர் கொணர்ந்தார். அவரையும் அந்த அதிர்ஷ்ட வியூகம் வளைத்துக் கொண்டிருந்ததென்று தெரிந்தது... "அதென்னவோ உன்னைப் பார்த்த ராசி தான்னு சொல்லணும், நாராயண. பாருக்குட்டியின் புருஷன் இரண்டு நாட்களா அவனிடம் உயிராய் இருக்கிறான். அடிதடியையே காணேம். இதுவும் பல்லே இளிச்சுக்கிட்டு நிற்கிறது" என்றார்.

"போங்க தாத்தா. குஞ்சுராமன்தான் பல்லை இளிக்குது.நான் இல்லே" என்று மறுத்தாள் பாருக் குட்டி.

"ஏய், குட்டி! பர்த்தா பேரைச் சொல்லக் கூடாது. தெரிஞ்சுக்கோ!"

"சொன்னு என்ன?"

"நான் சொல்லுவேன். ஊரே முழக்குதே, 'குஞ்சுராமன்கோஷ்டிக்கு ஜே'ன்னு. நான் சொன்னு என்னவாம்?"

நாணு ஒரு கணம் அந்த ஜெயகோஷத்தைக் காதில் கேட்டான். "குஞ்சுராமனுக்கு ஜே! குன்னிகுட்டன் ஒழிக! சங்கு ஒழிக!" என்ற ஒலியலையைக் கேட்ட பழைய காதில் புது சுருதி கேட்டது. மறு கணம், 'அப்படியும் இருக்குமோ!' என்கிற ஐயம் எழவே அவளைப் பார்த்தான்.

அதற்கு அடுத்தகணமே ஐயம் நீங்கிற்று. குஞ்சுராமனே நுழைந்தான் தோட்டத்துக்குள். நாணுவைக் கண்டதும், "வாருங்கள்" என்று கையைக் கூப்பினான்.

"பாருக்குட்டி உங்கள் மனைவியா குஞ்சுராமன்?" என்று அவனைக் கேட்டான் நாணு.

ஒரு கோஷ்டியின் தலைவனாகவும், அவளது கள்ளிக்கோட்டை விஜயத்துக்குப் பிரதான காரணகர்த்தாவாகவும் விளங்கிய அந்தக் குஞ்சுராமனே அவளுடைய கணவனாக அமைந்தது இறைவனின் சூழ்ச்சியாக இருக்குமோ?

"குட்டி, தலைவருக்குச் சக்கப் பிரதமன் செய்தாயா?" என்று கேட்டான் குஞ்சு ராமன்.

"ஓ, அசலாய்ட்டுச் சக்கப் பிரதமன். நேந்திரன் வறுவல், காளைப் புளிசேரி எல்லாம் செய்திருக்கேன்."

"பாருவின் சமையலை நீங்க சாப்பிட்டது இல்லையே!.... நள பாகமாக இருக்கும்" என்று புகழ்ந்தான் குஞ்சுராமன்.

"அய்ய, நீயே சாப்பிட்டதில்லே! ஏன் பொய் சொல்றே?" என்றாள் பாருக்குட்டி, அவனைப் பார்த்து.

குட்டு உடைபட்டுப் போகவே குஞ்சுராமனுக்கு முகம் சிறுத்தது; கறுத்தது.

விருந்தோ நெஞ்சை நிறைத்தது. நள பாகமோ, என்னவோ, அது நாணுவுக்கு உளபாகமாக இனித்தது. குஞ்சுராமன் அளவுக்கு மீறித் தன்னை உபசரிப்பதும் அதே போல் அளவுக்கு மீறிப் பாருக்குட்டியிடம் அன்பு பாராட்டுவதும்தான் என்ன பாகமென்று தெரியவில்லை.

என்ன உறவு இது? எப்படி வந்தது?

அவளுடைய அழகின் முழுமைகளுள்ளிருந்து களங்கமற்ற சிரிப்பு வந்ததே,— ரோஜா மலருக்குள்ளிருந்து மணம் விரிவது போல, அதுதான் அவனை ஈர்த்ததோ?

அழகின் மணம்தான் அந்தச் சிரிப்பா? மனத்தின் மணமே அழகாய் மலர, அழகின் மணமே நகையாய் உதிர்கிறதோ?

அதை ரசிப்பது எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. அழகான பொருள்களுக்கு அழகு தான் பண்பு; அதுவேதான் பயன். அழகாக இருப்பதற்கென்றே அவை அழகாக மலர்கின்றன. அந்த அழகில் சில நுகரத்தக்கனவாகவும், சில கண்டு மகிழத்தக்கனவாகவும் உள்ளன. மலர்ச்சியிலும் வாட்டம் உண்டு. வாட்டத்திலும் மலர்ச்சி உண்டு போலும்.

சே! அழகை ரசிக்கிறவன் மலரைப் பறித்துக் கசக்குவானா! இதழ்களை உதிர்த்தும் பன்னீர் ஊற்றி, குல்கந்து செய்கிற ரசனை நாணுவுக்குப் பிடிக்காது. மலர்வதற்கு உதவும் இயற்கை வாடுவதற்கும் உதவட்டும். மனிதக் கரங்கள் இந்த மலர்களை நாசம் செய்யலாகுமா ?

இவ்வாறெல்லாம் அந்த நட்பின் பாங்கை வியந்து பாராட்டியவண்ணம் நாணு அந்தத் தோட்டத்திலேயே கட்டிலைப் போட்டுக் கொண்டு படுத்தான். முசாபரி பங்களாவை விட இந்த இடம் சுகமாக இருந்தது. கிழவர் திண்ணையில் முடங்கிக் கொண்டார். குஞ்சு ராமன் போய் விட்டான்.

நள்ளிரவில் யாரோ கட்டிலை நோக்கி, வருவது போல் தோன்றவே நாணு கண் விழித்தான். தென்னை ஓலைகளினூடே வந்த நிலவொளியில், உலையில் உருகும் தங்கம் போல. பாருக் குட்டிதான் அவ்வாறு வந்தவள் என்று தெரிந்ததும் திடுக்கிட்டுப் போய் எழுந்தான்.

"என்ன இது, பாருக்குட்டி?"

அவள் பதில் சொல்லவில்லை.

"உன் புருஷன் எங்கே?"

"அது வெளியே போயிருக்கிறது."

"அது திரும்பி வருவதற்குள் போய்விடு."

"ஏன் ?"

"பார்த்தால் உனக்கு நல்லதில்லை..... அடிபடுவாய் !"

"உக்கும். நான் ஏன் அடிபடறேன்? அது தானே என்னை அனுப்பிச்சுது!"

நாணுவின் வாய் பிளந்துவிட்டது. அருகே ஓடும் புனல் அனலாய்க் கொதிக்கிறதே! அவளுடைய வருகை புதிராய் அல்லவா இருந்தது!

"நாராயண், நீங்க எனக்கு ஓர் உதவி செய்வீங்களா?"

"முடிந்தால் செய்வேன். இதோ பார். உன் புருஷனின் தேர்தல் விஷயமாக இருந்தால் தயவுசெய்து எதுவும் பேசாதே. பேசினால் இப்போதே புறப்பட்டுப் போய்விடுவேன்." நாணு குஞ்சுராமனை எடை போட்டு விட்ட தீர்மானமான குரலில் பேசினான்.

"அட, உங்களுக்கு எப்படித் தெரிந்தது? குஞ்சு ராமன் சொல்லிற்றா?" என்று கேட்டாள் அப்பாவிப் பாருக்குட்டி.

"இல்லை.... இதை அவன் சொல்லித்தான் நான் தெரிந்து கொள்ள வேண்டுமா? நீ வந்திருப்பதே சொல்கிறதே அதை! பேதைப் பெண்ணே, இந்த வேளையில் இப்படித் தனியாக ஓர் அந்நியனிடம் வரலாமா?"

"நீங்க அந்நியரா?.... உக்கும்..." அவள் சிணுங்கினாள்.

தலைக்கு மேல் நிலவு சொக்கியது. எதிரே இளமை சிரித்தது. நாணு ஒரு கணம் தடுமாறிப் போனான்.

"நாராயண்!"

"என்ன?"

"குஞ்சுராமனுக்குப் பணம் வேணுமாம், உங்களிடம் வாங்கித் தரச் சொல்லுது."

"என்னிடமா, பாருக்குட்டி, உன் புருஷன் இவ்வளவு தாழ்ந்தவனா?"

"ஏன், குஞ்சுராமனுக்கு என்ன, நாராயண். அது நல்லதுதான். கொஞ்சம் முரடு கோபம் ஜாஸ்தி.... அவ்வளவுதான்."

நாணு அவளுடைய பேதைமையை எண்ணி வருந்தினான். அவளுக்கு எதுவுமே விளங்காதோ! இந்த வேளைக்கும் வேண்டுகோளுக்கும் என்ன அர்த்தம் என்பது விளங்காமல் அசடாக இருக்கிறாளே! நல்ல வேளை, கிழவர் தூங்கிக் கொண்டுதான் இருந்தார்.

"பணம் வேண்டுமானால் தருகிறேன், பாருக்குட்டி. ஆனால் நீ அதைக் குஞ்சுராமனிடம் கொடுக்கக் கூடாது."

"எனக்கு எதுக்குப் பணம்? உங்களுக்குக் கொஞ்சம்கூடப் புரிய மாட்டேங்குதே..... நாராயண்.... குஞ்சுதானே பணம் கேட்குது. தேர்தல் செலவுக்கு நிதி திரட்டுதாம்."

"அந்த வேலையை விட்டுவிட்டு நீதியைத் திரட்டச் சொல்லு, உன் புருஷனை!"

"தாங்கன்னு என்னவோ சொல்றீங்களே!"

"தரமாட்டேன்."


HIMA
DEHYDRATED
PEAS
சுவைத்திராத
இனிமையோடு, சொல்லொணாப்
பசுமை நயமுள்ள பட்டாணி...
ஹிமா பட்டாணி
பருவம் மாறினும் பசுமை மாறாத பட்டாணி
எந்த காலமும் எடுத்துச் சமைப்பதற்கேற்ற பசுமைச் சுவையுடன் சித்திரை முதல் பங்குனி வரை புத்தம்புதிதாக கிடைக்கப்பெறுகிறது முத்துமுத்தான ஹிமா பட்டாணி. காரணம், பறித்தெடுத்த சுருக்கோடு உலர்பதமாகிக் காற்றுப் புகாத பொட்டணங்களுள் உடனடியாக அடைக்கப்படுகின்றது. ஒரு ஹிமா பொட்டணம் என்றால், ஒரு கால் கிலோ அளவுக்கு மேல் பூரித்துக் கொழிக்கும் பட்டாணி. தோட்டத்திய மணித் திரள்கள். கறி, கூட்டு... எதற்காயினும் சரி, பசுமையும் சேர்ப்பது ஹிமா பட்டாணி.
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
ஹிமா
லின்டாஸ்-HMAP. 4-77 TM



ஹெர்குலிஸ்

வெறும் சைக்கிள்
மட்டுமன்று—
வாழ்நாள் முழுதும்
உழைக்கும் ஓர் உறுதுணை

அவர்களுக்கு—ஹெர்குலிஸுக்கும் அதன் சொந்தக்காரருக்கும்—பதவி உயர்வு கிடைத்தது நியாயமே. எத்தனை வருஷக் கடினமான உழைப்பு!

நீங்கள் ஒரு ஹெர்குலிஸ் சைக்கிள் வாங்கும்போது உங்கள் வாழ்க்கையுடன் அது ஒன்றிவிடுகிறது. ஆண்டுகள் செல்லச் செல்ல உங்கள் வாழ்க்கை மாறும் ... உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்... உங்கள் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாவார்கள். ஆனால் உங்கள் ஹெர்குலிஸ் எப்போதும் உங்களுடனேயே இருக்கும்—எப்போதும் நன்கு பணி புரிந்தபடி இருக்கும்.

டி.ஐ.சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ் 53

உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை

JWT-TIC H-2961

"மாட்டீங்களா?"

"மாட்டேன்."

"அப்புறம் நானே எடுத்துக் கொள்வேன்."

"பாருக்குட்டி."

அவன் அவனுடைய சட்டைப் பையில் கைவிட்டு அந்தக் கவரை எடுத்துக் கொண்டான். "இதிலே தான் பணம் இருக்கு. எனக்குத் தெரியும். ரயிலிலே எடுத்துப் பார்த்தீங்களே!" என்றான். பிறகு ஒரே ஓட்டமாக வீட்டினுள் ஓடி விட்டாள். நாணு அவளைத் தொடர எழுந்தபோது குஞ்சுராமன் உள்ளே நுழையவே நின்று விட்டான்.

நாணுவால் தாங்க முடியவில்லை. அவன் நினைத்தது போலவே பணத்தைப் பிடுங்கிக் கொண்டு குஞ்சுராமன் போய் விட்டான். அதன்பொருட்டே இரண்டு நாட்களாக அவன் அசட்டு மனைவியிடம் அன்பு காட்டினான் என்பதை நாணு புரிந்து கொண்டான்.



நடிகை: மூன்று வருஷம் என் பிறந்த நாளுக்காக வெள்ளிக் குத்துவிளக்கு பரிசு தந்தீர்கள். போன வருஷம் வெள்ளி டம்ளர் கொடுத்தீர்கள். இப்ப என்ன பரிசு எனக்கு?

படாதிபதி: ஒரு சினிமா பாஸ்!

பாருக்குட்டி மறுபடியும் வந்தாள். வருவாள் என்று நாணுவுக்குத் தெரியும். நின்றான். நிற்பாள் என்றும் அவனுக்குத் தெரியும். நாணு கவனியாதவன் போல அரைக் கண்ணால் பார்த்தான். அவள் கண்களில் நீர் சுரந்து, சுரந்து கன்னம் வழியே உருண்டது.

"ஏன் அழுகிறாய்?" என்றான் நாணு.

"அய்யா...அய்யா...தந்திரம் பலிக்குது!" என்றவாறே அவள் உட்கார்ந்தாள் தரையில்.

"தந்திரமா? உனக்குத் தந்திரம்கூடத் தெரியுமா?"

"தெரியும்."

"நிஜமாகவா?"

"குஞ்சு சொல்லிக் கொடுத்தது. நீ போய் அழுது பிடிவாதம் பிடிச்சியானா அவர் ஒத்துக் கொள்வார்னு சொல்லிச்சு. நாராயண், தேர்தலிலே குஞ்சுராமன் ஜெயிக்கிறதுக்கு வழி செய்யுங்க."

நாணு உடம்பை, நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான். குஞ்சுராமன் தலைவனாக விரும்புகிறான்! ஒரு பாமரனுக்கு இருக்கும் தன்மானத்தில் சிறிதும் இல்லாத இவனா தலைவன் ஆவான்? தன் மனைவியின் நல்ல கணவனாக வாழ முடியாத ஒருவன் ஒரு நிர்வாகத்தின் தலைமைக்குத் தகுதி பெற முடியுமா? மனைவியை அனுப்பிச் சிபாரிசும் பணமும் பெறத் திட்டமிடும் கயவன் தலைவனானால் இயக்கம் ஏது, ஆட்சி ஏது? நலன் ஏது? சேவை செய்யப் புறப்படும் அழகு நன்றாகத்தான் இருக்கிறது!

"பாருக்குட்டி. நான் உன் கணவனுக்குத் தர முடிந்தது பணம் தான். குணத்தைத் தர என்னால் மட்டுமில்லே, கடவுளாலும் ஆகாது. அதை ஒருவேளை நீ தரலாம். ஊஹூம்.... உன்னாலும் தர முடியாது.... இத்தகைய புருஷனுக்காக வாதாட வேண்டிய அவசியத்துக்காகவே கடவுள் உன்னைக் குழந்தையாகப் படைத்து விட்டார் போல் இருக்கிறது.... போ, உள்ளே போய்ப் படு. தேர்தல் நடக்கிறபடி நடக்கும். உனக்காகவோ, எனக்காகவோ நான் எதுவும் செய்ய முடியாது; செய்யவும் கூடாது."

அவள் ஒன்றும் சொல்லவில்லை. வழக்கமான சிணுங்கலோ, சிரிப்போ இன்றி அவனைப் பார்த்தாள். பிறகு தன்னையும் மீறிப் பாய்ந்த ஏதோ ஓர் உணர்வின் காரணமாகவோ அல்லது அவனுடைய பேச்சில் இருந்த ஏதோ ஒன்றைப் புரிந்து கொண்ட காரணமாகவோ அவள் விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

"அழாதே, எழுந்திரு."

"நான் அழவில்லையே, சிரிக்கிறேன் நாராயண்.... நீங்கள் இங்கேயே இருங்களேன். நீங்கள் பக்கத்திலேயே இருந்தால் எனக்கு ஆனந்தமாக இருக்கிறது."

நாணு பெருமூச்சு விட்டான். இதற்குக் காரணமாக இருந்த அவளுடைய கணவன் இந்நேரம் பணத்தைத் திரட்டிய பெருமையில் எங்கோ சிரித்துக் கொண்டிருப்பதும் புரிந்தது.

"ஆகட்டும், பாருக்குட்டி. நான் உன் அருகில் இருப்பேன்.... என் மனசு இங்கேயே தான் இருக்கும்" என்றான் நாணு ஆறுதலாக.

அவனுக்கே தெரியாமல் இவ்வாறு ஓர் அபலையின் வாழ்வில் நெருங்கித் துணை புரியும் சந்தர்ப்பம் வந்து விட்டது. இது காறும் அவனை உலகம் பார்த்தது. அவனுக்காக வாதாட, கவலைப்பட, அவன் மீது அன்பு சொரியப் பலர் இருந்தார்கள். இப்போதோ அவன் வளர்ந்து விட்டான். உலகத்தைப் பார்க்கத் தொடங்கி விட்டான். பிறருக்காக வாதாட, கவலைப்பட, பிறரிடம் அன்பு சொரிய அவன் தகுதி பெற்றுவிட்டான்!

நிலவு இல்லை வானத்தில்.

ஒளி இல்லை தரையில்.

"நாழியாகிறது. நீ போய்ப் படுத்துத் தூங்கு, பாருக்குட்டி" என்றான் அவன்.

"இங்கேயே தூங்கப் போகிறேன்" என்றாள் அவள்.

அவளை அவன் தடுக்கவில்லை. படுத்ததும் அவள் தூங்கியும் போனாள். கனவிலும் சிரிப்பா! அந்த மலர் முகம் நிலவொளியில் மின்னிற்று!

(தொடரும்)

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் ஒரு நாள் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தான். ஒவ்வொரு காரியத்தையும் தொடங்குவதற்குச் சரியான சமயம் எது? எப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து தான் வேலை செய்ய வேண்டும்? எப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து வேலை செய்யக் கூடாது? தான் மேற்கொள்ளும் காரியங்களில் எது மிகவும் முக்கியமானது? எந்தக் காரியத்தில் தனக்கு ஒரு

- உலகப் புகழ்பெற்ற ரஷ்ய இலக்கிய மேதையான லியோ டால்ஸ்டாய், இந்த அற்புதமான கதையை இருமுறை எழுதியிருக்கிறார். முதலில் சுருக்கமாகவும், சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் இங்கே காணப்படும் இந்த உருவிலும் எழுதினார். சுருங்கிய வடிவில் இந்தக் கதையைப் படித்த லெஸ்கோவ் என்ற மற்றொரு ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் மகானிடம் அனுமதி பெற்று இந்தக் கதையின் மையக் கருத்தை வைத்துக் கொண்டு தாமாக ஒரு கதையை எழுதினார் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. இது ரஷ்யக் கதையானாலும் இந்தியக் கதை போலவே இருக்கிறது. பாரத நாட்டின் தர்மங்களையும் கோட்பாடுகளையுமே இந்த அரிய கதையில் காண்கிறோம்.



மூன்று

போதும் தோல்வி ஏற்படாது? இவற்றையெல்லாம் தெரிந்து கொள்வது எப்படி என்று அரசன் யோசித்தான். நெடுநேரம் யோசித்துப் பார்த்துவிட்டு, தன் ராஜ்யத்தில் வாழும் எல்லா மக்களுக்கும் பின்கண்டவாறு அறிவித்தான்:

''ஒவ்வொரு காரியத்தையும் செய்வதற்குரிய சரியான சமயத்தை அறிந்து கொள்வது எப்படி?

''மிக மிக அவசியமானவர்கள் யார் என்பதை அறிவது எப்படி?

''எல்லாக் காரியங்களையும்விட மிக மிக முக்கியமான காரியம் எது என்பதை அறிந்து கொள்வதில் தவறு நேராமல் பார்த்துக் கொள்வது எப்படி?

''—இந்த மூன்றையும் எனக்கு யார் தெரிவித்தாலும் அவர்களுக்கு மிகப் பெரிய வெகுமதி அளிக்கிறேன்.''

முதல் கேள்விக்குச் சிலர் பின்வருமாறு விடை கூறினர்: ''ஒவ்வொரு காரியத்தையும் செய்வதற்குரிய சரியான சமயத்தை அறிந்துகொள்ள, ஒவ்வொரு நாளுக்கும் மாதத்துக்கும் ஆண்டுக்கும் முன்கூட்டியே ஒரு திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும்; அந்தத் திட்டத்தினின்றும் சிறிதும் விலகாமல் காரியங்களைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொரு காரியத்தையும் உரிய காலத்தில் செய்து நிறைவேற்ற முடியும்.''

வேறு சிலர், ஒவ்வொரு காரியத்தையும் எப்பொழுது செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டித் தீர்மானிக்க இயலாது என்று கூறினர். சில்லறைப் பொழுது போக்குகளில் கவனத்தைச் சிதற விடாமல், உலகத்தில் நடைபெறும் அனைத்தையும் எப்பொழுதும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும், அப்புறம் அவசியமான காரியத்தைச் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

உலகில் நடைபெறும் காரியங்களை அரசர் எவ்வளவு தான் கவனித்துக் கொண்டிருந்தாலும், எந்தச் சமயத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதை ஒரு தனி மனிதர் முடிவு செய்வது எப்பொழுதுமே சரியாக இருந்துவிட முடியாது என்றும், எனவே அறிவாளிகளின் ஆலோசனையைக் கேட்டு அதன்படி எந்தச் சமயத்தில் செயலில் இறங்க வேண்டும் என்பதை அரசர் முடிவு செய்ய வேண்டும் என்றும் சிலர் சொன்னார்கள்.

மற்றும் சிலர், ஆலோசகர்களைக் கலந்து கொள்ள நேரமில்லாமல் போய்விடும் சந்தர்ப்பங்களும் உண்டு

என்றும், அப்பொழுது ஒரு காரியத்தைத் தொடங்குவதற்குரிய சமயத்தை அந்தக் கணத்திலேயே முடிவு செய்தாக வேண்டியிருக்கும் என்றும் சொன்னார்கள். அதனால், ஒரு காரியத்தை எப்பொழுது செய்வது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னால், என்ன காரியம் நடைபெறப் போகிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்; சகுனங்களைக் கொண்டுதான் இப்படி அறிந்துகொள்ள முடியும். ஆகவே, ஒவ்வொரு செயலுக்கும் உரிய சரியான சமயத்தை அறிய முதலில் சகுனங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

இரண்டாவது கேள்விக்கும் பல்வேறு விதமான பதில்கள் கிடைத்தன. அரசருக்கு மிகவும் அத்தியாவசியமானவர்கள் அவருடைய உதவியாளர்களே, அதாவது இளவரசர்களே என்று சிலர் கூறினர். வேறு

கேள்விகள்

டால்ஸ்டாய்

சிலர், அரசருக்கு அத்தியாவசியமானவை சகுனங்களே என்றார்கள். மற்றும் சிலர், அரசருக்கு அத்தியாவசியமானவர்கள் வைத்தியர்களே என்றும் , இன்னும் சிலர் போர் வீரர்களே என்றும் சொன்னார்கள்.

அப்புறம் மூன்றாவது கேள்வி: எது மிக மிக முக்கியமான காரியம்? சிலர் விஞ்ஞான சாஸ்திரமே உலகத்தில் மிகவும் முக்கியமானது என்றார்கள். வேறு சிலர், ராணுவ வித்தையே மிக மிக முக்கியம் என்று சொன்னார்கள். மற்றும் சிலர், கடவுளை வணங்குவதுதான் மிகமிக முக்கியமான காரியம் என்றனர்.

ஒவ்வொரு விடையும் ஒவ்வொரு விதமாக இருந்தது. அதனால் எந்த விடையையுமே அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை; யாருக்கும் வெகுமதி கொடுக்கவுமில்லை. தன்னுடைய கேள்விகளுக்குரிய சரியான விடைகளைத் தெரிந்து கொள்ள, மகா பெரிய ஞானி என்று அனைவராலும் புகழப்பட்ட ஒரு முனிவரிடம் போவதற்கு அரசன் தீர்மானித்தான்.

முனிவர் ஒரு காட்டில் வசித்து வந்தார். அதை விட்டு அவர் எங்கும் போவதில்லை. சாதாரண மக்கள் பார்க்க வந்தால்தான் முனிவர் பேசுவார். ஆகையால் அரசன் எளிய உடைகளை அணிந்து கொண்டான்; மெய்க்காவலர்களுடன் புறப்பட்டான்..... முனிவருடைய குடிசையை அடைவதற்கு முன் தன் குதிரையை விட்டு இறங்கி, தனியாகவே அவரைப் பார்க்கச் சென்றான்.

அரசன் அருகில் சென்று கொண்டிருந்த போது, முனிவர் தம்முடைய தோட்டத்தில் குழிகள் வெட்டிக் கொண்டிருந்தார். அரசனைப் பார்த்ததும் அவர் வரவேற்றார். உடனே குழிகள் வெட்டும் வேலையில் திரும்பவும் ஈடுபட்டார். முனிவர் வாடி மெலிந்து பலவீனமாக இருந்தார். மண்வெட்டியால் பூமியை வெட்டிச் சிறு மண் கட்டிகளைப் பெயர்க்கும் போது அவர் பெருமூச்சு விட்டார்.



அரசன் அவரிடம் சென்று பின்வருமாறு சொன்னான் :

''மகா ஞானியே! தங்களிடம் மூன்று கேள்விகளுக்கு விடை தெரிந்து கொண்டு போக நான் வந்திருக்கிறேன். ஒருவன் தன்னுடைய கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய சமயம் எது? அதாவது, அந்தச் சமயம் போய் விட்டதே என்று பின்னால் வருந்தாமல் இருக்க, ஒருவன் எந்தச் சமயத்தை நழுவ விடாமல் தன் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்?

''அடுத்தபடியாக, யார் மிகவும் அத்தியாவசியமானவர்கள்? அதாவது எப்படிப்பட்டவர்களுடன் சேர்ந்து ஒருவன் அதிகமாக வேலை செய்ய வேண்டும்?

''அப்புறம்: முக்கியமான காரியங்கள் யாவை ? அதாவது, பல காரியங்களில் ஒருவன் எதை முதலில் செய்ய வேண்டும்?''

அரசன் கூறியவற்றை முனிவர் கவனித்துக் கேட்டார். ஆனால் ஒரு பதிலும் சொல்லாமல், தம் கையில் துப்பிக் கொண்டு திரும்பவும் தரையைக் கொத்தத் தொடங்கினார்.

''தாங்கள் களைத்துப் போயிருக்கிறீர்கள். மண்வெட்டியை என்னிடம் கொடுங்கள்.

தங்களுக்காக நானும் கொஞ்சம் வேலை செய்கிறேன்'' என்றான் அரசன்.

''உனக்கு நன்றி கூறுகிறேன்'' என்று சொல்லிவிட்டு முனிவர் அவனிடம் மண்வெட்டியைக் கொடுத்தார். பிறகு அங்கே தரையில் உட்கார்ந்தார். அரசன் இரண்டு குழிகள் வெட்டினான்; உடனே வேலையை நிறுத்திக் கொண்டு தன் கேள்விகளைத் திரும்பவும் கேட்டான். முனிவர் பதில் ஒன்றும் சொல்லாமல் எழுந்து நின்று மண்வெட்டியை நோக்கிக் கையை நீட்டினார்.

''இப்போது நீ களைப்பாறு; நான் வேலை செய்கிறேன்'' என்றார் முனிவர்.

ஆனால் அரசனோ மண்வெட்டியைத் திருப்பிக் கொடுக்காமல் தொடர்ந்து குழிகள் வெட்டவே ஆரம்பித்தான். ஒரு மணி நேரம் ஆயிற்று; அப்புறமும் ஒரு மணி நேரம் கழிந்தது. சூரியன் மரங்களுக்குப் பின்னால் அஸ்தமிக்கத் தொடங்கியது.

அரசன் மண்வெட்டியைப் பூமியில் ஊன்றி விட்டு, ''மகாஞானியே! என் கேள்விகளுக்கு விடை தெரிந்து கொள்ளத் தங்களிடம் வந்தேன். தங்களால் விடை கூற இயலாது என்றால் சொல்லுங்கள்; நான் திரும்பிப் போய் விடுகிறேன்'' என்று சொன்னான்.

''யாரோ இந்த வழியாக ஓடி வருகிறார்கள். அது யார் என்று பார்ப்போம்'' என்று கூறினார் முனிவர்.

அரசன் திரும்பிப் பார்த்தான். உண்மையில் ஒரு தாடிக்காரன் காட்டிலிருந்து ஓடி வந்து கொண்டிருந்தான். வயிற்றில் கைகளை வைத்துக் கொண்டு அவன் ஓடி வந்தான். வயிற்றிலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அரசனிடம் ஓடி வந்த தாடிக்காரன் கீழே விழுந்தான். சற்றும் அசையாமல் கிடந்து கண்களை விழித்துப் பார்த்து ஈனஸ்வரத்தில் முனகினான். அரசன் முனிவரோடு சேர்ந்து 'தாடிக்காரனுடைய ஆடைகளை அவிழ்த்தான். அவன் உடம்பில் ஒரு பெரிய காயம் இருப்பதைப் பார்த்தான். உடனே அரசன் தனக்குத் தெரிந்த வரையில் காயத்தை நன்றாகக் கழுவி, தன்னுடைய கைக்குட்டையினாலும் முனிவருடைய துண்டினாலும் கட்டுப் போட்டான். ஆனால் ரத்தம் கொட்டுவது நிற்கவில்லை. ரத்தத்தில் நனைந்த கட்டுகளைப் பல முறை அரசன் அவிழ்த்தெடுத்துத் திரும்பத் திரும்பக் காயத்தைக் கழுவிக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தான். ரத்தம் கொட்டுவது நின்றதும், காயமடைந்தவன் சுய உணர்வு பெற்றுத் தண்ணீர் கேட்டான். அரசன் போய்த் தண்ணீர் கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்தான். இதற்குள் சூரியன் பூரணமாக அஸ்தமித்து விடவே குளிராக இருந்தது. அதனால் அரசன், முனிவரின் உதவியோடு தாடிக்காரனைக் குடிசைக்குள் தூக்கிக் கொண்டு போய் முனிவரின் படுக்கையிலேயே படுக்க வைத்தான். படுக்கையில் கிடந்த தாடிக்காரன் கண்களை மூடினான்; தூங்கத் தொடங்கி விட்டவன் போல் காணப்பட்டான் அவன்.

நடந்ததாலும் வேலை செய்ததாலும் அரசன் மிகவும் களைத்துப் போயிருந்தான். அதனால் கதவு நிலைப்படியில் அவன் தூங்கி விழத் தொடங்கினான். பிறகு அங்கேயே படுத்து இரவு முழுதும் நன்றாகத் தூங்கினான். காலையில் அரசன் கண் விழித்துப் பார்க்கும் போது, தான் இருப்பது எங்கே என்பதும், தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு படுக்கையில் கிடக்கும் அந்நியனை அந்தத் தாடிக்காரன் யார் என்பதும் தெரியாமல் திகைக்கலானான்.

அரசன் விழித்துக் கொண்டு விட்டான் என்பதையும் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் கண்ட தாடிக்காரன், பலஹீனமான குரலில், ''என்னை மன்னியுங்கள்'' என்று கூறினான்.

''உன்னை எனக்குத் தெரியாது. உன்னை மன்னிப்பதற்கும் ஒன்றும் இல்லை'' என்றான் அரசன்.

அதற்குத் தாடிக்காரன் சொன்னான்: ''தங்களுக்கு என்னைத் தெரியாது. ஆனால் தங்களை எனக்குத் தெரியும். நான் தங்கள் விரோதி. தாங்கள் என் சகோதரனைத் தூக்கி விட்டதற்காகத் தங்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று சபதம் எடுத்துக் கொண்டவன் நான். தாங்கள் முனிவரைப் பார்க்கத் தனியாகப் போயிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு தங்களைக் கொலை செய்துவிடத் தீர்மானித்தேன். தாங்கள் திரும்பிப் போகும் போது தங்களைத் தாக்க வேண்டும் என்று உத்தேசித்திருந்தேன். ஆனால் ஒரு முழு நாளும் கழிந்த பிறகும்கூடத் தாங்கள் திரும்பி வரவில்லை. அப்புறம் தாங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள நான் மறைவிடத்தை விட்டு வெளியே வந்தேன். நான் வரும்போது தங்கள் மெய்காவலர்கள் என்னைப் பார்த்துக் கொண்டார்கள். நான் யார் என்பதை அறிந்து அவர்கள் என்னைக் காயப்படுத்தி விட்டார்கள். உடனே நான் அவர்களிடமிருந்து இங்கே ஓடி வந்தேன். தாங்கள் என் காயத்துக்குக் கட்டுப் போட்டிராவிட்டால் என் ரத்தமெல்லாம் கொட்டி நான் செத்துப் போயிருப்பேன். நான் தங்களைக் கொல்ல விரும்பினேன்; ஆனால் தாங்களோ என் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறீர்கள். நான் இனி உயிரோடு இருந்தால்,நான் உயிரோடு இருப்பதைத் தாங்கள் விரும்பினால் தங்களுக்கு மிக விசுவாசமுள்ள ஓர் அடிமையாக ஊழியம் புரிவேன். என் குழந்தைகளையும் அவ்விதமே ஊழியம் புரியும்படி கட்டளையிடுவேன். என்னை மன்னியுங்கள்.''

தாடிக்காரன் இவ்வாறு சொன்னதைக் கேட்ட அரசன், தன்னுடைய விரோதியை இவ்வளவு சுலபமாய்த் தன் நண்பனாகத் தான் மாற்றி விட்டதை அறிந்து மிகவும் சந்தோஷப்பட்டான். அவனை மன்னித்ததோடு நில்லாமல், அவனுடைய சொத்தைத் திருப்பிக் கொடுப்பதாகவும், அவனைக் குடிசையிலிருந்து ஊருக்குள் கொண்டு வந்து

சிறப்பான சிகையலங்காரத்துக்கு ஆதாரமாக அமைகிறது

லாய்ஜு™

ஹேர் க்ரீம்

கவர்ச்சியான கேசத்துடன் காண்பவர் அனைவரும் விரும்பி வாங்குவது லாய்ஜு™. குளித்ததும் சீவுமுன் சிறிதளவு லாய்ஜு™ உபயோகித்தால் போதும். உங்கள் முடி மென்மை பெற்றுவிடுகிறது; படிய வாரிவிட முடிவதுடன் பளபளப்போடும் பொலிகிறது — இந்த மினுமினுப்பு நாள் முழுதும் நீடிக்கவும் செய்கிறது.





இது ஒரு கல்கத்தா கெமிகல் தயாரிப்பு

CTC-5 T

சேர்க்கத் தன் வேலைக்காரர்களையும் வைத்தியனையும் அனுப்புவதாகவும் அரசன் வாக்களித்தான்.

தாடிக்காரனிடம் விடைபெற்றுக் கொண்டு குடிசையை விட்டு வெளியே வந்த அரசன், முனிவர் எங்கே இருக்கிறார் என்று சுற்று முற்றும் பார்த்தான். அவரிடம் தன் கேள்விகளுக்கு விடை அளிக்கும்படி கடைசித் தடவையாகக் கேட்க வேண்டும் என்றும், அப்புறம்தான் திரும்பிச் செல்ல வேண்டும் என்றும் முடிவு செய்தான். தோட்டத்தில் முதல் நாள் வெட்டிய குழிகளின் பக்கத்தில் முனிவர் முழங் கால்களை ஊன்றிக் கொண்டு இங்கும் அங்கும் தவழ்வது போல் நகர்ந்து கொண்டிருந்தார். குழிகளில் அவர் காய்கறிச் செடிகளின் விதைகளை ஊன்றிக் கொண்டிருந்தார்.

அரசன் அவர் அருகில் சென்று, "மகா ஞானியே, என் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்படி தங்களைக் கடைசித் தடவையாகக் கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

"ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டு விட்டதே" என்று சொல்லி விட்டுக் கீழே உட்கார்ந்த முனிவர், எதிரே நிற்கும் அரசனை ஏறிட்டுப் பார்த்தார்.

"எப்படி?" என்று கேட்டான் அரசன்.

"ஏன், உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று கேட்ட முனிவர், மேலும் பின்வருமாறு கூறினார்: "நேற்று நீ என் பலவீனத்தைப் பார்த்து இரக்கப்பட்டு, எனக்காக இந்தக் குழிகளை வெட்டினாய். அப்படி வெட்டாமல் நீ தனியாகத் திரும்பிச் சென்றிருந்தால், அந்தத் தாடிக்காரன் உன்னைத் தாக்கியிருப்பான். என்னோடு இருக்காமல் போனதற்காக அப்போது நீ வருந்தியிருப்பாய். ஆகவே, சரியான சமயம் என்பது நீ குழிகளை வெட்டிக் கொண்டிருந்த சமயம் ஆகும். உனக்கு மிக மிக முக்கியமானவனாக இருந்தவன் நான். மிகமிக முக்கியமான காரியம், நீ எனக்கு நல்லது செய்தது. அப்புறம் அவன் ஓடி வந்த போது நீ அவனுக்குச் சிகிச்சை செய்த சமயம் மிகமிக முக்கியமான சமயம் ஆகும். நீ அவனுடைய காயத்துக்குக் கட்டுப் போட்டிராவிட்டால், அவன் உன்னோடு சமரசமாகப் போகாமலே இறந்திருப்பான். ஆகவே, அப்போது மிகமிக முக்கியமானவனாக இருந்தவன் அவன்தான். அவனுக்கு நீ செய்ததுதான் அப்போது மிகமிக முக்கியமான காரியம். இதிலிருந்து நீ தெரிந்து கொள்வாயாக:

"மிக மிக முக்கியமான சமயம் ஒன்றே ஒன்றுதான். அது 'இப்பொழுது' என்பதாகும். அது ஏன் மிக மிக முக்கியமானது என்றால், அந்தச் சமயத்தில் தம்மைச் செயல் புரிய வைக்கும் சக்தி நம்மிடம் இருக்கிறது.

அதேபடி மிக அவசியமான மனிதன், அந்தந்தச் சமயத்தில் நாம் எவனோடு இருக்கிறோமோ, அவன் தான்.

"மிகமிக முக்கியமான காரியம் அவனுக்கு நன்மை செய்வதாகும்."

—கு. அழகிரிசாமி



கஸ்தூரி திலகம்

சரித்திர நவினங்கள் பலவற்றை நாம் அறிவோம். எனினும் இந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்களைவைத்து, கற்பனையினால் அழகூட்டி எழுதப்பட்ட வரலாறுகள் மிகக் குறைவுதான். கஸ்தூரி பாவின்வாழ்க்கையை விவரிக்கின்ற கஸ்தூரிதிலகம் ஓர் ஆதாரபூர்வமான வாழ்க்கை வரலாறு அல்ல என்பதை ஆசிரியர் பரணிதரன் முன்னுரையில் ஒப்புக் கொண்டிருக்கிறார். சில இடங்களில் கற்பனை கலந்திருக்கிறது என்பதை ஆசிரியர் பரணிதரன் முன்னுரையில் ஒப்புக் கொண்டிருக்கிறார். சில இடங்களில் கற்பனை உரையாடல்களையும் புகுத்தியிருப்பதாக ஆசிரியர் சொன்னாலும், எந்த எந்த இடங்களில் கற்பனை கலந்திருக்கிறது என்பதை நாம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு, அவரது திறமையான கற்பனை வரலாற்றோடு கலந்து விட்டது.

சில இடங்களில் உரையாடல்களிலேயே வரலாற்று நிகழ்ச்சிகளும் சொல்லப்பட்டு விடுகின்றன.

பாரிஸ்டர் படிப்பை முடித்துக் கொண்டு இங்கிலாந்திலிருந்து மகாத்மா திரும்பும் போது, பம்பாய் துறைமுகத்தில் லட்சுமிதாஸ் காத்திருக்கிறார்.

'அண்ணா, அம்மா சௌக்கியமா?'

'மோகன் என்னை மன்னித்துவிடு!'

'என்னண்ணா இது! உங்களை நான் மன்னிப்பதா?'

'ஆமாம், மோகன். அம்மா காலமாகிவிட்டாள். உன்னிடமிருந்து நான் அந்தச் செய்தியை மறைத்து விட்டேன். கடிதம் எழுதினால் அந்தத்துக்கத்தை உன்னால் தாங்க முடியாது என்று எனக்குத் தெரியும். அதனால் உன் படிப்புக் கெட்டு விடும் என்று நினைத்துத் தான் அப்படிச் செய்தேன்...'

நமக்கே இது நிமர் அதிர்ச்சியாக இருக்கிற தென்றால், மகாத்மாவுக்கு அப்போது எப்படியிருந்திருக்கும்? இது போன்ற ஆசிரியரின் கை வண்ணங்களை நூல் முழுவதும் காணலாம்.

இந்நூலில் வர்ணனைகளில் ஆசிரியர் நேரத்தைச் செலவிடவில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வொரு வார்த்தையும் படிப்பவர் மனத்தில் பதிய வேண்டும் என்பதில் அக்கறையோடு பாடுபட்டிருக்கிறார்.

ஆழ்ந்த கருத்துக்களும் ஆங்காங்கே அள்ளித் தெளிக்கப்பட்டிருக்கின்றன. தன்னை அடக்க முடியாதவன் பிறரை அடக்க முடியாது என்பதையும் பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் வெகுமதியையோ பரிசையோ ஏற்றுக் கொள்வது தவறு. அது லஞ்சத்துக்குச் சமமாகும் என்பதையும் சான்றுக்காகச் சொல்லலாம்.

அழகான வெள்ளைத் தாளில், கண்முன்னே வரலாற்றைக் காட்டுவது போன்று நூல் முழுவதும் அழகிய படங்களோடு அச்சிட்டுக் குறைந்த விலையில் இந்நூலை வழங்கியுள்ளனர். —மு. தங்கப்பன்

பிரசுரம்: ஆனந்தவிகடன், சென்னை-2.

வெற்றித் திருநகர்

அகிலன்

அத்தியாயம் இருபத்திரண்டு

அரண்மனைப் பொக்கிஷம்

திருவிழாக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளில் விஜய நகரம் அதி தீவிரமாக ஈடுபடத் தொடங்கி விட்டது. அரண்மனையிலிருந்து வழக்கத்துக்கு முன்னரே அறிவிப்பு வந்து விட்டதால் அந்த ஆண்டுத் திருவிழாவை மிகவும் கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்று குடிமக்கள் பேசிக் கொண்டார்கள். அதற்கு முந்தைய ஆண்டில் சக்கரவர்த்தி நோய்வாய்ப் பட்டிருந்ததால் பெயரளவுக்குத்தான் விழா நடந்ததே தவிர, அதில் வழக்கமான உற்சாகம் கலந்திருக்கவில்லை.

அதையும் சேர்த்து இரட்டிப்பாகக் கொண்டாடிவிடுவது என்று விஜய நகரத்து மக்கள் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டார்கள். அரண்மனையிலிருந்து வந்து கொண்டிருக்கு அறிவிப்புக்களும் அவர்களது ஆர்வத்தைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தன.

ஆடல், பாடல், கூத்து முதலிய கேளிக்கைகளில் விஜயநகரம் எப்போதுமே பின்தங்கிய இல்லை. கணிகையர் வாழ்ந்து வந்த தெருக்களில் பல வகை இன்னிசைகள் எழுந்தவண்ணமாக இருந்தன; இரவும் பகலுமாக அங்கு ஆடல் பாடல்களில் பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. விழாவுக்கென்றே புத்தம் புது அணிமணிகள் செய்வதிலும் ஆடைகள் வாங்குவதிலும் அவர்கள் தங்களுக்குள் ஒருவரை யொருவர் மிஞ்சலானார்கள்.

நகர்ப்புறங்களில் உள்ள மலையடிவாரங்களில் அங்கங்கே இளைஞர்கள் திரண்டார்கள். மல்யுத்தம் ஒருபுறம், வாள்வீச்சு ஒரு புறம், அம்பெய்தல் ஒருபுறம், குதிரைகள், யானைகள் மீதிருந்து வீர சாகஸம் ஒருபுறம் — இவ்வாறாக நகரத்தைச் சுற்றிலும் இளைஞர் கூட்டம் எழுச்சி பெற்று இயங்கியது. விசுவநாதனுக்கு இளைஞர்களை மேற்பார்வையிட்டு அவர்களுடைய பயிற்சிகளைக் கவனிப்பதற்கே நேரம் சரியாக இருந்தது. போருக்குப் போவதற்கு முன்பு எப்படிப் பயிற்சிகள் நடைபெற்றனவோ, அந்த அளவுக்கு விழாவுக்காகவும் நடைபெற்றன.

நாகமநாயக்கருக்கு விஜயநகரத்துக்குள்ளேயும் அதை அடுத்தும் ஒரு புதிய நகரமே எழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. ஏற்கனவே விஜயநகரம் மக்கள் கூட்டம் நிறைந்த நகரம். வெளியூர்களிலிருந்து திருவிழாவுக்காக அங்கு வருவோர் தொகை கணக்கில் அடங்காதது. பத்து நாட்களும் அவர்கள் அங்கு தங்கியாக வேண்டும். உற்றார் உறவினர் உள்ளவர்களைத் தவிர, மற்ற எல்லோருக்குமே உணவுக்கும் உறைவிடத்துக்கும் அரசாங்கமே ஏற்பாடு செய்வது வழக்கம். அவற்றை யெல்லாம் நாகமநாயக்கர் கவனித்து வந்தார்.

குடிமக்களை மட்டும் கவனித்தால் போதுமா? விஜயநகரத்தைச் சார்ந்த சிற்றரசர் பலருக்கும், பல்வேறு மொழிகளில் கவிபாடும் கவிஞர் கூட்டத்துக்கும், தெற்கிலும் வடக்கிலுமிருந்து வரும் கலைஞர்களுக்கும் அங்கு தனித்தனியே வசதிகள் செய்ய வேண்டியிருந்தது. ஓய்வு ஒழிச்சலே இல்லாத அளவுக்கு நாகமர் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தார்.

அமைச்சர் சாளுவ நரசிம்மரும் அப்படித்தான் இரவு பகலென்று பாராமல் உழைத்தவண்ணமாக இருந்தார். மஹாநவமித் திருவிழா என்ற நவராத்திரித் திருவிழா சமயச் சார்புடைய திருவிழாவாக இருந்தாலும் சக்கரவர்த்தி எல்லாச் சமயத்தவர்களுக்கும் அமைச்சரைக் கொண்டு அழைப்புக்கள் அனுப்பச் செய்தார். இஸ்லாமியர்களான





பாமினி சுல்தான்கள், கிறிஸ்தவர்களாகிய போர்த்துக்கீசியர்கள் முதலிய அனைவருக்குமே அழைப்புக்கள் சென்றன. குமரிமுதல் கலிங்கம் வரையிலும் பரவியிருந்த தம்முடைய சிற்றரசர்களில் யாரையும் சக்கரவர்த்தி மறந்துவிடவில்லை. விஜயநகரத்துக்கு வரக்கூடிய நெடுஞ்சாலைகளிலிருந்த சிற்றூர்களிலெல்லாம் விருந்தினர்களை உபசரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யும்படி கட்டளையிட்டிருந்தார்.

சந்திரசேகர பாண்டியர் விசுவநாதனுடன் அங்கு வந்து விட்டதால், அவருக்கு அங்கு நடைபெற்ற ஏற்பாடுகள் எல்லாமே புதுமையாகத் தோன்றின. நகரத்தைப் பல முறை சுற்றிப் பார்த்து வந்தார். அந்த நகரத்தின் செல்வச் செழிப்பைப் போல் அவர் வாழ்நாளில் வேறெங்கும் கண்டதுமில்லை; கேள்வியுற்றதுமில்லை. உடல் வளமும் உழைப்பார்வமும் கொண்ட மக்கள் கூட்டத்தின் சுறுசுறுப்பைக் கண்டு அவர் வியந்தார். அவ்வளவுக்கும் மூலகாரணமாக விளங்கிய கிருஷ்ணதேவராயரின் உருவம் அவர் உள்ளத்தில் விசுவரூபம் எடுத்துக் கொண்டு வந்தது.

பாண்டியருக்கு மற்றோர் ஆசையும் எழுந்தது. அதுவரை அரண்மனையின் முற்பகுதியை மட்டிலுமே அவரால் காண முடிந்ததே தவிர அதன் உள்ளே சென்று பார்க்க முடியவில்லை. கூடுமானால் அதையும் பார்த்து விட விரும்பினார். விசுவநாதனிடம் கூறித் தமக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார். சக்கரவர்த்தி தமது சொந்த வாழ்வை எப்படி அமைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளவும், அரண்மனையின் சிறப்பை முழுமையாகக் காணவும் அவர் விழைந்தார்.

சக்கரவர்த்தியிடம் முன்னதாக அறிவித்து அனுமதி பெற்றுக் கொண்டு பாண்டியரை அரண்மனையின் பிற்பகுதிக்கு அழைத்துச் சென்றான் விசுவநாதன். கதவருகே காத்து நின்ற காவலர்கள் பாண்டியரைக் கூர்ந்து நோக்கிவிட்டு, விசுவநாதனுடன் அவர் வந்ததால் பணிவுடன் அவரை வரவேற்றார்கள்.

அரண்மனையின் பிற்பகுதியில் வேறு ஓர் அற்புதமான உலகமே உருவெடுத்திருந்தது. பளிங்கு போல் வழவழப்பான தரையில், கம்பீரமான சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட தூண்களினூடே அவர்கள் நடந்து சென்றார்கள். சக்கரவர்த்திக்குப் பணிவிடைகள் செய்வோர் பெரும்பாலும் பெண்களாகவே இருந்தனர். அவர்களது உழைப்பின் அழகும் அருமையும் அங்கு திரும்பிய பக்கமெல்லாம் தெரிந்தன. சிற்பக் கலைஞர்களும் ஓவியக் கலைஞர்களும் தங்கள் கைவண்ணங்களை அங்கங்கே காட்டியிருந்தார்கள்.

கூடங்களின் கதவுகளைத் திறந்து கொண்டு அவர்கள் ஒவ்வொரு புறமாகச் சுற்றிப் பார்த்து வந்தார்கள். இடதுபுறம் ஓரிடத்தில் பெண்களின் பல வகையான நடனத் தோற்றங்கள் சிலைகளாக வடிக்கப் பெற்றிருந்தன. அரண்மனைப் பெண்டிர் அங்கு வந்து நடனம் பயில்வது வழக்கம் என்று கூறினான் விசுவநாதன்.

அந்தக் கூடத்தை நோக்கியவாறு ஓர் ஊஞ்சல் தொங்கியது. அருகில் சென்று அதைப் பார்த்தவாறே பிரமித்து நின்று விட்டார் பாண்டியர். ஊஞ்சலின் பிடிகள் யாவும் பொன்னால் செய்யப் பெற்று நவரத்தினங்கள் இழைக்கப் பெற்றிருந்தன. ஊஞ்சலின் சங்கிலிகளும் செம்பொன்னால் ஆனவையே!

''சக்கரவர்த்திகள் ஓய்வுக்காக இங்கு வந்து அமர்ந்து நடனப் பயிற்சியைக் காணுவார்கள்'' என்றான் விசுவநாதன்.

இன்னும் அங்கங்கே தொடங்கிய ஊஞ்சல் சங்கிலிகளெல்லாம் தங்கத்தாலோ அல்லது வெள்ளியாலோதான் செய்யப் பெற்றிருந்தன. 'பொன்னூஞ்சல்' என்ற சொல்லைப் பாண்டியர் கேள்வியுற்றிருந்தாரே தவிர, அதை அன்றுதாம் கண்ணாரக் கண்டார்.

அடுத்தாற்போல் நீர் தேக்கி வைப்பதற்காகவும் வேறு புழக்கத்துக்காகவும் அங்கு ஓர் அறையில் வைக்கப் பெற்றிருந்த பாத்திரங்களைக் கண்ணுற்றார் பாண்டியர். அவ்வளவும் பொன்னால் செய்யப் பெற்ற பாத்திரங்கள்! தம்முடைய விழிகளையே பாண்டியரால் நம்ப முடியவில்லை.

அறையின் ஒரு மூலையில் தங்கத்தாலும் யானைத் தந்தத்தாலும் செய்யப்பெற்ற கட்டிலொன்று கிடந்தது. அறையில் எந்தப் பக்கம் திரும்பினாலும் தந்தத்தால் இழைக்கப் பெற்ற சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்திருந்தன. முத்துக்கள், ரத்தினங்கள், வைரங்கள், மரகதப் பச்சைகள் ஆகிய நவமணிகளும் திரும்பிய பக்கங்களிலெல்லாம் தங்கச் சிற்பங்களில் பதிக்கப்பெற்று ஒளி வீசின. கலிங்கமும் காஞ்சியும் மேல்நாட்டுப் பட்டுத் துணிகளும் அங்கங்கே திரைச் சீலைகளாகத் தொங்கின. ரோஜாவும் மல்லிகையும் கலந்ததொரு நறுமணம் அந்த அறைக்குள்ளே கமழ்ந்து கொண்டிருந்தது.

பாண்டியர் வாயடைத்துப் போய் அப்படியே நின்று விட்டார். 'முடிசூடிப் பேரரசர்களாகத் திகழ்ந்த என் முன்னோர்களும் இப்படித்தானே செல்வச் சிறப்போடு வாழ்ந்திருப்பார்கள்!' என்ற நினைவு அவருக்கு வந்தது. உடனே அவர் மற்றொரு நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டு கண் கலங்கினார். மாலிக்காபூர் படையெடுத்து வந்து போது, பாண்டிய நாட்டிலிருந்து கைப்பற்றிய தங்கத்தை எத்தனையோ யானைகள் மீது ஏற்றிக் கொண்டு சென்றானுமே! இப்படியெல்லாம் வாழ்ந்த வாழ்க்கையல்லவோ பறிபோய் விட்டது?

விசுவநாதன் பாண்டியரின் திகைப்பைக் கண்டுவிட்டு, அவரிடம் கூறினான்:

''இவ்வளவு சுகபோகங்களில் ஆழ்ந்திருக்கும் இதே சக்கரவர்த்திகள், நொடிப் பொழுதில் இவை அனைத்தையுமே துறக்கத் தயங்கமாட்டார்கள். தாமரை இலைத் தண்ணீர் போலத்தான் அவர்கள் வாழ்க்கையின் இன்பங்களை யெல்லாம் கருதிவருகிறார்கள்!''

அடுத்தாற்போல் ஓர் அறை பூட்டப் பெற்றிருந்தது. அதை மட்டும் விசுவநாதன் பாண்டியருக்குத் திறந்து காட்டவில்லை.


SHAKE BOTTLE BEFORE USE.



ரண சிகிச்சையின்றிப் புதுமுறையில் வலிமயமான மூலத்தைச் சுருக்குகிறது. நமைச்சலை நிறுத்துகிறது. வலிதணிக்கிறது

நியூயார்க்— தீவிரப் பிணிகளில் தவிர மற்றபடி ரண சிகிச்சை என்பதே தேவையில்லாமல் மூலத்தைத் சுருக்கி, நமைச்சலை நிறுத்தி, வலி தணிக்கும் அற்புத வல்லமையுள்ள புதுவித மருந்துப் பொருளை முதன்முறையாகக் கண்டுபிடித்துள்ளது விஞ்ஞானம்.

டாக்டர்களின் கண்காணிப்பில் நிகழ்த்தப்பட்ட பரிசோதனைகளே இதற்கு அத்தாட்சி— வலியும் நமைச்சலும் உடனடியாகத் தணிக்கப்பட்டன. இதுடன் மெல்ல வலியாற்றிய அதேசமயம் உள்ளபடி சுருக்கமே ஏற்பட்டது.

அனைத்திலும் ஆச்சரியம் என்னவெனில், பத்து இருபது ஆண்டுகள் நீடித்திருந்த பிணிகளிலும் இந்த அபிவிருத்தி நிலைபெற்றதுதான்.

உலகப் புகழ்பெற்ற ஆராய்ச்சிக் கழகம் ஒன்றின் கண்டுபிடிப்பாகிய பயோடைன்* என்ற புதிய மருந்துப் பொருளே இதன் இரகசியம். இப் புதிய மருந்துப் பொருள் தற்போது ப்ரிப்பரேஷன் ஹெச் என்ற பெயருடன், களிம்பு வடிவிலே அளிக்கப் படுகிறது. மூலத்தைச் சுருங்க வைப்பதோடன்றி, மலப் பாதைக்கு மழமழப்பூட்டி, மலப்போக்கிலே வலி அற்றதாக்குகிறது. ப்ரிப்பரேஷன் ஹெச், 30கி. மற்றும் 50கி. டியூப்களாக இடுகுழாயுடன், எல்லா உயர்தர மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

மூல நோய் பற்றி விளக்கும் சிறு நூலை (ஆங்கிலம் அல்லது தமிழ்) இலவசமாகப் பெற இன்றே எழுதுக: டிபார்ட்மெண்ட் 38, ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிட்., போஸ்ட் பாக்ஸ் 976, பம்பாய் 1 பிஆர்.

*டிரேட் மார்க்

CH 742 TAM

"இந்த அறைக்குள் என்ன இருக்கிறது?" என்று கேட்டார் பாண்டியர்.

"சக்கரவர்த்திகளின் சொந்தப் பொக்கிஷம் இது. இவர்களுடைய தந்தையார் விட்டுச் சென்றது. இதிலிருந்து ஒரு முறை கூடச் சக்கரவர்த்திகள் பொருள் எடுத்ததில்லை. மாறாக, மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இதில் அவர்களும் சேர்த்து வருகிறார்கள். இதை மட்டிலும் அவர்கள் எதற்காகவும் எடுத்துச் செலவு செய்ததே இல்லை."

அரண்மனைக்குள் வெளிப்படையாகச் சிதறிக் கிடக்கும் செல்வங்களின் மதிப்பே அவரைத் திகைக்க வைத்தது. பூட்டி வைத்திருக்கும் பொக்கிஷத்தில் இருந்ததை அவரால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை.

அவர்கள் வெளியே வருவதற்குள் நன்றாக இருட்டத் தொடங்கியது. பணிப் பெண்கள் சுறுசுறுப்பாகத் தீபங்களை ஏற்றி வைத்துக் கொண்டு சென்றார்கள்.

வெளிப்புறத்து அலுவலகத்தில் அந்த வேளையில் அமைச்சர் சாளுவ நரசிம்மரும் அச்சுதராயரும் தனித்திருந்து இரகசியம் பேசிக் கொண்டிருந்தனர். விசுவநாதனைத் தொலைவில் கண்டவுடனேயே தம் பேச்சைப் பாதியில் நிறுத்தி விட்டார் சாளுவநரசிம்மர்.

அத்தியாயம் இருபத்து மூன்று

சேர நாட்டுச் சிற்பம்

சாளுவ நரசிம்மரும் மற்றவர்களைப் போன்றே விழாவுக்கான ஏற்பாடுகளில் மூழ்கியிருப்பதாகத்தான் லட்சுமி நம்பிக் கொண்டிருந்தாள். அதிகாலையில் எழுந்து அரண்மனைக்குச் சென்றால், இரவு நெடு நேரம் கழித்துத்தான் மாளிகைக்குத் திரும்புவார். அவர் திரும்பிய பிறகு அவரைத் தேடிக் கொண்டு சிலர் மாளிகைக்கு வருவார்கள். சில நாட்களில் அவர்களோடு ஒன்றாக அவர் இரவு நேரங்களில் வெளியே புறப்பட்டுச் சென்று விடுவதும் உண்டு.

'நள்ளிரவுக்குப் பிறகும் இவருக்கு வெளியே என்ன வேலை? வந்து செல்வோரிடமெல்லாம் இவர் ஏன் இரகசியக் குரலில் பேச வேண்டும்? விழா ஏற்பாடுகளென்றால், அவை பற்றி நினைவுக் குறிப்பெழுத அவர் என்னையும் அழைப்பது வழக்கமாயிற்றே? இரண்டு மூன்று ஆண்டுகளாக விழா நடந்த போதெல்லாம் நானும் அவருடன் மாளிகையில் உழைத்திருக்கிறேனே? இந்த ஆண்டில் மட்டிலும் என்னை ஏன் இவர் ஒதுக்கிவிட்டார்?' — இவ்வாறெல்லாம் தனக்குத் தானே கேட்டுக் கொண்டு தடுமாறினாள் லட்சுமி.

"ஏனப்பா, என்னை நீங்கள் பணி செய்ய இப்போது அழைப்பதே இல்லை?" என்று அவரிடம் ஒரு நாள் கேட்டாள் லட்சுமி.

"மற்ற விழாக்களைவிட இது மிகப் பெரிய விழா லட்சுமி! அதனால் பல ஆட்களை ஏவி விட்டுக் கவனிக்க வேண்டியிருக்கிறது" என்று பதிலளித்தார்.

லட்சுமிக்கு அவர் முன்னைவிட இப்போது ஊக்கமும் உற்சாகமும் கொண்டிருந்தார் என்பது மட்டிலும் விளங்கியது. அடுத்தாற்போல் அச்சுதராயரே பட்டத்துக்கு வரப் போகிறார் என்ற செய்தியை மட்டிலும் அவர் லட்சுமியிடம் உற்சாகத்தில் கூறி விட்டார். அவர் பொறுப்புக்கு வந்துவிட்டால், பெயரளவில் அச்சுதராயர் ஆட்சியிலிருந்தாலும், அதிகாரம் முழுவதும் தமக்கே வந்து விடும் என்பதையும் அவர் அவளிடம் மறைத்து வைக்கவில்லை.

தஞ்சாவூரில் இருந்து கொண்டு, சாளுவ நரசிம்மருக்குச் சொந்தமாக விடப்பட்டிருந்த சோழ நாட்டுப் பகுதியைக் கவனித்து வந்த அதிகாரி விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே விஜயநகரத்துக்கு வந்துவிட்டார். அமைச்சரின் மாளிகைக்கு அவர் வந்த போது, அவரை மிகவும் ஆர்வத்தோடு வரவேற்றுப் பேசிக் கொண்டிருந்தார், சாளுவ நரசிம்மர்.

"என்ன செய்தி? ஏற்பாடுகளெல்லாம் முடிந்து விட்டனவா? எந்த மட்டில் வைத்து விட்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் அமைச்சர்.

"இங்கே நவராத்திரித் திருவிழா நடக்கும் போது அங்கேயும் நம்முடைய விழா தொடங்கி விடும். கம்பம் கடலூரில் ஆட்சி செய்து வரும் சோழரும், இன்னும் அங்கங்கே மதுரையை அடுத்திருக்கும் சிற்றரசர்களும் இதற்குச் சித்தமாக இருக்கிறார்கள். பரமக்குடியில் தும்பிச்சி நாயக்கரும் அங்கு தனியே விழா நடத்தப் போகிறாராம்!"

லட்சுமியின் செவிகளில் எதேச்சையாக அவர்கள் பேசிக் கொண்டிருந்த சொற்கள் விழுந்தன. 'விழா' என்ற சொல்லைக் கேலியாக அவர்கள் பயன்படுத்துவது போல் அவளுக்குத் தோன்றியது. 'விஜயநகரத்தில் விழா நடக்கும் போது, வேறு இடங்களிலும் அது எதற்காக நடைபெற வேண்டும்? எல்லாச் சிற்றரசர்களையும்தான் சக்கரவர்த்திகள் இங்கு அழைத்திருக்கிறார்களாமே?'

லட்சுமி ஒருகணம் சுவர் ஓரமாகத் தயங்கி நின்று உற்றுக் கேட்டாள். விழாவைப் பற்றி அவர்கள் வேறேதும் பேசவில்லை.

"சேர நாட்டு உதயமார்த்தாண்டவர்மனைச் சந்தித்தீர்களா?" என்று கேட்டார் அமைச்சர்.

"அவரை ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்கு நான் அரும்பாடுபட வேண்டியிருந்தது. முடிவில் அவர் இங்கு வருவதற்கு இணங்கி விட்டார். வரும் வழியில் ஆக வேண்டிய அலுவல்களைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறினார். இதற்குள் அவர் இங்கு வந்திருக்கக் கூடுமென்றே நினைத்தேன்."

அதன் பிறகு அவர்கள் பேசிக் கொண்டதை லட்சுமியால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் எந்தச் சேரநாட்டு அரசர் குறித்துப் பேசிக் கொண்டார்களோ, அவரை விகவநாதனை எதிர்த்துப் போரிடும்படி முன்பு அவள் தந்தை தூண்டி விட்டது மட்டிலும் அவள் நினைவுக்கு வந்தது. லட்சுமியின் மனத்தில் ஏனோ மீண்டும் அச்சம் குடி புகத் தொடங்கியது.

அன்றைக்கு மாலையில் அமைச்சர் அரண்மனையிலிருந்து திரும்பிய போது வழக்கத்தைவிட மிகுதியான மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். பணியாட்களிடம் கூறி மாளிகையை நன்கு அலங்கரிப்பதற்கான வேலைகளை உடனடியாகக் கவனிக்கச் செய்தார். லட்சுமியையும் கூடத்துக்கு அழைத்து வைத்து, அவளுக்கும் பல வேலைகள் கொடுத்தார்.

''விழாவுக்காக நான் உன்னை ஏதும் செய்யும்படி கூறவில்லையென்று வருந்தினையல்லவா ? இப்போதே உனக்கு வேலைகள் தருகிறேன் !''

''சொல்லுங்கள், அப்பா !'' என்று குதூகலத்துடன் கூறினாள் லட்சுமி.

''விழாவுக்கு வந்துள்ள சிற்றரசர் ஒருவருக்கு நாளைக்கு நம்முடைய மாளிகையில் விருந்து. என்னுடைய பழைய நண்பரின் குமாரர் அவர். சேரநாட்டரசர் உதயமார்த்தாண்டனைப் பற்றி நீ கேள்வியுற்றிருப்பாயே? அவரை நான் விருந்துக்கு அழைத்திருக்கிறேன் !''

''அப்படியானால் இன்னும் வேறு யாரெல்லாம் வருவார்கள்?'' என்று கேட்டாள் லட்சுமி. அந்த மாளிகையில் விருந்து நடந்த போதெல்லாம் அதில் விகவநாதனும் அவனுடைய பெற்றோரும் கலந்து கொள்ளாமல் இருந்ததில்லை. அதை நினைத்துக் கொண்டு தான் அவளும் கேட்டாள் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

''விழா தொடங்க வேண்டிய நாள் நெருங்கி விட்டதால், விகவநாதனும் நாகமரும் அதில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்தால் கடமைகளுக்கு இடையூறு ஏற்படும். அதனால்தான் உதயமார்த்தாண்டனை மட்டிலும் தனியாக அழைத்திருக்கிறேன். நீயும் இது பற்றி யாரிடமும் கூற வேண்டுமென்பதில்லை'' என்றார் சாளுவ நரசிம்மர்.

லட்சுமியின் மகிழ்ச்சி அந்தக் கணத்திலேயே அவளை விட்டுப் பறந்து போய்விட்டது. அதை அறியாதவர் போல் அமைச்சர் அவளுக்கு உற்சாகமூட்டி அலுவல்களைக் கவனிக்கச் செய்தார். தாமும் உடன் இருந்து விருந்துக்கான விவரங்களைத் தெரிவித்து, அது சிறப்பாக நடைபெறும்படி பார்த்துக் கொண்டார்.

லட்சுமி வயதில் முதிர்ந்த ஓர் இராஜதந்திரியான சிற்றரசரையே விருந்துக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பெயரை அவள் கேள்வியுற்றிருந்தாளே தவிர அந்தச் சிற்றரசரை அவள் நேரில் பார்த்ததில்லை. முதிர்ந்த வயதினராக இல்லாவிட்டாலும் நடுத்தர வயதைக் கடந்து விட்டவராக இருக்க வேண்டுமென்றே அவள் எண்ணிக் கொண்டிருந்தாள்.

மறு நாள் முற்பகலில் தந்தையாரின் கட்டளைக்காக அவள் தன்னை அழகு செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சாம்ராஜ்யத்து அமைச்சரது பெருமைக்கேற்றவாறு அவர் குடும்பத்தாரும் காட்சியளிக்க வேண்டுமல்லவா? விழாவின்போது அரண்மனைக்குச் செல்வதற்கு அவள் எப்படியெல்லாம் தன்னை அலங்கரித்துக் கொள்வாளோ, அப்படியே இப்போதும் செய்ய வேண்டுமென்று அவளை வற்புறுத்தினார் சாளுவ நரசிம்மர். லட்சுமிக்கும் அவர் விருப்பத்தை மறுப்பதற்குத் துணிவில்லை. எப்படியும் அதே அலங்காரத்துடன் ஒரு முறை விகவநாதனையும் சந்தித்து விடுவது என்ற முடிவோடு அவள் தன்னை மிகவும் கவனத்தோடு அழகு செய்து கொண்டாள்.

மாளிகையின் வெளிப்புறத்துக்கு வந்து காத்திருந்த அமைச்சர், தொலைவில் சேர நாட்டரசரின் வெண்புரவிகள் பூட்டிய ரதம் வருவதைக் கண்டு விட்டு, அவசரம் அவசரமாக லட்சுமியையும் தம்மருகே வந்து நிற்கும்படி அழைத்தார்.

லட்சுமி வாசலுக்கு வருவதற்கும் உதயமார்த்தாண்டனின் தேர் முகப்பில் வந்து நிற்பதற்கும் நேரம் சரியாக இருந்தது. தேரின் பொன் திரையை விலக்கிக் கொண்டு கீழே இறங்கினான் உதயமார்த்தாண்டன். அமைச்சரும் அரசனும் ஒரே சமயத்தில் கரம் கூப்பிப் புன்முறுவல் பூத்துக் கொண்டனர். லட்சுமி உதயசூரியனின் பொலிவோடு விளங்கிய அவனுடைய முகத்தைக் கண்டவுடன் திடுக்கிட்டாள். இளமையின் சுடர் அவன் முகத்தின் ஒவ்வோர் அணுவிலிருந்தும் வீசிக் கொண்டிருந்தது !


சேர நாட்டுத் தந்தத்தால் கடைந்தெடுத்த சிற்பம் போல், சந்தனத்தால் செதுக்கிக் குழைத்த சிலை போல் அவன் அங்கு நின்று கொண்டிருந்தான். அவனுடைய தோற்றத்திலிருந்து வயதைக் காண முடியாத இளமை அவனிடம் மிளிர்ந்தது.

லட்சுமி சட்டென்று தன் விழிகளை வேறு புறம் திருப்பிய போது, அவனுடைய விழிகள் அவளைக் கண்டு விட்டன. ஒரு கணம் மெய்ம்மறந்து போய் வியந்து நின்றான் அவன். திருமகளே அவனை வரவேற்பதற்காக அங்கு காத்திருக்கிறாளா?

''என்னுடைய குமாரத்தி லட்சுமி'' என்றார் சாளுவநரசிம்மர்.

''லட்சுமியின் திருவருளோடு என்னை வரவேற்றீர்கள்; நமக்கு வெற்றிதான் !'' என்று கூறிக் கொண்டே மிடுக்குடன்மாளிகையினுள் நுழைந்தான் மார்த்தாண்டவர்மன்.

அவனுடைய மணிமுடியும் உடைவாளும் அவனது உடல்வண்ணமும் அந்த மாளிகைக்கே புத்தொளி கொடுப்பது போல் மயக்கச் செய்தன. (தொடரும்)



கணக்கு சரியா?

பெருக்கல் கணக்கைச் சுலபமாகச் சரிபார்க்கும் முறை ஒன்று இருக்கிறது. இம்முறை ஒரு சிலருக்குத் தெரிந்திருக்கும். பலருக்குத் தெரிந்திருக்காது. அந்தப் பலருக்காக, குறிப்பாகப் பள்ளி மாணவர்களுக்காக அது இங்கு தரப்படுகிறது.

தவறான பெருக்கல்	சரியான பெருக்கல்
7834	6832
×23	×32
23502	13664
15668	20496
179182	218624

இது சிறிய பெருக்கல். இது போன்ற பெருக்கல்களை நாம் மறுபடி கூடப் பெருக்கிச் சரிபார்த்துக் கொள்ளலாம். ஆனால் இதைவிட மிகப் பெரிய பெருக்கல்களைப் போட வேண்டிய சந்தர்ப்பம் வரும். அந்தச் சமயங்களில் இந்த முறை பயன்படும்.

சரிபார்க்கும் முறை (தவறான பெருக்கல்): ஒரு பெருக்கல் கணக்கை முடித்தவுடன், அதன் பக்கத்திலோ அல்லது வேறு இடத்திலோ × இந்தக் குறியை (படம் 1) போடவும். பிறகு பெருக்கப்படும் எண்ணை ஒரு எண் வரும் வரை கூட்டவும். அதாவது 7834 = 7+8+3+4 = 22 = 2+2 = 4. இந்த 4ஐ சரிபார்க்கும் குறியின் மேல் பக்கத்தில் போடவும். (படம் 2)

அடுத்து, பெருக்கும் எண்ணை முன் போல் கூட்டி, பெருக்கும் குறியின் அடியில் போடவும். 23 = 2+3 = 5 (படம் 3). பிறகு மேலே உள்ள நம்பரையும் கீழே உள்ள நம்பரையும் பெருக்கவும்: 4×5 = 20. பெருக்கி வந்த எண்ணை ஒரு எண் வரும்வரை கூட்டி இடது பக்கத்தில் போடவும் 20 = 2+0 = 2 (படம் 4). பிறகு கடைசியாக, பெருக்கி வந்த தொகையை ஒரே எண் வரும் வரை கூட்டவும். 179182 = 1+7+9+1+8+2 = 28 = 2+8 = 10 = 1+0 = 1. கூட்டி வந்த இந்த எண்ணை, சரிபார்க்கும் குறியில் வலது பக்கத்தில் போடவும் (படம் 5).

வலது பக்கத்தில் உள்ள எண்ணும் இடது பக்கத்தில் உள்ள எண்ணும் சமமாக இருந்தால் நாம் பெருக்கிய பெருக்கல் சரி. இரண்டும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தால் நம் கணக்குத் தப்பு. இங்கு 2ம் 1ம் இருக்கிறது. ஆகவே நம் பெருக்கல் கணக்கை மறுபடியும் எங்கே தவறு செய்தோம் என்று பார்க்க வேண்டும்.

இப்போது சரியான பெருக்கல் கணக்கைப் பார்ப்போம். பெருக்கப்படும் எண் — 6832 = 6+8+3+2 = 19 = 1+9 = 10 = 1+0 = 1. இதைச் சரிபார்க்கும் குறியின் மேலே போடுவோம். (படம் 6) பெருக்கும் எண்ணைக் கூட்டுவோம். 32 = 3+2 = 5. இப்போது படம் 7ல் உள்ளது போல் வருகிறது. இந்த இரண்டு எண்களையும் பெருக்குவோம். 1×5 = 5. இந்த 5ஐ இடது பக்கத்தில் போடுவோம். (படம் 8) கடைசியாகப் பெருக்கி வந்த தொகையைக் கூட்டுவோம். 218624 = 2+1+8+6+2+4 = 23 = 2+3 = 5. இதை வலது பக்கத்தில் போடவும். (படம் 9) இடது பக்கத்தில் உள்ள எண்ணும், வலது பக்கத்தில் உள்ள எண்ணும் சமமாக இருக்கிறது. ஆகவே நம் கணக்குச் சரி. உண்மையில் இந்தச் சரி பார்க்கும் முறையால், கணக்கை ஒரு நிமிடத்தில் சரி பார்த்துவிடலாம்.


நாம் இந்தக் கூட்டல்களைச் செய்யும்போது 9 என்ற எண் வந்தால் அதை மட்டும் கூட்டாமல் விட்டு விட்டு மற்றவற்றைக் கூட்டிக் கொண்டே செல்லலாம். அதனால் தவறு வராது. உதாரணம்: 794582 7+9+4+5+8+2 = 35 = 3+5 = 8 9ஐ விட்டு விட்டால் 7+4+5+8+2 = 26 = 2+6 = 8.

முக்கியக் குறிப்பு: நாம் சரிபார்க்கும்போது சில கூட்டல்களையும் பெருக்கல்களையும் செய்கிறோம் அல்லவா? அந்தக் கூட்டல்களையும் பெருக்கல்களையும் ஒழுங்காகவும் சரியாகவும் செய்யவும். இதில் தப்பு இருந்தால் நாம் சரியாகப் போட்ட கணக்கையும் தவறாக நினைக்கச்செய்துவிடும் இம்முறை.



















ஊனமும் உள்ளமும்

"ரொம்பவும் நன்றி மிஸ்டர் கோபால்!"

ஆறு ஜோடிக் கரங்கள் கைகூப்பி விடை பெற்றன. இருக்கையில் அமர்ந்தவாறே புன்முறுவலுடன் பதிலுக்குக் கரம் கூப்பினான் அவன். நன்கொடைக்காக வந்திருந்த அந்தக் கும்பல் நிறைந்த நெஞ்சுடன் புறப்பட்டு விட்டது. கடந்த அரை மணி நேரமாகச் சற்றே கலகலப்புடன் விளங்கிய அந்த வீடு மீண்டும் சூனியத்தில் ஆழ்ந்தது.

கோபால் பெருமூச்சு விட்டான். இந்த ஐயாயிரமல்ல; இதற்கு மேலும்கூட அவனால் உதவியிருக்க முடியும் — சென்றவர்களின் வருகை அவன் எதிர்பார்த்ததைப் போல் மகிழ்ச்சிகரமாக அமைந்திருந்தால். ஆயினும் கலைஞர்களுக்கு இதுவே அதிகம்.

மேஜையில் கிடந்த சிகரெட் டப்பாவைத் திறந்து ஒன்றை உருவியெடுத்து வாயில்





செருகிக் கொண்டான் அவன். மேஜையில் காலியாகக் கிடந்த தேநீர்க் கோப்பைகளின் மீது ஈக்கள் வட்டமிட்டன. "சர்மா!..."

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட அவர் காலிக் கோப்பைகளை எடுத்துக் கொண்டு போய் விட்டார். கோபால் புகையைச் சூனியத்தில் படரவிட்டபடி, சாய்ந்திருந்த சோபாவின் கைப்பிடியை அழுத்தமாகப் பற்றிக் கொண்டு எழுந்தான். பின்னால் சாத்தி வைக்கப்பட்டிருந்த ஊன்றுக் கட்டைகள் இருபுறமும் ஒட்டிக் கொண்டு அவன் நடப்பதற்கு உதவியாயின.

"லொடக்... லொடக்...லொடக்!"

இரண்டு மரக் கால்களும், ஒரு மனிதக் காலும் சேர்ந்து மாடிப் படிகளைக் கடந்தன. வழித்தெறிந்து விட்ட மாதிரி உட்புறம் வெறிச்சென்றுவிடுது.

மாடியில் நீண்டு கிடந்த வராந்தாவில் அவனுடைய ஊன்றுகோல்கள் தொடர்ந்து ஒலிக்கத் தொடங்கின. அவன் உலவுகிறான்; உலவுவதே அமைதிக்காகத்தான். ஆனும், இப்படி அவன் உலவும்போதெல்லாம் ஓசையிட்டே அமைதியைக் குலைக்கிற அந்த


ஊன்றுக் கட்டைகள்?-அவை இல்லாவிட்டால் அவனால் நிற்கக் கூட முடியாதே!

உலவியவாறே அந்த வீட்டைக் கண்ணோட்டம் விட்டான் அவன். ஒரு தனி மனிதனின் குடியிருப்புக்குப் பத்தடி நீள அகலமுள்ள ஓர் அறையே போதும் என்ற பட்சத்தில், நீண்டு அகன்று விரிந்த அந்த மாளிகையில் அவனுடைய நடமாட்டம் எந்த அளவுக்குக் கலகலப்பை உண்டாக்கிவிட முடியும்?

தலைக்கு மேலே கொத்துக் கொத்தாய்த் தொங்குகிற சூழல் விளக்குகள்; காலுக்குக் கீழே வழவழவென்று பாதங்களைக் கூசவைக்கும் மொசாய்க் தரை; சுற்றிலும் தூய்மையைப் பறைசாற்றும் வெள்ளைநிறச் சுவர்கள். இவை தவிர நவீன வசதிகள் என்ன, நாகரிகமான அமைப்புகள் என்ன, கொஞ்சமா, நஞ்சமா?

எல்லாம் சரிதான்; இவ்வளவும் தனி மனிதனை அவனுக்குத் தேவைதானா?

கோபால் மீண்டும் உலவத் தொடங்கினான். உடம்பைச் சற்றே இறுக்கிப் பிடித்திருந்த தன் சில்க் ஜிப்பாவின் பித்தான்களைக் கொஞ்சம் தளர விட்டுக் கொண்டான். வலது காலில் அரை வாசிக்கு மேல் வெறுமையாகத்



தொள தொளக்கும் பைஜாமா. அலுங்காமல், நலுங்காமல், அழுக்கின் நெடிகூடப் படாத அந்த உடைகள் காலையில் அணிந்து கொண்டவைதான். ஆனால் மாலையில் சலவைக்குப் போய்விடும். இரண்டொரு தரம் சோபாவில் உட்கார்ந்து எழுகிற கசங்கலைத் தவிர அதில்தேடிப் பிடித்தாலும் ஒரு கறுப்புப் புள்ளி தென்படுமா?

அவன் என்ன வெளியே போகிறானா? வேர்வையில் நனைகிறானா? நாலு இடங்களில் நுழைகிறானா? நானாவிதமான சூழலில் பழகுகிறானா?

கோபால் மீண்டும் ஒரு பெருமூச்சை விட்டுக் கொண்டான். காலையில் பள்ளிக் கூடக் கவியரங்கு நிமித்தமாக வந்திருந்த உபாத்தியாயர்களை நினைத்துக் கொண்டான். அவர்களில்கூட இரண்டு மூன்று பேர்கள் அவனுக்கு அரிச்சுவடி கற்பித்த அந்தக் காலத்து மனிதர்கள் இருந்தனர். யாரிடமாவது ஒரு சகஜமான வார்த்தை? யாராவது அந்த உரிமைப் பாவமான பேச்சு? ஒருத்தராவது ஒரு மனம் விட்டுச் சிரிப்பு? இல்லையே!

ஊஹூம், கிடையவே கிடையாது. காரணமும் அவனுக்குப் புரியும். அவர்கள் பேச வந்திருப்பது தங்கள் பழைய மாணவன் கோபாலிடமா? காலஞ்சென்ற பிரதம நீதிபதி கருணாகரனின் பிள்ளையிடமல்லவா? வெறும் பிள்ளையா? கோடீசுவரனாயிற்றே? திரண்ட செல்வத்துக்கு ஏகபோக அதிபதியாயிற்றே? லட்சத்தில் புரண்டு, கோடியில் கால் நீட்டுகிற அந்தக் கோமகனின் எதிரில் நின்று பேசவோ, சிரிக்கவோ, கேவலம் — என்பது ரூபாய் சம்பளக்காரர்களான தங்களுக்கு அருகதையுண்டா?

இந்த நிலை — இந்த ஒதுக்கப்பட்ட நிலை — இன்று மாத்திரமா, அன்றும் இருக்கத்தானே இருந்தது? இன்று பணம் படைத்தவன் என்பதால் ஆசிரியர்கள் அவனைக் கண்ணிய நோக்கோடு தள்ளி வைத்து விட்டார்கள். ஆனால் அன்று? அவன் தோள் நிற்கும் சக மாணவர்கள் அவனை ஊனம் என்ற ஒரே காரணத்துக்காக ஒதுக்கி எறிந்தார்களே?

அன்று ஊனம்; இன்று ஊனம் இருந்தும் பணம். உயர்வுக்கும் தாழ்வுக்கும் ஒரு மனிதன் சமுதாயத்தோடு ஒன்றவே முடியாதா? உயராமலும், தாழாமலும் ஒரு சராசரி நிலையில் இருக்கிறவரைதான், ஒருத்தனுக்குக் கலந்துறவாடவோ, களிப்புடன் மகிழவோ உரிமையுண்டா?

கோபாலின் விழிகள் மொட்டுதிர்த்தன.

''ஐயா!''

அவன் நிமிர்ந்தான். அறுபது வயதாகியும் ஸ்தூலம் சரியாத ஆரோக்கியத்துடன் நிற்கிற சர்மாதான் அழைத்தார்.

''என்ன?''

''சாப்பாடு தயாராயிடுத்து...''

அவனுக்குப் பசியில்லை. ஆனாலும் மறுக்கவுமில்லை. அந்தப் பத்து நிமிஷ நேரப் போஜனத்தில் அவர் தமது யதார்த்தமான மனநிலையிலிருந்து வெளிப்படுத்துகிற உபநிஷத்துகளையும், கீதை மொழிகளையும், மகான் ராமகிருஷ்ணரின் அருள் வாக்குகளையும் கேட்கும்போது மனசு எவ்வளவோ ஆறுதல் அடைகிறதே!

அவன் பழையபடி படியிறங்கினான்.

''லொடக்...லொடக்...லொடக்!''

அவன் பழையபடியே படியேறி வந்தான். ஊன்றுகோல்கள் ஓசையிட்டன. அந்த வீட்டின் மனிதக் குரல்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒடுங்கிய பின்னரும் இருபதாண்டு காலமாகத் தொடர்ந்து ஒலிக்கிற ஒரே குரல் அந்த மரக்கட்டைகளின் ஜீவனற்ற 'லொடக், லொடக்' ஓசைதானே?

கோபால் மேலே வந்தபோது விளக்குகள் பளீரென்று மலர் முகம் காட்டின. ஓ! இருட்டத் தொடங்கிவிட்டதா?

அவன் மீண்டும் முன்னும் பின்னும் நடை போடலானான்.

இரவு வந்துவிட்டது: பொழுது விடியப் போகிறது: அந்தி நேரம் வரும்; மீண்டும் இரவு வந்துவிடும். காலம் வகுத்துக்கொண்ட வரையறை அணுப் பிசகாமல் தொன்று தொட்ட காலம் முதல் ஒரே முறையில்தான் நிகழ்ந்து வருகிறது. மனித வாழ்க்கையில் மாத்திரம் அந்த நியதி கிடையாது. நாளுக்கு ஒரு மாற்றம்; வேளைக்கு ஒரு விசித்திரம். இது ஏன்?...

ஊனமான தன் ஒரே மகனுக்கு லட்சம் லட்சமாய் நோட்டுக் கற்றைகளை விட்டு விட்டுச் சென்ற அவன் தந்தை, மாறாக, இரண்டு பிள்ளைகளைப் பெற்று வைத்துப் போயிருந்தால் கூட அவர்களுக்கு அண்ணன் என்கிற நிறைவோடு நிம்மதியாக வாழ்ந்திருப்பான். அட, அதுதான் இல்லை. கேவலம் இரண்டு நண்பர்கள் — எப்போதாவது வந்து ஏனென்று கேட்க இரண்டு தோழர்கள் — அவர்களையாவது தேடித் தந்தாரா? அதுவுமில்லை. இந்த வீட்டையே உலகமாய், அதில் கிடக்கும் மரமான, இரும்பான ஜடங்களையே உற்றார் உறவினராக்கி விட்டாரே!

இந்த வாழ்க்கை—இந்தச் சூனியம் பிடித்த மந்த வாழ்க்கை — கடந்த ஐந்து வருடகாலமாய் அணுவளவும் மாற்றமின்றி நிகழ்கிற ஒரு சீரான வாழ்க்கை. இதில் ஏற்றமில்லை, இறக்கமில்லை. உப்பில்லை, உறைப்பில்லை. ஒன்றுமே இல்லாத வெறுமையைத் தழுவுகிற வெற்று வாழ்க்கை. உண்பதும் உறங்குவதும் உலாவுவதுமான ஒரே வாழ்க்கை. இப்படியொரு — வாழ்க்கை தேவைதானா?

நண்பர்கள்! — அவர்களைக் கடையில் வாங்க முடிந்தால் கோபாலிடம் குவிந்திருக்கும் பணத்துக்கு நூற்றுக் கணக்கில் வாங்கி விடலாமே! உள்ளத்தால் ஒன்றுபட்டு, நட்பால் பிணைக்கப்படுகிற அந்த உள்ளங்கள் — அவனின் ஈரப் பசையற்ற இதயத்தோடு ஒட்டி உறவாடும் ஜீவன்கள் — யாருமே இல்லையா?

பால்ய நண்பர்களுமில்லை, பள்ளி நண்பர்களுமில்லை. வெளியுலகத் தொடர்பும் அறவேயில்லை. எப்படி அவனுக்கு நண்பர்கள் இருக்க முடியும்? கரிப்பு நீர் கன்னத்தை நனைக்க, தனிமையைக் கட்டிக் கொண்டு, தேம்புவதைத் தவிர அந்த நாட்களில் அவனால் என்ன செய்திருக்க முடியும்?

அவனுடைய இதயத்தை நோக வைத்து அதைக் குத்திக் குத்தி ரணமாக்கிப் புரையோட வைத்த பெருமை அவனுடைய பால்ய நண்பர்களுக்குத்தான் உண்டு. அவர்களில் — அவனுக்கு இன்னும் கூடப் பகைமையாக நினைவிருக்கிற முகங்கள் இரண்டே இரண்டுதான். அவனை நாளெல்லாம் சீண்டி விட்டுக் குமையச் செய்து வேடிக்கை பார்த்த அவர்களை அவன் பிரிந்து வருடங்கள் பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்ட போதிலும் - அந்த முகங்கள் இன்னும் கூட அவன் நெஞ்சில் பகைமையாக நிற்கின்றன. இருக்காதா பின்னே? அவனுடைய வெறுப்புக்கும் வன்மத்துக்கும் குரோதத்துக்கும் ஆளாகி நிற்கிற அவர்களை மறந்துவிட முடியுமா?

ராகவன் — அந்தப் பெயரை இன்றைக்குக் கேட்டால்கூட அவனுக்கு ஆத்திரம் அடி நெஞ்சிலிருந்து பீறிட்டு வரத் தவறுவதில்லை. எந்தக் கால் அந்த ராகவனின் கன்னிப்பான சொற்றொடருக்குக் காரணமாகி இருந்ததோ, அதே காலாலேயே அவனுடைய கழுத்தை மிதித்துக் கொன்றால்கூட அவனுக்குத் தீராது. இளமை நெஞ்சில் பதிந்து விட்ட உருவம் பச்சை மரத்தில் கிழிக்கப்பட்ட கோடு போன்றதல்லவா?

அந்த நேர் வகிட்டுக் கிராப்புத் தலையும்; வட்டமான முகமும், செவேரென்ற உடம்பும், தளதளத்த தோற்றமும் இன்றுகூட நேரில் கண்டு பேசிவிட்டு வந்த மாதிரி, இப்போதுகூட அவன் கற்பனையில் வட்டமிட்டுக் கொண்டுதான் இருக்கின.

கசங்கக் கசங்க, கண்ணீரைப் பிழியப் பிழிய, நெஞ்சமெல்லாம் பொடியப் பொடிய அவமானத்தினாலும், ஆற்றாமையினாலும், உதடுகள் துடிக்கத் துடிக்க அவனை நடுத் தெருவில் நிற்க வைத்து அலுக்காமல், சலிக்காமல் கைகொட்டி ஆர்ப்பரித்த அந்த ராகவன் இப்போதைய நிலையில் எதிரிலிருந்தால், 'நொண்டி நொண்டி நொடிக்கக்கோ, பாக்குத் தரேன் கடிக்கக்கோ!' என்று நிறுத்தி நிறுத்தி ராகமிட்ட அந்த வாயைக் கிழித்தெறிந்திருப்பான். அந்த ராஜுக்கும் ராகவனுக்கும் தாம் எந்த ஜன்மத்திலாவது ஏதாவது கொடுமை செய்ததுண்டா என்று சிந்தித்தது அவன் இளம் மனம்.

ஒருமுறை திருச்சி மலைக் கோட்டையில் நடந்த சம்பவம் எத்தனை யுகங்களானாலும் அவனால் மறக்க முடியாத ஒன்று.

பள்ளிக்கூட பஸ்ஸில் திருச்சி மலைக் கோட்டைக்கு உல்லாசப் பிரயாணம் கிளம்பியிருந்தார்கள் பள்ளிப் பிள்ளைகள் அனைவரும். அவர்களோடு கோபாலும் புறப்பட்டிருக்கப் போவதில்லை — அவனுக்கு மனம் என்று ஒன்று இல்லாதிருந்து, ஆசை குமிழாதிருந்தால். அவை இருந்த தோஷம் அவனும் புறப்பட்டான். திருச்சி டவுனை வட்டமிட்டுவிட்டு, உச்சிப் பிள்ளையார் கோவிலுக்குப் படி ஏறும் படலம். கோபால் துவண்டு சரிகிற தன் வலது காலை மெல்ல ஊன்றி, ஊன்றுகோல்களின் உதவியோடு உற்சாக ஆர்ப்பாட்டம் போட்டுச் செல்கிற மற்ற மாணவர்களின் நடை வேகத்துக்கு ஈடு கொடுக்கும் முயற்சியில் வேர்த்து விறுவிறுத்துப் போனான். முந்திக்கொண்ட மாணவர் கும்பல் உணவுப் பந்தியை முடித்திருந்த பிறகுதான் கோபால் அவர்களை அடைய முடிந்தது. பசி வயிற்றைக் கொடுமையாகப் பிறாண்டவே சோற்றுப் பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்தான். மாணவர் கும்பல் படி இறங்கத் தொடங்கி விட்டது. விக்க விக்கப் பருக்கைகளை வாயினுள் வாரி அடைத்துக்


மே 27 முதல்
சென்னை
கெயிட்டி (29-5-66)
மேகலா
பாரத்
சீனிவாசா
மற்றும் தென்னாடெங்கும்
G.N.வேல்மணி யின்
சரவணா
பிலிம்ஸ்
சந்திரோதயம்
டைரக்ஷன்-K.சங்கர்
ELEGANT



கொண்டு கோபால் புறப்பட்டபோது ஊன்று கோல்களைக் காணவில்லை!

கோபாலுக்குப் பகீரென்றது. இனிமேல் எப்படிக் கீழே இறங்குவது? அந்த ஊன்று கோல்களை யார் எடுத்திருப்பார்கள்?

அவனுக்குக் கால் ஊனமான நாளிலிருந்து மனமும் ஊனமாகி விட்டதென்னவோ உண்மைதான். அந்த ஊனம்தான் அவன் நெஞ்சுக்குள் தாழ்வு மனப்பான்மையை ராட்சஸ விருட்சமாய் வளர்த்துவிட்டுப் பிற மனிதர்களின் அருகே நெருங்கவே ஒரு காரணமற்ற அச்சத்தை உண்டு பண்ணி யிருந்தது. அதன் காரணமாகத்தான் அவன் அப்போது தான் யாரிடமும் சொல்லி உதவி தேட அஞ்சித் திக்பிரமை பிடித்த மாதிரி அப்படியே உட்கார்ந்து விட்டிருந்தான். நல்லவேளையாக, ஆசிரியர்கள் அவனைத் தேடிவந்திராவிட்டால் என்னவாகியிருக்கும்!

அந்த ஊன்றுக் கட்டைகளை அவனுக்குத் தெரியாமல் எடுத்துச் சென்று பரணில் போட்டுவிட்டு ஊமைச் சிரிப்பு சிரித்த அந்த ராகவனும் ராஜூவும்... சே, கல் நெஞ்சம்!

''லொடக்...லொடக்...'' — சிந்தனையில் மூழ்கி நின்ற கோபால் தன் அலமாரியைத் திறந்தான். அதனுள்ளே மாட்டி வைக்கப்பட்டிருந்த பழைய புகைப்படத்தை வெளியில் எடுத்தான். அதன் சட்டங்களின் நிறம் கூட மாறி வெளுமை கண்டிருந்தது. ஆம்; தினம் தினம் அவனுக்கு இளமைப் பருவ நினைவுகள் தோன்றும்போதெல்லாம் அந்தப் புகைப்படத்தைத்தான் எடுத்துப் பார்ப்பான். அதில்தான் அவனோடு பள்ளியில் படித்த அனைவரும் இருந்தனர். அதில் அந்த ராஜூவும் ராகவனும் கூட அருகருகே அமர்ந்து வாய் மலர்ந்து சிரிக்கின்றனர். அந்தக் காட்சியைக் கண்கலங்கும் விழிகளால் வெறித்துப் பார்த்துவிட்டு வைத்து விடுவதில் அவனுக்கு ஓர் இனம் புரியாத ஆறுதல். எதற்காகப் பார்க்கிறோம் என்று அவனுக்கே தெரியாது.

கோபால் மெல்ல எழுந்து படியிறங்கி வந்தான். அவனுக்கு இப்போது ஒரு புதிய பிரச்னை முளை விட்டிருந்தது. எந்த நோக்கமுமில்லாமல், எதற்குமே பயனுமில்லாமல், யாருடைய அன்புக்கும் அருகதையில்லாமல் யாரையுமே துணையாகப் பெறும் தகுதியுமில்லாமல் அவன் ஏன், யாருக்காக வாழ்கிறான் ?

''தம்பி! உங்களைப் பார்க்கறதுக்காக யாரோ நாலஞ்சு பெண்கள் வந்திருக்காங்க'' என்று படிக்கட்டின் ஓரமாக நின்று சொன்னார் சர்மா. அவனுக்கு வியப்பாக இருந்தது. பெண்கள்! — என்னைச் சந்திப்பதற்காகவா ?

''எங்கிருந்து ?''

''காந்திஜி சமூக சேவா சங்கம்.''

மறுத்து விடலாமா என்றுகூடத் தோன்றியது அவனுக்கு. சே, ஒரு புனிதமான பணியில் ஈடுபட்டிருக்கும் சங்கத்திலிருந்து வந்திருப்பவர்களை அலட்சியம் செய்வதா?

கோபால் வசதியாகச் சோபாவில் சாய்ந்து கொண்டு, கூடிய வரை கால்களை வெளியே தெரியாமல் வைத்துக் கொண்ட பிறகுதான் அனுமதியளித்தான். அடுத்த நிமிடத்தில் பளீரென்ற வெள்ளைநிற உடையுடன் நாலைந்து இளம் பெண்கள் உள்ளே பிரவேசித்து மரியாதையோடு வணக்கம் தெரிவித்தனர். எல்லோருக்குமே மிஞ்சிப் போனால் இருபது வயதுக்கு மேல் இருக்காது. தூய்மையே உருக்கொண்டு துலங்கிய ஆடைகள்; மார்பில் பளிச்சென்று பச்சை வண்ண அடையாள வில்லை. அதில் அஹிம்சா மூர்த்தியின் திருவுரு. எளிமையான அலங்காரங்கள் தாம்.

அவன் அவர்களை அமரச் சொன்னான். சோபாக்கள் நிறைந்திட்டன.

''ஊனமான அநாதைச் சிறுவர்களுக்கு ஓர் ஆசிரமம் திறக்க இருக்கிறோம். அரசாங்கம் இடமானியம் வழங்கியிருக்கிறது. கட்டட நிதிக்காக நன்கொடை வசூலிக்கிறோம். நீங்களும் ஏதாவது உதவவேண்டும்.''

அவனுக்குச் சுரீரென்றது. ஊனமான சிறுவர்களுக்கு ஆசிரமம் என்பதற்காகத் தான் ஊனமான அவனைத் தேடி வந்திருக்கிறார்களோ ?

குரலுக்குரியவளை நிமிர்ந்து பார்த்தான். நறுக்கென்றது. அந்த முகம்..... அந்தத் தோற்றம்.... எங்கோ... எப்போதோ.... பார்த்த மாதிரி......

இப்போது வேறொருத்தி பேசினாள். ''இது வரை நாங்கள் எத்தனையோ அங்கஹீனர்களுக்கு உதவியிருக்கிறோம். மிஸ் ராஜம் அவர்களின் தீராத உழைப்பாலும் அயராத முயற்சியாலும் உருவாகியுள்ள இந்தச் சங்கத்தினால் எத்தனையோ பேருடைய வாழ்க்கை மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது.....''

மிஸ் ராஜம்! — கோபால் மீண்டும் அந்தப் பார்த்த முகத்தை வெறித்தான். அதே மெல்லிய நாசிதான்....அதே சின்ன உதடுகள் தாம்..... அதே மாதிரியான வட்டவிழிகள் தாம்.... அவனுடைய மனத் திரையில் இன்றளவும் பதிந்து நிற்கிற அந்தச் சிறிய உருவத்துக்கு வளர்ச்சியையும் வாலிபத்தையும் ஊட்டிப் பார்த்தால், இதோ, எதிரிலிருப்பவளைப் போல்தான் வடிவம் பெற முடியும். அந்த ராஜம்தானோ இவள்?

''என்னை உங்களுக்கு நினைவிருக்காது என்று நினைக்கிறேன்......'' அவன் அடக்கமாக முறுவலித்தான்.

அவள் இன்னும்கூட வெறித்த நிலையில் தான் வீற்றிருந்தாள்.

''கல்லூரிப் பருவமாயிருந்தாலோ, உயர் நிலைப் பள்ளிப் பழக்கமாய் இருந்தாலோ அது சாத்தியம்தான். பால்ய பருவம் எப்படி நினைவில் நிற்க முடியும்? நான் உங்களோடு 'எலிமெண்டரி' ஸ்கூலில் படித்திருக்கிறேன்.''

அவனுக்கு அந்த வார்த்தைகள் தூக்கி வாரிப் போட வில்லை. அவனுக்கு அந்த ராஜத்தை எப்போதோ புரிந்து விட்டது. அவனுடைய அந்தப் பார்வையின் நோக்கமெல்லாம் ஓடிவிட்ட வருடங்கள் அவன் நெஞ்சில் பதித்த ராஜத்துக்கும், இப்போ எதிரில் வீற்றிருக்கிற ராஜத்துக்கும் எத்தனை

மாற்றங்களை விளைவித்திருக்கின்றன என்ற வியப்பினால் விளைந்ததுதான்.

அவன் பேசப் பேசக் கோபாலின் விழிகள் விசாலமாயின. நெஞ்சிலிருந்த பல்வேறான எண்ணப் பின்னல்களும், உணர்ச்சிச் சுழிப்புகளும் அறுபட்டு மலையென வளர்ந்த மலைப்பு. சந்தேகமேயில்லை. இவன் அதே ராஜூம்தான். ஆனால் பேசுவது அவன்தானா?

"இந்தக் கட்டட நிதிக்குப் பலர் பல வகையில் உதவியிருக்கிறார்கள். நீங்கள் உதவுவது ஒரு வகையில் சிறப்பு. எனக்கும் ஒரு வகையில் ஆறுதல்...."

அவன் உண்மையாகவே உதவி நாடித் தான் வந்திருக்கிறானா? அல்லது, கிண்டல் செய்வதற்காக இப்படியொரு நாடகமா? சிறு வயதில் அவன் அவன் நெஞ்சைக் குத்திக் குத்தி ரணகளமாக்கிய வார்த்தைகள் சுழன்று வந்த அதே நெஞ்சில் அன்பின் வடிவமான காந்தியின் உருவமா?

கோபாலின் முன்னால் ஒரு நன்கொடைப் புத்தகம் விரிக்கப்பட்டது. அவன் கேட்டான்: "நீங்கள் என்னோடு பள்ளியில் படித்த அதே ராஜூம்தானா?"

"ஆமாம். இன்னும் நினைவில் வைத்திருக்கிறீர்களே! ரொம்ப நன்றி. நான் இன்னும் எதையும் மறக்கவில்லை. அந்த மறக்க முடியாமைதான் என் வாழ்வின் பலப் பல மாற்றங்களுக்கும் காரணம். உங்களுக்கு எதுவுமே நினைவிருக்காது."

சர்மா காப்பி கொண்டு வந்து வைத்தார்.

நேற்று வரை — ஏன் சற்று முன்புகூட— அவன் நினைத்துப் பார்த்து வெறுப்புற்ற அதே ராஜூம் அன்றைறக்குத் தோற்றத்தால் மட்டுமல்ல, உள்ளத்தாலும்கூட மலையளவு மாற்றம் கொண்டிருக்கிறான். ஏன், எப்படி நிகழ்ந்தது இந்த அசுர மாற்றம்?....

அவன் நன்கொடைப் புத்தகத்தைக் கையிலெடுத்து எழுதினான் — ஐயாயிரத்துக்கு. பிறகு, "உங்களுடைய சேவையும் பணியும் மேன் மேலும் ஓங்கக் கடவுள் அருள் புரிவாராக!" என்றான். கூறி முடித்ததும் அவனுக்கு ஏன் உடல் சிலிர்த்து மயிர்க்கால்கள் குத்திட்டு விட்டன? கண்கள் ஏன் பனித்துத் திரள்கின்றன?

"ரொம்பவும் நன்றி. இந்த உதவிக்கு நாங்கள் மட்டுமல்ல; ஊனமுள்ள பல்லாயிரம் சிறுவர்களின் நன்றிக் கடன் உங்களுக்கு உண்டு!"

காப்பிக் கோப்பைகள் காலியாயின; சோபாக்களும் வெறுமையில் ஆழ்ந்தன.

அவன் பிரமை நீங்காத நிலையிலேயே எழுந்தான். ஊன்றுக் கட்டைகள் தரையில் பதிந்ததால் எழுந்த ஓசைகூட அவனை உணர்வு கொள்ளச் செய்யவில்லை. ராஜுவின் வருகை அவனைத் தீராக் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தது. அவன் எப்படி இத்தனை தூரம் மாறினான்? அவன் இதயம் இவ்வளவு தூரம் மென்மையாகக் கனிய எதுதான் காரணம்?

அவனுக்குத் தலையே கனத்தது. ஊன்றுக் கட்டைகளை அடுத்த படியில் எடுத்து வைத்த போது, அது படியின் நடுவில் பதியாமல் ஓரத்தில் பதிந்து —

அவன் தலைக் குப்புறக் கவிழ்ந்து, கீழ்ப் படியை நோக்கித் துரித கதியில் உருண்டு கொண்டிருந்தான். அவனோடு சேர்ந்து தட தடவென ஓசையிட்டு வந்த ஊன்றுகோல்கள் நான்கு துண்டுகளாகத் தெறித்து விழ, சத்தம் கேட்டு ஓடி வந்த சர்மா ஒரு பந்தைப் போலப் படிகளில் உருண்டு வருகிற கோபாலைக் கண்டு அலறித் துடிக்க, ஒரு முனகலுடன் தரையில் புரண்ட அவனைச் செந்நிறத் திரவம் கறைப்படுத்தி வைத்தது.

கோபாலுக்கு உணர்வு வந்தபோது வலது கால் உயிரையே வதைக்கிற மாதிரி வலித்தது. மழுங்கிக் கிடந்த கண்களைப் பல முறை மூடித் திறந்த பிறகுதான் பார்வைக்குத் தெளிவு கிடைத்தது.

"இப்ப எப்படியிருக்கு, மிஸ்டர் கோபால்? கனிவும் பரிவும் மிதமாகப் பொங்கிக் குமிழ்கிற அந்த வார்த்தைக்குரியவனை ஏறிட்டுப் பார்த்தான் கோபால். கழுத்தில் ஸ்டெதாஸ்கோப்பும், கையில் சிரிஞ்சுமாய் அமர்ந்திருப்பது டாக்டரல்லவா?....

"பரவாயில்லை...." — அவன் முனகினான்.

"ஏற்கனவே ரொம்பவும் பலவீனப்பட்டிருக்கும் உங்களுக்கு இப்படியோர் அசம்பாவிதம் ஏற்பட்டமைக்கு மிகவும் வருந்துகிறேன்." — ஒரு டாக்டரின் இயல்பான பேச்சுத் தோரணைக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது அந்தக் குரல். அதில் தொனித்த தோழமை உணர்ச்சி கோபாலை வியப்புற வைத்தது.

"நான் இதே தெருவில் பிராக்டிஸ் ஆரம்பித்து இரண்டு வருஷமாகிறது. இந்த நீண்டகால இடைவெளியில் நான் பலமுறை உங்களைச் சந்திக்க எண்ணியதுண்டு. காரணம் எதுவுமில்லாமல் வர விரும்பவில்லை. இப்போதைய காரணமோ நான் வேண்டவோ, விரும்பவோ செய்யாத காரணம்."

கோபால் நிமிர்ந்து பேசியவரை உற்று நோக்கினான். அந்த நேர் வகிடுக் கிராப்புத் தலையும், தக்காளி நிறமும், தளதளவென்ற உடம்பும்......

"சற்று முன்பு பஞ்சு தேவைப்பட்டது என்று உங்கள் அலமாரியைத் திறக்க நேர்ந்தது. அப்போதுதான் தெரிந்தது, நீங்கள் எங்களையெல்லாம் இன்னமும் மறந்துவிடவில்லை என்கிற உண்மை. பாலியப் பருவம் ரொம்பவும் ரம்மியமான பருவம் இல்லையா?"

கோபாலை அதிர்ச்சி தாக்கிற்று. அப்படியானால்.... இந்த டாக்டர்?

"நீங்களும் நானும் ஒன்றாகப் படித்து வந்த நாட்களில் எத்தனையோ சம்பவங்கள் மறக்க முடியாத அளவில் நிகழ்ந்திருக்கின்றன. எல்லாமே எனக்கு ஞாபகமிருக்கிறது. கொஞ்ச நாட்களாகவே உங்களுடைய ஈகைக் குணத்தையும் தாராள மனப்பான்மையையும் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட உங்களோடு ஒரு காலத்தில் படித்திருக்கிறோம் என்று எண்ணும் போது எனக்குப்

பெருமைகூட ஏற்படுவதுண்டு.'' எளிமையும் தன்னடக்கமும் நிரம்பிய சொற்கள்!

கோபால் திடுக்குற்றான். ராகவன்! — அவனேதான். அவனுடைய ஊன்றுகோலைக் கூட ஒளித்து வைத்து நடக்க இயலாமல் செய்த அதே ராகவன்தான் இப்போது அவனுடைய காலுக்கு வைத்தியம் பார்க்க வந்திருக்கிறான்! அவனைக் கிண்டல் பாடி அழ வைத்த அதே ராகவன்தான் இப்போது அவனோடு படித்ததற்காகப் பெருமைப்படுவதாகச் சொல்கிறான்! எத்தனை ஆச்சரியம்!

''நீ...நீ... ராகவன்தானே?''

''நானேதான். இப்போது டாக்டருக்குப் படித்துவிட்டு இதே தெருவில்தான் பிராக்டிஸ் செய்கிறேன்..... என்னை இன்னுமா நினைவில் வைத்திருக்கிறீர்கள்?''

மறக்க முடிகிற பெயர்தானா அது? மறக்கக் கூடிய மனிதன்தானா அவன்?

''கோபால், நீங்கள் கவலையே படவேண்டாம். ஊன்றுகோல்களை உபயோகிக்காமல் சில சாதனங்கள் மூலம் நடக்கிற அளவுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். நண்பன் என்று கூறித் திருப்திப்பட்டுக் கொள்வதிலும் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?''


கோபாலின் கண்கள் பொங்குபுனலாயின. ராகவன் இத்தனை நல்லவனா? இவ்வளவு பெரிய பெருந்தன்மையும் தியாகமுமா அவன் உள்ளத்தில் படர்ந்து நிற்கின்றன! இவையா இத்தனை நாட்களும் நெஞ்சுக்குள் வைத்துக் காக்கிக் கொண்டிருந்தோம்?

கோபால் நன்றியுணர்வோடு புன்னகை புரிந்தான்.

''....ரொம்பவும் தொந்தரவு செய்து விட்டேன். இல்லையா? நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். காலையில் ஆற அமரப் பேசுவோம்.... வரட்டுமா?''

கோபால் தலையசைத்தான் — உடல் புல்லரிக்க. ராகவனின் கம்பீரமான உருவம் கண்களை விட்டே மறைந்தது.

கோபாலைப் பொறுத்தவரை காலத்தின் சக்தியால் அவன் உருவத்தைத்தான் மாற்ற முடிந்ததே தவிர, உள்ளத்தை மாற்ற முடியவில்லைதான். உள்ளம் மாறுவது உலகத்தின் இடையில்தானே? அவன் மாறும் உலகில் ஒட்டாமல் மந்தகதியில் இயங்கிய ஒரு பாழும் உலகில் வளர்ந்தவனாயிற்றே! அந்தப் பால்ய இதயத்தில் பதிந்து நின்ற உருவங்களெல்லாம் முதிர்ந்து போன உண்மையை அந்தப் பால்ய இதயம் உணரவில்லைதான். இப்போது அவனையும் காலத்தின் புதிய வார்ப்பாக மாற்றி விட்டுப் போனவனின் நேசக் கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்கிற அருகதை தனக்கு இருக்கிறதா என்றுதான் கோபால் கண்ணாடியில் தன்னை ஆராய்கிறானோ?....



சுடாத வெய்யில்



மானேஜர்: டேய் முனுசாமி! எத்தனை தடவை கூப்பிடுவது? இந்த வெய்யிலில் எப்படிடா தூங்கறே? எனக்குத் தூக்கம் வரமாட்டேங்குதே....


''ஒரு இடத்திலே நிம்மதியா உட்கார்ந்திருந்தா தூக்கம் வரும். அடிக்கடி என்னை வந்து எழுப்பிண்டு இருந்தா எப்படி வரும்!''

''சோடாகலர் ஏதேனும் இருக்குதா?''

''மூன்று நாளா ஒன்றும் கிடையாது!''


''ஓ! அப்படியா? வெய்யில் அதிகமாயிருந்தால் எல்லாம் வித்துப்போச்சா?''

''ஏய்! இருக்குமா? மூணு நாளா இந்த வெய்யிலிலே சோடா வண்டியே வரல்லேய்யா!''





சாதாரணமா அவருக்கு வியர்ப்பதில்லே. கோட்டை எழுத்தில் வெய்யிலைப் பற்றிப் பத்திரிகையிலே படிச்சாத்தான் வியர்த்துக் கொட்டும்!



சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன்
— அருந்ததமா

நம் கதையைக் கூறிவந்த சகோதரி அதன் முடிவு கட்டத்தை நெருங்கி வருவதாக ஒரு நாள் குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து, ''இரண்டு முறை நான் சனியின் ஆதிக்கத்துக்கு ஆளானேன். முதல் தடவை என்ன நடந்தது என்பதைப் பற்றி இப்போது கூறத் தேவையில்லை. இரண்டாவது முறை 1–1–1931-ம் ஆண்டிலும் நான் படாத பாடு பட்டேன். அப்பொழுது என்ன நடந்தது என்பதைக் கூறுகிறேன்'' என்றார்.

சாரதா மாதர் சங்கத்தின் அங்கத்தினர்களிடையே கடுமையான அபிப்பிராய பேதம் முதன் முறையாக ஏற்பட்டது. அதன் கல்விக் கமிட்டியைச் சேர்ந்த ஆங்கிலேய அங்கத்தினர்களுள் ஒருத்தி, சாரதா வித்தியாலயத்தின் பெண்களுக்குச் சில ஐரோப்பிய நடனங்கள் கற்றுத் தர வேண்டுமென்று யோசனை கூறினாள். சகோதரியும் மற்ற இந்திய அங்கத்தினர் பலரும் இதற்குச் சம்மதிக்கவில்லை. இத்தகைய அபிப்பிராயம் வெளியிடப்பட்டதைக் கண்டே சிலர் அதிர்ச்சியுற்றனர். பெண்களுக்கு வால்ட்சும் (Waltz) ஃபாக்ஸ் ட்ராட்டும் (Fox - trot) கற்றுக் கொடுத்தால், பிற்காலத்தில் அவர்களில் சிலர் ஆண்களுடன் நடனம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்

''இந்த யோசனையைப் பற்றி மாணவிகள் கேள்விப்பட்ட போது அதை ஆதரிக்கத் தான் செய்தார்கள். அவர்கள் எல்லாரும் நாகரிக மனப்பான்மை கொண்டவர்கள் தானே? இந்த எண்ணம் உருவாகக் காரணமாக இருந்த பெண்மணி — அவள் பெயரைப் பற்றி அக்கறையில்லை — தன் அபிப்பிராயத்துக்கு ஆதரவு தேடிச் சிலரின் வோட்டுக்களையும் பெற்றாள். இதன் விளைவு என்னவென்றால் நாங்கள் அந்தப் பிரிவினரிடம் விடைபெற்றுக் கொண்டு வந்துவிட வேண்டியிருந்தது. திருவல்லிக்கேணியிலிருந்து வெளியேறி, மயிலாப்பூரில் குடியேறத் தீர்மானித்தோம். இந்த விஷயம் எனக்கு மிகவும் கவலையை அளித்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில்தான் நான் ஓர் அசட்டுத்தனமான தவற்றைச் செய்து விட்டேன்'' என்று சகோதரி கூறினார்.

அவர்கள் ஏற்கனவே வித்தியாலயத்துக்காக வீட்டைத் தேடுவதில் முனைந்திருந்தார்கள். தகுந்தபடி ஒன்றும் கிடைக்கவில்லை. அவள் செய்து வரும் காரியத்தை மிகவும் பாராட்டிய குடும்ப நண்பர் ஒருவர் ஒரு நாள் சகோதரியைப் பார்க்க வந்தார். அப்போதுதான் புதிதாக உருவாகி வந்த மாம்பலத்தில் மிகவும் விஸ்தீரணமான நிலப்பரப்பு ஒன்றைத் தாம் வாங்கியிருப்பதாகவும், அதில் ஒரு பகுதியைச் சாரதா சங்கத்துக்கு அன்பளிப்பாகத் தருவதாகவும் கூறினார். ஒரு விடுதி, மாதிரிப் பள்ளி மற்றும் கல்விக்கூடங்கள் கட்டுவதற்கு அது போதியதாக இருக்கும்.

சகோதரி அதைப் பார்க்கச் சென்றார். தாழ்ந்த மட்டத்திலிருந்த அந்நிலத்தில்.

நீர் தேங்கிக் கிடந்தது. அந்த வட்டாரம் நகர்ப்புறத்திலிருந்து வெகு தூரத்தில் இருந்தது. பெரும்பாலும் வயல்வெளிகளாகவே இன்னமும் காட்சியளித்தது. அங்கு மிகச் சில பாதைகளே இருந்தன. அங்கிங் பஸ்போக்குவரத்துக்கூட இல்லை. அப் பகுதியில் சீக்கிரத்திலேயே நடக்கவிருந்த வளர்ச்சியை அப்போது கணிக்கத் தவறிய சகோதரி அந்த நன்கொடையை மறுத்து விட்டாள்.


அதற்குப் பதிலாக அவள் மயிலாப்பூரில் ஒரு வீட்டைக் கண்டுபிடித்தாள். வித்யாலயத்துக்கு வந்து பார்த்துவிட்டு மாலையில் வீடு திரும்பிய பெண்களின் பெற்றோர்களில் அநேகர் அவ்வட்டாரத்தில் வசித்தனர். பள்ளிக்கூடம் அங்கு இருந்தால், இன்னும் நிறையக் குடும்பங்கள் தங்கள் பெண்களைப் படிக்க அனுப்பி வைக்கலாம். சாவித்திரியின் வீடும் அருகிலேயே இருந்தது. அவர்கள் குடும்பம் சாவித்திரியின் வீட்டுக்குப் பின்னால் விஸ்தாரமான ஓரிடத்தை வாங்கியிருந்தது. அங்கு இரண்டு வீடுகள் எழுப்பத் திட்டமிட்டிருந்தனர் பின்னால் அது அவர்களுடைய காலனி என்று அழைக்கப்படவிருந்தது.

இருந்தாலும் சகோதரி தயங்கினாள். மாதர் சங்க அங்கத்தினர்களிடம் அந்த வீட்டை விலைக்கு வாங்கி விடும்படி கோரிக்கை செய்ய அவள் தீர்மானிப்பதற்குள் வேறு ஒருவர் அதை வாங்கி விட்டார்.

இந்தத் துரதிருஷ்டத்துக்குக் காரணம் சனி தசைதான் என்று அப்போது கருதப்பட்டாலும், அது ஒரு பாக்கியமாகவே முடிந்தது. சகோதரி வேறு ஒரு பெரிய வீட்டைக் கண்டுபிடித்தாள். அது விஸ்தாரமான அழகான தோட்டத்தினுள் இருந்தது. அது மிகவும் துரதிருஷ்டமான இடம் என்று பெயர் பெற்றிருந்தது. அந்த வீட்டைத் தமக்காகக் கட்டிக் கொண்ட ஒருவர் குடும்பத்துடன் அங்கு குடி புகுந்ததும் பெருத்த கஷ்டத்துக்கு ஆளாகி விட்டார். அதை விலைக்குக் கேட்ட முதல் மனிதரிடம் வீட்டை விற்று விட்டார். அந்த இரண்டாவது சொந்தக்காரரையும் துரதிருஷ்டம் பிடித்தது. அவருக்குப் பின் வந்தவருக்கும் அதே கதிதான்! அதன் பிறகு அந்த வீடு நீண்ட நாட்களுக்குக் காலியாகவே கிடந்தது. அந்த வீட்டின் மீது ஏதோ சாபக்கேடு இருப்பதாக எல்லோரும் நம்பினார்கள். அதைக் கட்டுவதற்கு ஒரு லட்ச ரூபாய் பிடித்ததாம். அதில் கால்வாசி ரூபாய்க்குச் சகோதரியால் அதை வாங்க முடிந்தது.

''இதற்குமுன் எந்தத் துஷ்ட தேவதைகள் அங்கு குடிகொண்டிருந்தாலும் சரி, இனி அவை போய்விடும். எங்கள் மாணவிகளைத் துன்புறுத்த அவற்றுக்கு மனம் வராது'' என்று நான் எல்லோரிடமும் கூறினேன். மூடநம்பிக்கைகளின் விளைவாகப் பிறக்கும் இதுபோன்ற உளறல்களைக் கேட்டுக் கொண்டிருக்க எனக்குப் பொறுமை இல்லை. திருவல்லிக்கேணியில் இதுவரை குப்பை கூளம், சத்தம் இவற்றுக்கு இடையில் வசித்து வந்த பெண்களுக்கு இந்த வீடு ஒரு சொர்க்கமாகத் தோன்றும் என்று நான்





மறைந்த மோதிரம்

(சிங்காரத்தின் விடைகள்)

1. நளினிதேவியின் அறை ஜன்னல் விளிம்பில் புறாவின் வால் இறகு ஒன்று இருந்தது. வால் இறகு சாதாரணமாகக் சுலபமாக உதிராது. யாராவது அதை அழுத்திப் பிடித்துப் பின் பறக்க விடும் போதே அந்த இறகு அப்படி உதிரும். ஆகவே, யாரோ புறாவை அங்கு கொண்டு வந்திருக்க வேண்டும் என்பதை ஊகிக்கிறான் சிங்காரம். மாலாவின் அறையில் மேஜை மீது புறா உணவு பாக்கெட் இருந்தது. இதைச் செய்தவள் அவளாகத் தான் இருக்க வேண்டும் என்று முடிவுகட்டுகிறான்.

2. மேஜையின் மீதிருந்த மாலாவின் காதலன் விலாசம் அந்தப் புறாவை அவள் அங்குதான் அனுப்பியிருக்க வேண்டும் என்ற ஊகத்தை ஏற்படுத்துகிறது. சுரேஷின் வீட்டுத் தோட்டத்தில் காணப்பட்ட ஒரு புறாவின் காலில் ஒரு கயிறு கட்டப்பட்டிருந்தது.

3. சுரேஷின் செய்கையே அவனைக் குற்றவாளி என்பதைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. அவனால் ஆற்றினுள் வீசப்பட்ட பாட்டில் நிமிர்ந்து மிதக்காமல் கவிழ்ந்து மிதக்கிறது. அதன் கழுத்தோடு வேறு ஏதோ ஒன்று கட்டப்பட்டுள்ளதைச் சொல்லாமல் சொல்லி விடுகிறது. காலி பாட்டில்களை நீரில் வீசினால் கழுத்து மேல்புறமாகத்தான் மிதக்கும். இந்தப் பாட்டிலோ? படத்தை மறுபடி பாருங்களேன்!





திடமாக நம்பினேன்" என்றார் சகோதரி இன்று என்னிடம்.

அம்மாணவிகள் அவ்வாறேதான் எண்ணினார்கள். ஆனால் சனி தசை இன்னும் சுப்புலக்ஷ்மியை விட்டபாடில்லை.

"இப்போது, உங்களுக்கு மிகவும் அருவருப்பான ஒரு விஷயத்தைப் பற்றிக் கூறப் போகிறேன்" என்றார் சகோதரி என்னிடம். "என் கீழ் ஓர் உபாத்தியாயினி பணியாற்றி வந்தாள். அவள் மிகவும் நல்ல பெண், புத்திசாலி. சிறந்த முறையில் வேலை செய்து வந்தாள். அவளுக்கு இன்னும் கல்யாணமாகியிருக்கவில்லை. ஒரு மனிதன் அவளைத் தொந்தரவு செய்து கொண்டே, அவள் வாழ்க்கையைத் துன்பமயமாக்கிக் கொண்டிருந்தான். அவன் ஓர் உயர்தர அரசாங்க அதிகாரிதான். இத்தனை மட்டமாக அவன் நடந்து கொண்டிருக்கக் கூடாது. அவன் அவளை நிம்மதியாக இருக்க விடவில்லை. அவள் பாதுகாப்பை நாடித் தன்னை நன்ஹவுஸில் சேர்த்துக் கொள்ளுமாறு என்னைக் கேட்டுக் கொண்டாள். நானும் ஒப்புக் கொண்டேன். அதன் பிறகும் அந்த மனிதன் அவளைச் சும்மா விடுவதாக இல்லை."

சகோதரி பேசி வருகையில் இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு நான் இதுவரையில் பார்த்ததேயில்லை. வெள்ளி இழைகளாகத் தோற்றமளித்த அவர் கேசம் கலைந்து தலையைச் சுற்றி ஒளிவட்டம் போல் நின்றது.

தெளிவாகக் காது கேட்க வேண்டும் என்பதற்காக அவர் பயன்படுத்திய கருவியின் பாட்டரிப் பெட்டியை உணர்ச்சிவசப்பட்டதால் அவரது வலக்கரம் அழுத்திப் பற்ற மணிக்கட்டுக்கள் ஒளிர்ந்தன.

அங்கு நாங்கள் பேசுவதை ஒட்டுக் கேட்க யாரும் இருக்கவில்லையாயினும், சகோதரி குரலைத் தாழ்த்திக் கொண்டார். "இந்த மனிதன் இரவு வேளைகளில் நன்ஹவுஸுக்கு வந்து, கண்ட கண்ட தவறான வார்த்தைகளை மதில்சுவர்களின் மீது எழுதிவிட்டுச் செல்வான். தினமும் காலையில், வெளியுலகில் மனிதர் நடமாட்டம் ஆரம்பமாவதற்குமுன், நான் வேலைக்காரர்களைத் தண்ணீர் வாளிகளுடனும் துடைப்பத்துடனும் அனுப்பி அவன் எழுதியவற்றைக் கழுவி அழித்து விடச் செய்வேன். இதெல்லாம் மிகவும் அருவருப்பை அளித்தன எனக்கு."

"அந்த மனிதனுக்குப் பைத்தியமோ?" என்று நான் கேட்டேன்.

"அப்படித்தான் இருக்க வேண்டும். அதுவும் இந்த ஒரு விஷயத்தில் மட்டும்தான். இப்படிப் பல மாதங்கள் தொடர்ந்து நடந்தது. பிறகு 1931ம் வருடம் ஏப்ரல் மாதம் நித்யாவும் நானும் மற்றும் பலரும் விடுமுறைக்காகப் பர்மா செல்லுவதெனத் தீர்மானித்தோம்."


ஏறக்குறைய ஒவ்வொரு கோடை விடுமுறையையும் அக்குடும்பத்தினர் மகிழ்ச்சிகரமாகக் கழிப்பார்கள். நாட்டிலுள்ள பெரிய கோவில்கள், சரித்திர சம்பந்தப்பட்ட இடங்கள் இவற்றில் பெரும்பாலானவற்றை சுப்புலக்ஷ்மி பார்த்து விட்டிருந்தாள். காச்மீரத்துக்குச் சென்றிருந்த போது இமாலயத்தைப் பார்த்திருந்தாள். ஆனால் இதற்குமுன் ஒரே ஒரு முறைதான் அவள் கடலைத் தாண்டியிருந்தாள்; அது இலங்கைக்குச் சென்ற போது.

"ரங்கூனில் உள்ள ஒரு பிரதிநிதி எங்களைத் தன்னுடன் வந்து தங்கும்படி அழைத்திருந்தாள். அவளே எங்கள் கப்பல் பிரயாணத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய முன்வந்திருந்தாள். நாங்கள் ரங்கூனுக்குப் போய்ச் சேர இருந்த அன்று, காலை தோட்டத்தில் சுவரோரமாக நின்று அவள் தன் பக்கத்து வீட்டுக்காரருடன் பேசிக் கொண்டிருந்தாளாம். அவர் ஒரு ஸி. ஐ. டி. அதிகாரி. அவள் அன்று பிற்பகல் எங்களை வரவேற்பதற்காகத் துறைமுகத்துக்குத்தான் போகப் போவதாக அவரிடம் கூறினாள். அதற்கு அவர், தாமும் அன்று துறைமுகத்துக்குச் செல்லவிருப்பதாகவும், ஆகவே அவளைத் தாம் அங்கு சந்திக்க நேரலாம் என்றும் கூறினார். சென்னையிலிருந்து கப்பலில் வரும் ஒருவர் அரசியல் சம்பந்தமாகச் சந்தேகிக்கப்பட்டவர் என்றும் அவருடைய சாமான்களைப் பரிசோதிப்பதற்காகத் தாம் செல்லப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார். என்னுடைய பிரதிநிதி எங்களை எதிர்கொண்டு அழைக்கக் கப்பலில் ஏறினாள். நாங்கள் அவளைக் கண்டு பேசுவதற்கும், அந்த ரகசியப் போலீஸ் அதிகாரி அங்கு தோன்றுவதற்கும் சரியாக இருந்தது. 'ஓ! சகோதரி சுப்புலக்ஷ்மிதான் நீங்கள் பார்க்க வந்த பெண்மணியா? அவர் பெட்டிகளைத் தான் நானும் சோதனையிட வந்திருக்கிறேன்' என்றார் அவர்!"

சகோதரி இன்று என் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தார். அன்று அச்சம்பவம் நடந்த போது எவ்வளவு கலக்கம் அவர் கண்களில் குடிகொண்டிருந்திருக்குமோ அவ்வளவு இப்போதும் தென்பட்டது. தலையை ஓர் ஆட்டு ஆட்டி, முகத்தை அருவருப்புடன் சுருக்கிக் கொண்டார். "நான் எப்போதுமே அரசியலில் சிறிதும் சம்பந்தப்பட்டிருந்ததில்லை என்பதை உங்களுக்கு நான் கூறத் தேவையில்லை. பாவம், அந்த ரகசியப் போலீஸ் அதிகாரியும் அதை ஊகித்திருக்க வேண்டும். என்னுடைய துணிமணிகளையும், மற்ற சாமான்களையும் துழாவிப் பார்க்க அவர் மிகவும் சங்கடப்பட்டார். நான் பர்மாவில் இருந்த வரையில் ரகசியப் போலீஸ் என்னைத் தொடர்ந்தபடியே இருந்தது. பிறகுதான் எனக்குத் தெரிந்தது. சென்னையில் சுவரில் ஏதேதோ கிறுக்கித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த அந்த மனிதன்தான் இதற்குக் காரணம் என்று. நான் அரசியல் சதி வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக அவன் போலீஸாரிடம் குற்றம் சாட்டியிருந்தான்!" சகோதரி திடீரென்று மகிழ்ச்சி நிரம்பிய சிரிப்பை உதிர்த்தாள். "சதி வேலைகளில் நான் ஈடுபடுவதாம்! எவ்வளவு அபத்தம்!" என்றார். (தொடரும்)

நேர்மை

அன்னம்



"அடுத்தது நீங்கள்!" என்றார் தனராஜ்.

இரண்டு பெரிய பெட்டிகள், நான்கு கூடைகள், ஒரு மிகப் பெரிய படுக்கை இத்தனையும் தனராஜின் முன் கிடந்தன. எதிரில் இருந்தவர் இளநகை புரிந்தார்.

"போன தடவை நான் சிங்கப்பூரிலிருந்து வந்தபோது வேறு ஒருத்தர் இங்கே கஸ்டம்ஸ் இன்ஸ்பெக்டராக இருந்தாங்க....."

"உம்...." என்றார் தனராஜ். அவர் கைகள் பெட்டிகளின் சாவிகளுக்காக நீண்டன.

சாவியை எடுத்துக் கொடுத்த பிரயாணி, "சிங்கப்பூருக்கு நான் வருஷத்திலே மூணு தடவைக்கு மேலே போய் விடுவேன். உங்களுக்கு முன்னாடி இருந்தவங்க எல்லாம், என் முகத்தைப் பார்த்தவுடனேயே வெளியே அனுப்பிச்சுடுவாங்க... இதெல்லாம் பிரிச்சுக் கூடப் பார்க்க மாட்டாங்க.... ஒன்றும் இருக்காதுன்னு தெரியும்..." என்றான்.

"ஓஹோ.....! அப்படியா?...." தனராஜ் பெட்டியைத் திறந்து விட்டார். அவருடைய பழக்கப்பட்ட கைகள் வேகமாக ஆராயத் தொடங்கின. கசங்க வரிக்குட்டப்பட்ட பல பொருள்கள் மேஜையின் மேல் சிறு மலை போல் குவியத் தொடங்கின.

"என்னங்க நீங்க! எல்லாத்தையும் எடுத்து வெளியே போட்டுக்கிட்டு இருக்கீங்க.....! எனக்கேகூட 'டியூட்டி' போட்டுடுவீங்க போலே இருக்குதே.....!"

தனராஜ் சிரித்தார். "சர்க்காரிலே அப்படிச் சட்டம் கொண்டு வந்தாங்கன்னு, அதுவும் போட வேண்டியதுதான்!"

பெட்டி காலியாகி விட்டது. பிரயாணியின் முகத்தில் ஒரு நிம்மதி படர்ந்ததைத் தனராஜ் கவனிக்கத் தவறவில்லை. காலியான பெட்டியைக் கையால் தூக்கிப் பார்த்தார். சற்றுக் கனம் அதிகமாக இருந்தது போல் தெரிந்தது. பெட்டியின் கைப்பிடியைப் பிடித்துக் கடிகாரத்தின் 'பெண்டுலம்' போல் ஆட்டிப் பார்த்தார். பெட்டி ஒரு பக்கம் அதிகமாகச் சாய்ந்தது.

பெட்டியின் அடியை விரல்களால் தட்டிப் பார்த்தவர் ஒரு முடிவுக்கு வந்தவராய்த் தம் பேனாக் கத்தியைத் திறந்து ஓரிடத்தில் தையலைக் கிழிக்க முயன்றார்.

அவருடைய கரத்தை அழுத்திப் பிடித்தது பிரயாணியின் கரம்.. மற்றொரு கரத்திலிருந்து இரண்டு மோதிரங்கள் காலியான பெட்டியில் உருண்டன. தனராஜ் அமைதியுடன் கப்பலிலிருந்து இறங்கியவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். மூன்றாவது மோதிரமும் விழுந்தது.

"இன்னும் அநேக மனிதர்கள் காத்திருக்கிறார்கள். உங்கள் கைகளை எடுங்கள்!" என்றார் பொறுமையுடன்.

பிரயாணியின் நெற்றியில் வியர்வைத் துளிகள் தெரிந்தன. தம் கைக்கடிகாரத்தை உயர்த்திக் காண்பித்தார்.

"இந்தக் கடிகாரம் சிங்கப்பூரிலே மூந்நூற்றைம்பது டாலர்!"

"அப்படியா?......" என்றார் தனராஜ். கைப்பிடி ஒரு பக்கம் அதிகமாகப் பிரிந்துவிட்டது.

"செயின்கூட முழுத் தங்கம்தான்!.... இருபத்திநாலு காரட்.... ஐந்து பவுனுக்குக் குறையாது....."

"நன்றாக இருக்கிறது.....!" என்ற தனராஜ் கத்தியை மறுபக்கம் ஓட்ட யத்தனித்தார்.

"இதை நீங்களேகூட வைத்துக் கொள்ளலாம்...... தயவுசெய்து உடனே என்னை வெளியே அனுப்பினீர்களானால்...."

தனராஜ் சிரித்தார். "பரிசோதனை முடித்தவுடன் உங்களை ஒரு நிமிஷம்கூட இங்கே நிறுத்தி வைக்க மாட்டோம்." இரண்டாவது பக்கம் கைப்பிடியும் பிரிந்துவிட்டது. அடியை அப்படியே நகர்த்திப் பார்த்தார் தனராஜ். கிட்டத்தட்ட இருபத்தைந்து கடிகாரங்களும், நூற்றுக்கு மேற்பட்ட சவரன்களும் மின்னின. இவ்வுக் காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தவை வைரங்களாக இருக்க வேண்டும்!

"நான் மிகவும் வருந்துகிறேன், ஸார்! நானே விரும்பினாலும்கூட இனிமேல் நீங்கள் சீக்கிரமாக இங்கிருந்து போக முடியாது!" என்றார் தனராஜ்.

அவர் கண் ஜாடையைக் கண்டு இரண்டு சேவகர்கள் அந்தப் பிரயாணியின் அருகில் நின்று கொண்டார்கள். இன்னும் இருவர் அந்தப் பிரயாணியின் உடைமைகளை அப்படியே எடுத்துக் கொண்டு பெரிய அதிகாரியின் அறையில் வைத்தார்கள்.

பரிசோதனை இன்னும் தீவிரமாக நடந்தது. பிரயாணியின் மிதியடியின் அடிப்பாகத்தில் இன்னும் சில பொருள்கள் கிடைத்தன. இடுப்புப் பெல்டின் தையலுக்கிடையே தங்கச் சங்கிலி கிடைத்தது. உண்மையில் அவருக்கே 'டியூடி' போட்டாலும்கூடக் கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாய் வரை அவர் கட்ட வேண்டி வந்திருக்கும்.

பிரயாணியின் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்ட பின்னர், அவர் போலீஸ் கொட்டடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரால் செய்ய முடிந்தது ஒன்றே ஒன்று தான். தனராஜ் இருந்த பக்கம் பார்த்து, "தூ" என்று உமிழ்ந்ததுதான்!

"வெல்டன், தனராஜ்!" என்று பாராட்டினார் அதிகாரி. பணிவுடன் தலையைச் சாய்த்து நன்றி தெரிவித்தார் தனராஜ்.

அன்று மாலை தனராஜும் சிங்காரமும் ஒன்றாகத்தான் வீடு திரும்பினார்கள். சிங்காரமும் தனராஜைப் போலவே ஒரு சுங்க அதிகாரிதான். இருவர் வீடுகளும் பக்கத்துப் பக்கத்துத் தெருக்களில் இருந்தன.

சிங்காரம் தம் வீட்டை அடைந்ததும் வாயிற் கதவை அழுத்தித் தாளிட்டார். அவர் உடுப்புக்களினிடையே மறைக்கப்பட்டிருந்த சில பொருள்களைப் பத்திரப்படுத்த அத்தனை ஜாக்கிரதை தேவையாக இருந்தது. அவர் மனைவி நல்ல அநுபவம் உடையவள். எதை எதை எங்கே எங்கே பத்திரப்படுத்த வேண்டுமோ, அங்கே எடுத்து வைத்தாள்.

சிங்காரத்தின் பார்வை அவர் வீட்டைச் சுற்றிச் சுழன்றது. அதோ இருப்பது நேர்த்தியான ஜப்பான் மின்சார விசிறி. பக்கத்தில் இருந்த சுவர்க் கடிகாரம் ஜெர்மனியிலிருந்து வந்தது. ரேடியோகூட வெளிநாட்டுத் தயாரிப்புதான். மேஜைமீது போட்டிருந்த 'பிளாஸ்டிக்' விரிப்பு முதல் அவர் கடைக்குட்டி பென்சில் சீவ உபயோகிக்கும் சிறு கத்திகூட அயல்நாட்டிலிருந்து வந்தவைதான்.

இதே சமயத்தில்தான் தனராஜும் தம் வீட்டினுள் நுழைந்தார். அவரைச் சுற்றிக் கொண்டன குழந்தைகள், நால்வர். அவர் மனைவி வசந்தா ஒரு புன்முறுவலுடன் எதிர் கொண்டாள்.

"என்னங்க?... ரொம்பக் களைச்சுப் போயிருக்கீங்க போலத் தெரியுதே! வேலை அதிகமோ?" என்று கேட்டாள்.

"இன்னிக்குப் பாரு ஒரு 'பார்ட்டி' என் கிட்ட வசமா மாட்டிக்கிட்டான். அவன் ஒருத்தனைப் பார்த்து அனுப்பவே அரை நாள் ஆயிற்று..."

"சர்க்காருக்கு எத்தனை லாபம் உங்களால் இன்னைக்கு?"

"எல்லாமே லாபந்தான். என் கண்ணிலே மண்ணைத் தூவ என்னவெல்லாம் செய்யறாங்க தெரியுமா?"

"அது கிடக்குங்க... வீட்டுக்கு வந்தப்புறமும் அந்தப் பிழைப்பைப் பற்றி என்னங்க பேச்சு?... குளிச்சிட்டுச் சாப்பிட வாங்க!" என்று கூப்பிட்டாள்.

மறுநாள் காலை.

தனராஜ் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதே சூரியனின் கிரணங்கள் 'சுள்' என்று உறைத்தன. தம் மகனைக் கூப்பிட்டு அடுத்த வீட்டில் மணி என்ன என்று விசாரித்து வரச் சொன்னார்.

"மணி எட்டு அடிச்சுப் பத்து நிமிஷங்கள் ஆகுதாம், அப்பா!" என்று வந்து கூறியது குழந்தை.

அவர் அவசரப்பட்டுக்கொண்டு எழுந்தார். "வசந்தா... சீக்கிரம், சீக்கிரம்...எட்டரை மணிக்கு அங்கே நான் இருக்க வேண்டும்..."

"ஒரு அலாரம் 'டைம்'பீஸாவது வாங்கி வையுங்களேன்! இப்படி ஒவ்வொரு நாளும் மணி தெரியாமல் அவசரப்பட்டுக்கிட்டு...."

"வாங்கலாம், வாங்கலாம்!" என்று சொல்லிவிட்டு 'ஷேவ்' செய்து கொள்ளப் போனார் தனராஜ்.

கோர்ட்டில் மாஜிஸ்திரேட் வரச் சற்றுத் தாமதம் ஆயிற்று. வெளியில் உலவிக் கொண்டிருந்தார் அவர்.

வசந்தா சொன்னது சரிதான்! ஒரு 'டைம்பீஸ்' வாங்க வேண்டியதுதான். சம்பளம் அத்தனையும் எது எதற்கோ செலவழிந்து விடுகிறது. அப்படியும் ஒரு முறை ஒரு டைம்பீஸ் இந்தியாவில் செய்தது வாங்கினார். ஆறு மாதங்கள்தான் ஆயிற்று. அப்புறம் அதன் ரிப்பேருக்காகச் செலவழித்தது அதன் விலையைக் காட்டிலும் அதிகம். கடைசியில் உபயோகம் இல்லாமல் கடிகாரம் ஒரு மூலையில் கிடந்தது.

டைம்பீஸ்' ஒன்று வாங்க அனுப்பியதுதான்!

அன்று மாஜிஸ்திரேட்டு விசாரணையை இரண்டு நாட்களுக்கு ஒத்திப் போட்டு விட்டார். முதல் நாள் சுங்கப் பரிசோதனையின் போது பிடிபட்ட பிரயாணியைப் போலீஸார் அழைத்துக் கொண்டு போனார்கள்.

மறு நாள் தனராஜ் வீட்டிலிருந்த போது ஓர் உருவம் கதவைத் தட்டியது. பரிதாபத்துக்குரிய யாசகன் ஒருவன் அங்கே நின்றிருந்தான். அவனுடைய கிழிந்த சட்டையும், கலைந்த கேசமும், குழி விழுந்த கண்களும் ஓர் இரக்கத்தைத் தருவித்தன.

அவனை அவர் அதற்கு முன்பு பார்த்திருக்கிறார். கடைத்தெரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு ஜோஸியம் சொல்பவன்தான் அவன்.

''ஸார்! என் பெண்டாட்டி சாகக் கிடக்கிறாள்! உடனே இருபத்தைந்து ரூபாய் வேண்டும்! எங்கே எல்லாமோ கேட்டுப் பார்த்து விட்டேன்!'' என்று கெஞ்சினான் அவன்.

அவரிடம் அப்போது இருபத்தைந்து ரூபாய் இருந்தது. கொடுக்கலாமா? நம்பிக் கொடுக்கலாமா?

''என்னை நம்பலாமான்னு யோசிக்கிறீங்களா, ஸார்! இந்தாருங்க இந்தக் கடிகாரத்தை வைச்சுக்கிட்டுக் கொடுங்க போதும்!''

தனராஜ் அந்தக் கைக் கடிகாரத்தை வாங்கிப் பார்த்தார். அது வெளியூரிலிருந்து வந்த கடிகாரம் என்று புரிந்து கொண்டார். நிச்சயம் அதன் மதிப்பு இருநூறு ரூபாய்க்குக் குறையாது.

''இதை ஏனய்யா, என்னிடம் கொண்டு வந்து கொடுக்கிறாய்? ஒரு மார்வாரிக் கடையில் கொண்டு கொடுத்தால் ஐம்பது ரூபாய்க்கு மேல் கொடுப்பானே!'' என்றார் அவர்.


வசந்தா அன்று அப்போது வந்தாள். அந்தக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்து, ''நன்றாக இருக்குதுங்க!'' என்றாள்.

''உங்களுக்குத் தெரியாதுங்களா? இருபத்தஞ்சு ரூபாய்க்கு அவன் அம்பது ரூபாய் வட்டி கேட்பானுங்களே, ஸார்!'' என்றான் அவன் பரிதாபமாக.

தனராஜ் உள்ளேயிருந்து ஒரு காகிதத்தை எடுத்து வந்தார்.

''நான் உனக்குப் பணம் தருகிறேன். நீ எனக்கு ஒரு ரசீது நான் சொல்வது போல் எழுதிக் கொடு!'' என்றார்.

அவன் அவர் சொன்னபடி எழுதினான். தான் அவரிடமிருந்து இருபத்தைந்து ரூபாய் பெற்றுக் கொண்டதாகவும், அதற்கு ஈடாக அந்தக் கைக் கடிகாரத்தைக் கொடுப்பதாகவும் எழுதிக் கையெழுத்திட்டுத் தேதியும் போட்டுக் கொடுத்தான். இருபத்தைந்து ரூபாய்களை வாங்கிக் கொண்டு அவரைக் கும்பிட்டு விட்டுப் போனான்.



''சாமி! இனிமேல் பிச்சை எடுத்தால் ஐம்பது ரூபாய் அபராதமாம்! இரண்டு பைசா போடறீங்களே! என் வயிற்றுக்கு இல்லாவிட்டாலும் அபராதத்துக்கேனும் கூடக் கொடுங்க!''

''வசந்தா! இந்தக் கடிகாரம் நான் 'டைம்பீஸ்' வாங்கும் வரை உபயோகப்படும்!'' என்றார் தனராஜ். அதை அவர் தமது இடது கையில் கட்டிக் கொள்வதைப் பெருமையுடன் பார்த்தாள் வசந்தா.

மறு நாள் கோர்ட் கூடிற்று. பிடிபட்ட பிரயாணி தன் பக்கம் வக்கீல் வைத்து வாதாடினான். அந்த வக்கீல் தனராஜைக் குறுக்கு விசாரணை செய்தார்.

''நீங்கள் சம்பவம் நடந்த அன்று எத்தனை பேர்களைப் பரிசோதித்தீர்?''

''வாதியைச் சேர்த்து ஐந்து பேர்கள்!''

''எல்லோரிடமும் சுங்கம் கட்ட வேண்டிய பொருள்கள் பிடிபட்டனவா?''

''இல்லை......''

''ஏன்?''

''மூவர் அவர்கள் கொண்டு வந்த பொருள்களின் விவரத்தை என்னிடம் சொன்னார்கள். பரிசோதித்துப் பார்த்ததில் அவர்கள் கூறியது சரியாக இருந்தது. குறிப்பிட்ட சுங்கச் சலுகைக்கு உட்பட்ட மதிப்புக்குரிய பொருள்களே அவர்களிடம் இருந்ததால், நான் வசூலிக்கவில்லை.''

''நல்லது! நான்காவது நபர்?''

''அவரிடம் சுங்கம் விதிக்கப்பட வேண்டிய பொருள்கள் எதுவுமே இல்லை!''

''நிச்சயமாக.....!''

''ஆமாம்.... நான் அறிந்த வரையில்...''

''என் கட்சிக்காரரை அடுத்தபடி விசாரித்தீர்கள், இல்லையா?''

''ஆமாம்......''

''நான்காவது நபரை நீர் பரிசோதிக்கும் போது என் கட்சிக்காரர் அறையின் வெளியில் இருந்தார். இல்லையா?''

''ஆமாம்!''

''அங்கிருந்து உமது மேஜை, நீர் வேலை செய்வது எல்லாம் தெரியும், இல்லையா?''

''தெரியும்!''

''அவர் சொல்கிறார்.... நான்காமவர் தம் கையில் கட்டியிருந்த ஒரு கறுப்புப் பட்டை மிட்ட கடிகாரத்தை உம்மிடம் கொடுத்ததாகவும், நீர் அதை வாங்கிக் கொண்டு உமது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டதாகவும் — அதை என் கட்சிக்காரர் பார்த்ததாகவும் கூறுகிறார். நீர் என்ன சொல்கிறீர்?''

''அது அப்பட்டமான பொய்!....!''

தனராஜின் முகத்தில் சிவப்பு ஏறியது.

''மன்னிக்க வேண்டும், மிஸ்டர் தனராஜ்! என் மேல் கோபப்படக் கூடாது. நான் என் கடமையைத்தான் செய்கிறேன். உமது இடது கையைச் சற்றுத் தூக்கிக் கோர்ட்டாருக்குக் காண்பிக்கவும்.....''

தனராஜ் நிச்சலமான முகத்துடன் கையைத் தூக்கிப் பிடித்தார்.

"அடடா! நீங்கள்கூட ஒரு கறுப்புப் பட்டையிட்ட கடிகாரத்தைக் கட்டிக் கொண்டு இருக்கிறீர்களே! இது உங்களுடையதுதானே?"

"இல்லை!"

"விளக்கமாகச் சொல்லுங்கள்!"

"இது என்னிடம் அடமானமாக வைக்கப் பட்டது."

"ஓ! அப்படியா? உங்களுக்கு லேவாதேவியும் பழக்கம் என்று சொல்லுங்கள்!"

கோர்ட்டில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது.

"இல்லை..... இது ஒரு ஏழைக்கு உதவும் பொருட்டுச் செய்த சிறு உதவி...."

"எவ்வளவு ரூபாய் கொடுத்தீர்?"

"இருபத்தைந்தே ரூபாய்...."

"இந்தக் கடிகாரத்தின் மதிப்பு உமக்குத் தெரியுமா ?"

"தெரியும்! இருநூறு ரூபாய் இருக்கும்."

"இருநூறு ரூபாய்க் கடிகாரத்தை ஒருவன் இருபத்தைந்து ரூபாய்க்குக் கொடுத்து விட்டுப் போனான் என்று சொல்கிறீர்...."

"ஆமாம்..... அதுதான் நடந்ததும்கூட."

"இந்தப் பொருள் என்று உம்மிடம் அடமானமாக வைக்கப்பட்டது?"

"நேற்று....."

"மிக்க நன்றி.... மிஸ்டர் தனராஜ்!.... என் கட்சிக்காரர் சொல்கிறார் தாம் குற்றவாளி அல்ல என்று.... அவரிடமிருந்தும் நீங்கள் எதிர்பார்த்தால்....."

அரசாங்க வக்கீல் எழுந்து ஆட்சேபித்தார்.

"அவரிடமிருந்தும் என்று குறிப்பிடுவது சரியல்ல. எவரிடமிருந்தும் எதுவும் வாங்கியதாகச் சாட்சி கூறவில்லை..... ருசுவும் ஆகவில்லை......" என்றார்.

"மன்னிக்கவும். அவரிடம் நீங்கள் ஏதோ எதிர்பார்க்க, அவர் மறுத்தபடியால், சிறு குற்றம் பெரிதாக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?"

"இதுவும் அப்பட்டமான பொய்!" என்று கூறினார் தனராஜ்.

கூண்டிலிருந்து இறங்கிய தனராஜைப் பார்த்து முகத்தைச் சுளித்தார் அதிகாரி. பேசப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

சிங்காரம் அவர் தோளின் மேல் கையை வைத்தார். "என்ன தனராஜ்!.... இப்படிப் போய்ச் சிக்கிக் கொண்டு விட்டீர்களே! இந்தக் கேஸ் முடியும் வரையிலாவது இதைக் கையில் கட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கலாமே ?" என்று அனுதாபப்பட்டார்.

தனராஜுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. உதடுகள் துடித்தன.

"நான் சொன்னது அத்தனையும் உண்மை சிங்காரம்.... அத்தனையும் உண்மை.... அந்த ஆளிடம் நான் ரசீதுகூடக் கேட்டு வாங்கி வைத்திருக்கிறேன்."

"மன்னிக்க வேண்டும் தனராஜ்.... நம் அதிகாரியின் முகம் சரியாக இல்லை. உம்மை அவர் நம்பவில்லை....."

"நான் சத்தியமாகச் சொல்கிறேன், சிங்காரம்!......" தனராஜின் குரல் தழுதழுத்தது. சிங்காரம் அந்தச் சத்தியத்துக்கு மதிப்பு கொடுக்கவில்லை என்பது அவர் இகழ்ச்சியாக முறுவலித்ததிலிருந்தே தெரிந்தது.

தனராஜுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவசரம் அவசரமாக ஓடினார்.

எந்த இடத்தில் – அந்த மனிதன் – அவரிடம் கடிகாரம் கொடுத்தவன் – வழக்கமாக இருப்பானோ அங்கே போய்ப் பார்த்தார். அவன் அங்கு இல்லை. அக்கம் பக்கத்தில் விசாரித்தார்.

"அவனா?.... நடராசனைத் தேடுறீங்களா? அவன் இந்த இடத்தை விட்டுப் போய் மூன்று நாட்களாச்சே!"

"நடராசனா?.... அவன் பெயர் கண்ணப்பனில்லை?..... கண்ணப்பன் என்றுதானே இதில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறான்!........."

"இல்லீங்களே!.... அவன் பெயர் நடராசனுங்களே!" என்றார் தகவல் சொன்னவர்.

"நாம் ஒரு சூழ்ச்சிக்குப் பலியாகிவிட்டோம் !" என்பதை அப்போதுதான் உணர்ந்தார் தனராஜ்.

"இல்லை! அவன் கண்ணப்பன்தான்! அவன் மனைவி படுத்த படுக்கையாக இருக்கிறாளாம்......."

மற்றவர் கடகட வென்று சிரித்தார்.

"என்னங்க? ஒரே புரளியாக இருக்குது ! இவனை நம்பி எவன் ஊர் பெண் கொடுப்பான்? இங்கேதான் எப்போதும் படுத்திருப்பான்?.... இரண்டு நாட்களாகக் காணோம்!"

தளர்ந்தநடையுடன் திரும்பினார் தனராஜ். அவரை நம்புபவர் எவருமே அங்கு இல்லை. வீட்டுக்குப் போனவர் நீண்ட விடுமுறை கேட்டு விண்ணப்பம் எழுதி அனுப்பி வைத்தார். மீண்டும் வேலைக்குப் போகவோ, அந்த அதிகாரியின் ஏளனம் கலந்த பார்வையைத் தாங்கவோ அவருக்குச் சக்தியில்லை.

சிங்காரம் தம் மனைவியுடன் பேசிக்கொண்டிருந்தார். அன்றைய மலரும் அவர் முன்னே கிடந்தது.

"இந்தத் தனராஜ் அசட்டுத்தனமா எதையோ வாங்கி மாட்டிக்கிட்டு, சொல்லவும் முடியாமெ, மெல்லவும் முடியாமெ வேலையை ராஜிநாமா செய்து விட்டான். இதற்கெல்லாம் ஒரு தனி சாமர்த்தியம் வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

தனராஜின் உள்ளத்தில் குருதி கசிந்து கொண்டிருந்தது. "நான் யோக்கியன் ஐயா!" என்று அவர் கதறிக் கொண்டிருந்தார்.

அவர் கூற்றை நம்ப உலகிலே ஒரே ஓர் ஆத்மாதான் இருந்தது. அது அவர் தாலி கட்டிய மனைவி மட்டுமே!

பலியாகப் போகும் ஆட்டை நினைத்துக் கசாப்புக் கடைக்காரரும், வலையில் சிக்கிய பூச்சியைப் பற்றிச் சிலந்தியும் கவலைப்பட முடியுமா ?

உலகம் சுழன்றுகொண்டுதான் இருந்தது.



- கட்டணம் தேவையா?
- ஆரம்ப ஆசிரியர் இளப்பமா?
- இதோ ஒரு புகார்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் அருளாட்சியினாலும், அறத்துறை அமைச்சர் அவர்கள் முயற்சியினாலும் ஆஸ்திகம் தழைத்து நமது ஆலயங்கள் புனருத்தாரணம் அடைந்து புதுப் பொலிவோடு திகழ்கிறது மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஆனால் மேற்படி மகிழ்ச்சியைக் குறைக்கும் வகையில் காரியங்கள் நடப்பதை வேதனையுடன் சொல்ல வேண்டியிருக்கிறது. அதுதான் தமிழ்நாட்டின் பிரபல ஆலயங்களில் நுழைவுக் கட்டணம் வசூலிப்பது. இன்றைய ஆட்சியில் இலவச வைத்திய வசதி, இலவசக் கல்வி என்று படிப்படியாக ஜனங்களுக்கு நன்மை செய்யும்பொழுது இறைவன் சந்நிதானத்தில் நுழையக் கட்டணம் தேவையா? ஆண்டவன் சந்நிதியில் எல்லோரும் ஜாதி பாகுபாடு இன்றித் தரிசனம் செய்யச் சட்டமிட்டு வழிவகுத்துக் கொடுத்த ஆட்சியில் காசு கொடுத்தவர்களுக்குத்தான் கடவுள் தரிசனம் என்பது விந்தை.

சேலம்
11–5–66 எஸ். கந்தசாமி

ஆரம்ப ஆசிரியர்கள் இழி சொல்லாலும் வறுமையாலும் மிகவும் இன்னலுறுகிறார்கள். 'ஆரம்பப்பள்ளி ஆசிரியன் தானே, அவனுக்குச் சமையல் பண்ணும் தகுதி ஒன்றிருந்தால் போதும் என்னும் அடிப்படையில் தங்கள் கல்வி இதழில் (20–2–66) நகைச்சுவைத் துணுக்கு ஒன்று வெளியிட்டிருந்தது. இது மட்டுமல்ல; ஓர் ஆரம்ப ஆசிரியரைப் பற்றி உயர்நிலை ஆசிரியர் ஒருவரின் 'புகழ் உரை'யைப் பாருங்கள்.

''எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் பாஸ் செய்வோம் என்ற நம்பிக்கை இல்லாதவர்கள் குருட்டாம்போக்கில் பாஸ் செய்துவிட்டு ஆசிரியர் பயிற்சி பெறுகிறார்கள்.''

என்னைப் போன்று எஸ். எஸ். எல். ஸி.யில் அதிக மார்க்குகள் வாங்கியது மட்டுமல்ல; பி. யு. ஸி. படித்துப் பாஸ் செய்தும் ஆசிரியர் தொழிலில் விரும்பி ஈடுபட்டவர்கள் ஏராளம் உண்டு.

ஆசிரியர்கள் மதிய உணவில் ஊழல் புரிவதாகச் சொல்லப்படுகிறது. அரசு மானியம் உண்டியொன்றுக்குத் தருகிற கேவலம் ஆறு காசுகளில் அவர்கள் என்னதான் லாபம் அடைய முடியுமோ?

எந்த வசதியும் பெறாத உள்ளார்ந்த பகுதிகளில் வசிக்கும் சாதாரண கிராமத்தினருக்குக் கூட ஆசிரியர் என்றால் ஓர் இளப்பம். இதற்கெல்லாம் காரணம் மாணவர்களை வீடு வீடாகச் சென்று ஆசிரியர் பள்ளிக்கு அழைத்து வருதலாகும் என்றே சொல்லத் தோன்றுகிறது. அப்படி அழைக்கும்போது அவருக்குக் கிடைக்கும் வசைச் சொற்கள் கணக்கில.

சாதாரண ஓர் இலாகா பியூனுக்குக் கிடைக்கிற மரியாதையும் மதிப்பும்கூட இந்த ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் செல்லும்போது கிடைப்பதில்லை.

இவைகளையெல்லாம் எண்ணும்போது, மாதா, பிதா, குரு தெய்வம், எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும், குருவே துணை என்னும் நமது மூதாதைகளின் அனுபவ மொழிகள் இன்று கேலிக் கூத்தாக்கப் படுகிறது என்றே கூறத் தோன்றுகிறது.

மு. இராமசாமி,
வல்லம், ஆரம்ப ஆசிரியன்

தலை ஒட்டிப் போடப்படும் தபால்கள் காணாமலே போய்க் கொண்டிருக்கின்றன. இது இன்றைய தபால் இலாக்காவில் சர்வ சாதாரண ஒன்றாக இருக்கிறது. இது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டியவர் உடனடியாக எடுக்க வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும். 15 காசுகளும், கூடுதலாக 13 காசு ஒட்டி எக்ஸ்பிரஸ் தபால்களாக அனுப்பும் தபால்கள் தான் காணாமல் போகின்றன. கவரில் ரூபாய் நோட்டுக்களை வைத்து அனுப்புகிறார்கள் என்றும், இடையே பிரிக்கப்படுகிறதென்றும், பின் காணாமல் போக்குகிறார்கள் என்றும் பொதுமக்களிடையே எண்ணம் பரவலாக ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஒருமாதத்தில் எனக்கு வந்த தபால் ஒன்று கிடைக்கவில்லை. திருவல்லிக்கேணியிலிருந்து ஒரான் செய்து அனுப்பிய டிராப்ட் கிடைக்கவில்லை. கவரில் சேர வேண்டிய விலாசமும், அனுப்புகிறவரின் விலாசமும் தெளிவாகக் குறிக்கப்பட்டு இருந்தும் கிடைக்கவில்லை. என்றும் 9–4–66ல் சென்னை நரசிம்மப்பிரியா என்ற காரியாலயத்துக்குப் போஸ்டல் ஆர்டர் வைத்து அனுப்பப்பட்ட கவரும் போய்ச் சேராது இடையிலே போய் விட்டது. என்னுடைய தபால் தவறியது குறித்து 23–2–66ல் தபால் பெரிய அதிகாரிகளுக்குப் புகார் செய்தேன். ஏறக்குறைய எழுபது நாட்கள் சென்ற பின் 'முழு விவரம் தாருங்கள்' என்று 6–5–66 பதில் அனுப்புகிறார்கள்.

கடிதம் காணாமல் போவதால் காரியங்கள் தடைப்படுகின்றன; தொழில் பாதிக்கிறது; நட்பு கெடுகிறது; புனிதமான இலாக்கா புகாருக்கு இடமில்லாமல் செய்ய வேண்டியது முக்கியம்.

தேவகோட்டை
11–5–66 எஸ். மீனாட்சிசுந்தரம்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



கருவிகளை அவனுக்குக் கொடுங்கள்

அவன் ஓர் இந்திய விவசாயி. கடின உழைப்பும், தொழிலில் ஈடுபாடும் அவனது இயல்புகள். நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கத் தனது முழு ஒத்துழைப்பையும் நல்க அவன் தயாராயிருக்கிறான்.

ஆயினும் கடின உழைப்பையும், தொழில் ஈடுபாட்டையும் கொண்டே அவன் உற்பத்தியைப் பெருக்குவதென்பது சாத்தியமானதா? நிச்சயமாக இவை மாத்திரமே அச்சாதனைக்குப் போதுமானவை அல்ல.

விளைச்சலைப் பெருக்க அவனுக்குத் துணை செய்யக்கூடியவை சிறந்த கருவிகளே. வளம் கொழிக்கும் பயிர்களை உருவாக்க உதவும் டிராக்டர்களும், நவீன விவசாயக் கருவிகளுமே அவனுக்குப் பெரிதும் தேவைப்படுபவை.



MF TAFE

டிராக்டர்ஸ் அண்டு பார்ம் எக்விப்மென்ட் லிமிடெட், சென்னை

இந்தியாவில் மாஸி-பர்கூஸன் டிராக்டர்கள், விவசாயக் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தியும், விற்பனையும் செய்பவர்கள்

T-18-TM